# குர்ஆனின் குரல்


جمادى الأولى – ١٤٤٦

நவம்பர் – 2024

₹25/-




மாஸ்க் ஆஃப் உமர் - ஜெருஸலம்

999® BRAND

இது வெறும் நம்பரல்ல,
நம்பிக்கை!

OUR PRODUCTS




K.A.S. ZAINULABDIN & Co.
New No. 196, Angappan Street, Chennai - 600 001.
www.999lungies.com | Toll Free No. 1800 890 6784 | 893 999 7475
KOLKATA • MUMBAI • DELHI • GUDIYATTAM • ERODE • MADURAI • NAGORE

Scan to shop your favourite Lungies

# தொடக்கம் பெற்றோர்களைக் கொண்டே!

يَسْـَٔلُوْنَكَ مَاذَا يُنْفِقُوْنَ ؕ قُلْ مَاۤ اَنْفَقْتُمْ مِّنْ خَيْرٍ فَلِلْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَابْنِ السَّبِيْلِ ؕ وَمَا تَفْعَلُوْا مِنْ خَيْرٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ ﴿۲۱۵﴾

“(நபியே! யாருக்கு) எதைச் செலவு செய்ய வேண்டும்?” என்று உம்மிடம் அவர்கள் கேட்கின்றனர்; நீர் கூறுவீராக; (நன்மையை நாடி) நல்லதிலிருந்து நீங்கள் செலவு செய்வது, பெற்றோருக்கும், உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், ஏழைகளுக்கும், வழிப்போக்கர்களுக்கும் உரியதாகும் – நன்மையிலிருந்து எதனை நீங்கள் (எவ்வளவு) செய்தாலும், நிச்சயமாக அல்லாஹ் அதனை முற்றும் அறிந்தவனாக இருக்கின்றான்.”

– அல்குர்ஆன் (2 :

அம்ருப்னுல் ஜமூஹ் (ரளி) எனும் நபித்தோழர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், “யா ரஸூலல்லாஹ்! எங்களின் பணத்திலிருந்து எவ்வளவு செலவு செய்ய வேண்டும்? எதில் செலவு செய்ய வேண்டும்?” எனக் கேட்டபோது, அதற்கு பதிலாக மேற்கூறப்பட்ட வசனம் இறங்கியது.

அதாவது உமது நலவான நன்மையான செலவுகளில் முதன்மையாக உமது பெற்றோர்களின் தேவைகளை நிறைவேற்றும் செலவாக இருக்கட்டும். பின்பு சொந்தக்காரர்களின், அநாதைகளின், ஏழைகளின், வழிப்போக்கர்களின் உதவிக்காக உமது பணம் காசுகள் செலவாகட்டும். நீர் செய்கின்ற நன்மையான விஷயங்களை அல்லாஹ் அறிபவனாக இருக்கிறான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருகை தந்த முதியவர், தன் மகனின் நிலையை முறையிட்டார். “யா ரஸூலல்லாஹ்! ஒரு காலம் கழிந்தது. நான் செல்வந்தனாக, வாலிபனாக இருந்தேன். என் மகன் என் பணத்தை செலவு செய்தான். அவனது தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்தேன். அதில் பெருமிதம் அடைந்தேன். ஆனால் இன்று நான் வயோதிகம் அடைந்து விட்டேன். ஏழையாகவும் இருக்கிறேன். என் மகன் செல்வந்தனாக இருக்கிறான். ஆனால், என்னை வஞ்சிக்

கிறான். எனக்கு செலவு செய்ய யோசிக்கிறான். கணக்கு கேட் கிறான். எதையும் நான் எடுத்து புழங்க முடியாவண்ணம் மறைத்துக் கொள்கிறான்" எனக் கூறியபோது, நபி (ஸல்) அவர்களே அழுது விட்டார்கள். அம்முதியவரின் மகனை நோக்கி, "நீயும், நீ சம்பாதிக்கின்ற பணங்காசுகளும் உன் தந்தைக்குரியதே" என்றார்கள். "பெற்றோர்களின் மூலமே உமக்கு உணவு கிடைக்கிறது. அவர்களை நடுத்தெருவில் நீ நிறுத்திவிட்டால், உன் உணவும் நடுத் தெருவிற்கு வந்துவிடும்" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள்.

பெற்றோர்களை ஆதரிப்பதன் மூலம் மூன்று சன்மானங்கள் கிடைத்திடும்.

(1) அல்லாஹ்வின் திருப்பொருத்தம்.

(2) வஜீ பணத்தில் (இரணம்) விஸ்தீரணம்.

(3) ஆயுளில் அபிவிருத்தி என்றார்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்.

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட். பரகத் அலீ பாஜில் பாகவி**


# மணமகன் தேவை/Groom Wanted

திருச்சியை பூர்வீகமாக கொண்டு, சவூதியில் குடும்பத்துடன் வசித்து வரும் மார்க்கப் பற்றுள்ள, உருது முஸ்லிம், 22 வயது, 5'2" உயரம், மாநிறம், M.Sc., (Data Science) படித்த, **மணமகளுக்கு,** மார்க்கப்பற்றுள்ள, நல்ல பணியிலுள்ள உருது **மணமகன் தேவை.**

URDU Muslim, Religious, 22 Years, 5'2" Height, Wheatish, M.Sc. (Data Science), Native Trichy, residing in Saudi Arabia with family seeks Pious, professionally qualified well settled groom.

தொடர்பு கொள்ள :

**00 966 509680175** (வாட்ஸ்ஆப்)

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...

குர்ஆனின் குரல்

குரல் : 67 ஜமாதுல் அவ்வல் 1446 ★ எதிரொலி – 11 நவம்பர் – 2024

# அயோக்கியத்தனத்தின் உச்சகட்டம்!

اَلَا لَعۡنَةُ اللّٰهِ عَلَى الظّٰلِمِيۡنَ ۟ۙ‏ (١٨)

**"அநியாயக்காரர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகும்"**

- அல்குர்ஆன் (11:18)

யார் முஸ்லிம்களுக்கு எதிராக, கொடூரமாக, மிகக் கடுமையாக செயல்படுகிறார்களோ அவர்களுக்குத்தான் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியில் உயர் பதவி அளிக்கப்படும்.

இது பாரதீய ஜனதாவின் தலைமை பீடமான ஆர்.எஸ்.எஸ்ஸின் உறுதியான கொள்கை!

அந்த வகையில் குஜராத் மாநிலத்தில் 13 ஆண்டுகள் முதல்வராக இருந்து ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை கொன்று குவித்த மோடி, பாரதீய ஜனதாவால் இந்தியாவின் பிரதமராக ஆக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவில் உயர் பதவிகளை பிடிப்பதற்காக அதன் தலைவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக கொடூரமாக செயல்பட ஆரம்பித்துள்ளனர்.

அதிலும் குறிப்பாக, உத்தரபிரதேச மாநில பாரதீய ஜனதா முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கும், அஸ்ஸாம் மாநில பாரதீய ஜனதா முதல்வர் ஹேமந்த் பிஸ்வா சர்மாவுக்கும் முஸ்லிம்களுக்கு எதிராக கொடூரமாக செயல்படுவதில் கடும் போட்டியே நடைபெற்று வருகிறது.

உத்தரபிரதேசத்தில் பள்ளிவாசல்கள், மதரஸாக்கள், முஸ்லிம் வீடுகள், முஸ்லிம் வரலாற்றுச் சின்னங்களை புல்டோசர்களை கொண்டு இடித்து தரைமட்டமாக்கி "புல்டோசர் பாபா" என்று அழைக்கப்படுகிறார் உத்தரபிரதேச முதல்வர்.

மேலும், முஸ்லிம்களுக்காக பாடுபடும் உத்தரபிரதேசத்திலுள்ள முஸ்லிம் தலைவர்களை எந்தவித காரணமுமின்றி காவல்துறை மூலம் கொலை செய்து வருகிறார் உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்!

இந்நிலையில் –

அஸ்ஸாம் முதல்வர் ஹேமந்த் பிஸ்வா சர்மாவின் சொல்லும் – செயலும் முழுக்க முழுக்க அயோக்கியத்தனத்தின் உச்சகட்டம்!

அஸ்ஸாம் மாநிலத்தில் மக்களை சமூக ரீதியாகவும், பிராந்திய ரீதியாகவும் பிளவுபடுத்தும் விதத்தில் அதிகரித்து வரும் நிகழ்வுகள் காரணமாக நிலைமைகள் மிகவும் சீர்கேடு அடைந்து கொண்டிருக்கின்றன.

அஸ்ஸாம் முதலமைச்சர் ஹேமந்த் பிஸ்வா சர்மாவும், பாரதீய ஜனதா தலைமையிலான மாநில அரசாங்கமும்தான் இத்தகைய நிலைமைகளுக்கு முற்றிலும் பொறுப்பாகும். முதலமைச்சர் ஹேமந்த் பிஸ்வா சர்மா, முஸ்லிம்களை கடித்துக் குதறும் பிரச்சாரத்தில் அனைத்து எல்கைகளையும் மீறிவிட்டார்.

முஸ்லிம்களை “அந்நியர்கள்” என்று விஷத்தை கக்கும் வார்த்தையை அவர் சொல்லாத நாளே இல்லை.

அஸ்ஸாமில் வாழும் முஸ்லிம்களை அஸ்ஸாமுக்கு அடுத்துள்ள வங்காள தேசத்திலிருந்து வந்த முஸ்லிம்கள் என்று கூறி ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை தொடர்ந்து அகதிகள் முகாம்களில் அடைத்து சித்ரவதை செய்து வருகிறார் அஸ்ஸாம் முதல்வர் ஹேமந்த் பிஸ்வா சர்மா.

முஸ்லிம்களுக்கெதிராக காட்டுமிராண்டித்தனமான குற்றச்சாட்டுகளை நாள்தோறும் அவர் கூறிக் கொண்டிருக்கிறார். அவருடைய பிளவுவாத அரசியலும், வெறித்தனமாக விஷத்தை கக்கும் பேச்சுக்களும் மக்களில் ஒரு பிரிவினர், முஸ்லிம்களை தாக்கும் சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது.

ஹேமந்த் பிஸ்வா சர்மா அரசமைப்புச் சட்டத்தின் அனைத்து விதிமுறைகளையும் மீறி, முதல்வர் பதவியை வகித்து வருகிறார்.

“அரசமைப்புச் சட்டத்தின்படியும், மற்றும் நாட்டின் அனைத்து சட்டங்களுக்கு உட்பட்டும் அனைத்து வகையான மக்களுக்கும் தயவுதாட்சண்யம் இல்லாமலும், தீய விருப்பத்

திற்கு இடங் கொடாமலும் மக்களுக்குச் செய்ய வேண்டிய உரிமைகளைச் செய்வேன்" என்று கூறி முதலமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட அஸ்ஸாம் முதல்வர் சத்தியப் பிரமாணத்தை வெட்கக்கேடான முறையில் மீறியுள்ளார்.

சட்டமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் முதலமைச்சரின் பேச்சுக்கள் இந்த பதவிப்பிரமாணத்தை மீறும் வகையில் உள்ளன. அவர் அரசியல் மற்றும் அரசமைப்புச் சட்ட நெறிமுறைகளை காலில் போட்டு மிதித்து அவமானகரமான சாதனையைப் படைத்துள்ளார்.

நாட்டிலுள்ள 25 கோடிக்கும் அதிகமான முஸ்லிம்களுக்கெதிராக அஸ்ஸாம் மாநில முதலமைச்சர் ஹேமந்த் பிஸ்வா சர்மா அனைத்து வகையான சட்டங்களையும், நடத்தை விதிகளையும் புறக்கணித்துவிட்டு, தொடர்ந்து வெறுப்புப் பேச்சுக்களை அரங்கேற்றி வருகிறார்.

இத்தகைய வன்முறையைத் தூண்டும் வகையான பேச்சுக்களையும், நடவடிக்கைகளையும் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா உள்ளிட்ட பாரதீய ஜனதா கட்சித் தலைவர்கள் இதுவரை கண்டிக்கவில்லை. அவர்கள் எப்படி இவரை கண்டிப்பார்கள்? அவர்கள் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரண மாக ஹேமந்த் பிஸ்வா சர்மாவின் நடவடிக்கைகள் இன்னும் வரம்பு மீறும் வகையில் தொடர்கின்றன.

அஸ்ஸாம் மாநிலத்தில் பெரும்பாலான மதரஸாக்களை மூடி விட்டதாகவும், மீதியுள்ளவற்றையும் மூட நடவடிக்கை எடுத்து வருவதாகவும் ஆத்திரமூட்டும் வகையில் எல்லையைத் தாண்டி பேசி வருகிறார் அஸ்ஸாம் முதல்வர்.

தங்களுக்கு டாக்டர்கள், இன்ஜினியர்கள் மட்டுமே தேவை; மவ்லவீகள் தேவையில்லை என்றும் கூறியுள்ளார்.

மவ்லவீகள் தேவையில்லை என்பதால் அஸ்ஸாமில் 600 மதரஸாக்களை தாம் மூடியுள்ளதாகவும், மீதமுள்ளவற்றையும் மூடுவேன் என்று கூறியிருப்பது முஸ்லிம்களை மட்டுமல்ல, மதச்சார்பின்மை கொள்கையில் உறுதியாக இருக்கும் மற்றவர்களையும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

சர்மா அதோடு நிற்கவில்லை. "இந்தியா முழுவதும் இன்னும் சிறிய பாபர்கள் சுற்றித் திரிகிறார்கள்; அவர்கள்

அனைவரையும் இந்த நாட்டை விட்டு தூக்கியெறிய வேண்டும்" என்றும் அவர் விஷம் கக்கியிருக்கிறார்.

"இந்தியாவிற்கு மருத்துவர்களும், பொறியாளர்களும்தான் தேவை. முல்லாக்கள் அல்ல. அதிகளவிலான மதரஸாக்களை ஏன் மூடினீர்கள்? என்று சிலர் என்னிடம் கேட்டார்கள். மீதியையும் மூடுவேன் என்று அவர்களிடம் நான் கூறி விட்டேன்."

"ஒரே நாடு, ஒரே கலாச்சாரம், ஒரே அரசியல் சாசனம் மற்றும் ஒரு தலைவரின் அடிப்படையில் இந்த நாடு இயங்கும்" என்கிறார் அஸ்ஸாம் முதல்வர்.

மதச்சார்ப்பற்ற நாட்டில் அனைத்துத் தரப்பு மக்களும் ஒற்றுமையுடனும், அமைதியுடனும் வாழ விரும்புகிறார்கள் என்பதை நன்கு அறிந்து கொண்ட சர்மா, மக்கள் மத்தியில் இருக்கும் சகோதரத்துவ பாசத்தை உடைக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

அதை அஸ்ஸாம் மாநிலத்தில் அவர் தொடர்ந்து செய்துவரும் நிலையில், தற்போது பிற மாநிலங்களிலும் செய்யும் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளார்.

உச்சநீதிமன்றம் மற்றும் பிற சமூக அமைப்புகள் அஸ்ஸாம் முதலமைச்சரின் செயல்பாடுகளைக் கடுமையாகக் கண்டித்து விமர்சனம் செய்துவரும் நிலையில் கூட, அவர் தனது செயல் பாடுகளில் மாற்றம் கொண்டு வரவில்லை. மாறாக இன்னும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறார்.

அஸ்ஸாம் முதல்வரின் போக்கு இந்திய திருநாட்டிற்கு கேடு விளைவிப்பதாகும்!

அஸ்ஸாம் முதல்வரின் சொல், செயல் அனைத்துமே அயோக்கியத்தனத்தின் உச்சகட்டம்!

இவர் போன்றவர்களின் வாயை அடைக்க நினைக்கும் போது, அல்லாஹ்வின் அந்த திருவசனமே நினைவுக்கு வருகிறது.

**"அநியாயம் செய்தவர்கள் தாங்கள் எந்த மீளும் தலங்களுக்கு திரும்பிச் செல்வார்கள் என்பதை விரைவில் அறிந்து கொள்வார்கள்."** - அல்குர்ஆன் (26 : 227)

☛ ஏலச்சீட்டு ஹலாலா? ஏலம் அதிகம்கேட்பவர்கேட்கும் தொகையிலிருந்து சீட்டு நடத்துபவர் தன்னுடைய கமிஷன்4% அல்லது5% கழித்துக் கொண்டுமீதியுள்ள தொகையை ஏலச்சீட்டில் இணைந்துள்ள மற்றவர்களுக்கு கஸர் என்ற பெயரில் இலாபமாக கொடுப்பார். இது கூடுமா?

**அரவக்குறிச்சியிலிருந்து**
**முஜீபுர் ரஹ்மான்**

✍ தாங்கள் கூறும் இந்த ஏலச் சீட்டு முறை, மார்க்கத்திற்கு முரணானதாக இருக்கிறது. ஷரீஅத் ரீதியாக இதில் வட்டியினுடைய வாயில்கள் திறக்கப் படுவதால் இதுபோன்ற ஏல முறைகளை மார்க்கம் நிச்சயம் அனுமதிக்காது.

☛ எங்களூரில் வழமையாக குர்பானி கொடுத்தபின்பு கூட்டுக் குர்பானிகளுடைய இறைச்சிகளை ஒவ்வொரு பங்குதாரருக்கும் குறிப்பிட்ட அளவு பங்கிட்டு கொடுத்துவருகிறோம். மீதியுள்ள இறைச்சிகளை தேவையுடைய ஏழை மக்களுக்கு விநியோகம் செய்து விடுகிறோம். ஆனால், கூட்டுக் குர்பானி இறைச்சியை கொஞ்சமும் கூடுதல் - குறைவுகள் இல்லாமல் முழுக்க சமமானதாக மட்டுமே பிரித்துக் கொடுக்க வேண்டும் என்றும், அதில் கூடுதல் - குறைவுகள் செய்யக் கூடாது என்றும், சமீபத்தில் எங்கள் ஊரில் பேசிய ஆலிம் பெருந்தகை ஒருவர் கூறிச் சென்றார்கள். எனவே, ஷரீஅத் ரீதியாக இதன் சட்டம் என்ன?

**பெரிய வடகரையிலிருந்து**
**ஹாஜா பஷீரா**

✍ ஷரீஅத் ரீதியாக கூட்டுக் குர்பானி இறைச்சியை ஏழு நபர்களுக்கு கொஞ்சமும் கூடுதல் - குறைவுகள் இல்லாமல் சரி சமமானதாக மட்டுமே பிரித்துக் கொடுக்க வேண்டும். ஆனால், இறைச்சி அல்லாத ஈரல், குடல், தலை போன்ற இதர பாகங்களும் அந்த இறைச்சியுடன் கலந்து விட்டால் அதில் கூடுதல் - குறைவு செய்து, அவரவர்களுக்குத் தேவையான பங்கை மட்டும் கொடுத்து விட்டு மீதியிருக்கக் கூடியவற்றை அந்த உரிமையாளர்களின் அனுமதிப்படி அவர்கள் விரும்பியவர்களுக்கு கொடுத்து விட வேண்டும். இதை மார்க்கம் அனுமதிக்கிறது. எனவே, இறைச்சி மட்டும் இருக்குமானால் அதில் கூடுதல்

# பதில்கள்

மவ்லானா மவ்லவீ ஹாஃபிழ் காரி அல்ஹாஜ் முஃப்தீ
**மு. முஹம்மது இஸ்மாயீல்** காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

- குறைவுகள் செய்வதற்கு மார்க்கம் அனுமதிக்கவில்லை.

☛ முஸ்லிம்கள் ஆல்கஹால் கலக்கப்பட்டுள்ள வாசனை திரவியங்களை உபயோகப் படுத்தலாமா?

**பணங்காட்டூரிலிருந்து**
**முஹம்மது யூசுஃப்**

✍ ஆல்கஹால் ஹராம் என்பது உங்களுக்குத் தெரியாதா? வேண்டாமே இந்த விபரீத விளையாட்டு! ஆல்கஹால் கலக்கப்படாத ஹலாலான - தூய்மையானவாசனைதிரவியங்கள் வேறு ஏதாவது கிடைக்க லாமபோய்விட்டது? ஆல்கஹால் கலக்கப்பட்ட அந்த வாசனை திரவியங்கள் மட்டும் தான் நறுமணம்கமழ்கின்றது. மற்றதிலெல்லாம் அந்தளவுக்கு நறுமணம் வெளிப்படுவதில்லை என்று நாம்நினைத்து, ஷரீ அத்தைமீறி, ஹராமான ஒன்றை புகுத்தி உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்ற வாசனை திரவியங்கள் நம் மீது படுமேயானால், நம்முடைய வணக்க, வழிபாடுகளின் நிலைகள் அல்லாஹ்விடத்தில் எப்படி ஏற்றுக்கொள்ளப்படும்" என்பதை கொஞ்சம் யோசிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். ஆல்கஹாலை மார்க்கம் 'வேண்டாம்' என்று சொன்னதற்குப் பின்னாலும், அதிலேயே நம் சிந்தனைகளை செலுத்துவது முஸ்லிம்களாகிய நமக்கு அல்லாஹ்வின் ரஹ்மத்திற்குப் பதிலாக அவனது கோபத்தைத் தான் பெற்றுத் தரும் என்பதை நாம் மறந்து விடலாகாது. கவனம்! கவனம்!!

☛ மனைவியின் மாதாந்திர வழமையான நாட்கள் முடிந்து விட்ட நிலையில், அவள் குளித்துக் கொள்வதற்கு முன்பு கணவரோடு சேர்வதற்கு மார்க்கம் அனுமதிக்கிறதா? அல்லது அவள் குளித்துமுழுமையாகத் தூய்மை பெற்றதற்குப் பின்புதான் சேர வேண்டுமா?

**கள்ளக்குறிச்சியிலிருந்து**
**காசிம்**

✍ ஹைளுடைய அதிகபட்ச நாட்கள் பத்து நாட்களாகும். அந்த பத்து நாட்கள் முழுமையடைந்து விட்டால், அவள் குளிப்பதற்கு முன்பு அவளுடன் சேர்வதற்கு மார்க்கம் அனுமதிக்கிறது.

வழமையான 6 அல்லது 7 அல்லது 8 போன்ற நாட்களில் முடிந்திருந்தால், ஹைளுடைய எந்த அடையாளமும் வெளிப்படாமல் ஒரு நேரத் தொழுகையுடைய நேரத்தை அவள் கடந்து விட்டால் அதற்குப்பின்பு அவள் குளிப்பதற்கு முன்பு சேர்ந்து கொள்ளலாம்.

இதல்லாமல், சந்தேகத்துடைய நிலை இருக்குமானால், அல்லது அவளது வழமையான நாட்கள் முழுமையாக முடியாவிட்டால் அவளுடன்சேர்வது பெரும்ஹராமான குற்றங்களில் ஒன்றாகி விடும். அந்த மனிதன் தான்செய்தது ஒரு பெரும் ஹராம்

என்பதை நினைத்து, அல்லாஹ்விடத்தில் நிச்சயம் வருந்தி பாவ மன்னிப்புத் தேட வேண்டும்.

☛ உள் பள்ளியில் தொழுவதற்கு இடமிருக்க, முதியவர்களும், முடியாதவர்களும் வெளிப் பள்ளியிலேயே நாற்காலிகள் போட்டு அமர்ந்து தொழுவதற்கு மார்க்கம் அனுமதிக்கிறதா? அல்லது உள்பள்ளியிலேயே ஸஃப்புக்கு ஒருவர் என்ற வகையில் சேர்களை போட்டு அமர்ந்து தொழுவதற்கு அனுமதிக்கலாமா?

**உத்தமபாளையத்திலிருந்து**
**பீர் முஹம்மது**

✍ உள் பள்ளியில் தொழுவதற்கு இடமிருக்க, வெளிப் பள்ளியில் தொழுவதற்கு அனுமதி கிடையாது.

சில சமயங்களில் உள் பள்ளியில் ஏசி பொருத்தப்பட்டிருப்பதால் அங்கு தொழும்போது தன் உடல் நிலை மோசமாகி விடும் என்று பயப்படுதல் போன்ற நிர்ப்பந்தமான சூழ்நிலை ஏதாவது ஏற்பட்டால் இரண்டு ஸஃப்புகளின் அளவு மட்டும் இடைவெளி விடுவதற்கு மார்க்கம் அனுமதிக்கிறது. தகுந்த காரணங்களின்றி, அவசியமில்லாமல் வெளிப் பள்ளியில் நின்று இமாமை பின்பற்றி தொழுவது மக்ரூஹ் தஹ்ரீமாகும்.

அவசியத்திற்கு தகுந்தவாறு நாற்காலிகளை பயன்படுத்திக் கொள்வது கூடும். ஒவ்வொரு ஸஃப்பினுடைய ஓரத்தில் மட்டும் மற்ற தொழுகையாளிகளுக்கு இடையூறு இல்லாத வகையில் அதைப் போட்டுக் கொண்டு தொழுகலாம். நாற்காலியை காரணம் காட்டி, முடியாத அத்துணை பேர்களையும் ஒட்டு மொத்தமாக ஓரங்கட்டுவது அல்லது அவர்களை மொத்தமாக வெளிப்பள்ளிக்கு அனுப்பி விடுவதும் நல்லதல்ல.

☛ நாங்கள் சேலத்திலிருந்து டெல்லிக்கு இரயில் மூலம் பயணம் செய்கிறோம். சுமார் மூன்று நாட்கள் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, அப்படி தூரமான பயணங்கள் மேற்கொள்ளும்போது பயணத்தின் இடையில் நாம் சிரமப்பட்டு தொழுக வேண்டும் என்று அவசியமில்லை. மாறாக, நாம் டெல்லி சென்று இறங்கியதற்கு பின்பு அந்த மூன்று நாட்களுடைய தொழுகைகளையும் களாவாக தொழுது கொள்ளலாம். அதே போன்று அங்கிருந்து புறப்பட்டு நம் ஊருக்கு வந்து சேரும்வரையும் இடைபட்ட நேரங்களில் நமக்கு தொழுக வேண்டியது அவசியம் கிடையாது. இங்கு வந்து சேர்ந்ததற்கு பின்பு அனைத்து தொழுகைகளையும் களாவாக தொழுது கொள்ளலாம் என்று கூறுகிறார். மார்க்கம் என்ன சொல்கிறது?

**சேலத்திலிருந்து**
**இலியாஸ்**

✍ அஸ்தஃபிருல்லாஹ்! தொழுகைஈமானின் அடிப்படை

தூணாகும்; முஸ்லிம் என்பதை உறுதிப்படுத்தும் அடையாளமாகும். தொழுகையை வேண்டுமென்றே விட்டவன், கபுருக்குள் சென்றவுடன் விஷப் பாம்புகளால் கியாமத் நாள் வரை வேதனை செய்யப்படுவான் என்று நபி (ஸல்) அவர்கள் நம்மை எச்சரிக்கை செய்துள்ளதாக ஸஹீஹான ஹதீஸ்களில் காணப்படுகிறது.

இப்படியெல்லாம் இருக்கும் போதுசாதாரண ஒரு பயணத்தை காரணமாகக்கூறி, தொழுகையை இலேசாகக்கருதி, விட்டுவிடுவது எந்த வகையில் சரியாகும்? சேலத்திலிருந்து புறப்பட்டு, டெல்லி சென்று இறங்கி, விடுபட்டுள்ள அத்துணை தொழுகைகளையும் களாச் செய்யும்வரை நாம் உயிரோடு இந்த உலகத்தில் இருப்போம் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? சுமார் பத்து நேரத் தொழுகைகளை விட்ட நிலையில், நாம் மரணித்து விட்டால் கபுரில் நமக்கு உதவுவதற்கு யார்தான் வருவார்? எவ்வளவு பெரிய ஆபத்தானகட்டத்திலும் தொழுகையை விடுவதற்கு மார்க்கம் அனுமதிக்கவில்லை. சொல்லப்போனால் நடுக்கடலில்புயலால்சூழப்பட்டு, தத்தளிக்கக்கூடிய நேரம் ஒன்று வந்தாலும் அந்த நிலையிலும் தொழுகையை விடுவதற்கு மார்க்கம் அனுமதிக்கவில்லை. உடல் நலம் குன்றி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, எழுந்து ஒளு செய்வதற்கோ நின்று அல்லது அமர்ந்து தொழுவதற்கோ முடியாத ஒரு நிலை ஏற்பட்டாலும் அப்பொழுதும் படுத்துக் கொண்டாவது தொழுகையின் கடமையை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்றுதான் மார்க்கம் கட்டாயப்படுத்துகிறது.

தொழுகையில் மட்டுமே முஸ்லிம்களின் முழுமையான வெற்றி இருக்கிறது. தொழுதால் மட்டுமே முஸ்லிம் சுவனத்தில் நுழையமுடியும். எந்தவொரு ஆபத்து ஏற்பட்டாலும் அல்லது அந்த ஆபத்திற்கான அறிகுறிகள் தென்பட்டாலும் நபி (ஸல்) அவர்கள் தொழுகைக்காக விரைந்து விடுவார்கள் என்று ஹதீஸ் கிதாபுகளில் பார்க்க முடிகிறது. ஆனால், நாமோ சந்தோஷங்கள் ஏற்படும்போது முற்றிலுமாக அல்லாஹ்வையும், அவனது தொழுகை போன்ற கடமைகளையும் மறந்து விடுகிறோம். ஃபர்ளான தொழுகைகளை கூட திருமணம் போன்ற நிகழ்வுகளில் அந்த வீட்டார்கள் சர்வ சாதாரணமாக விட்டு விடுவதை நாம் பார்க்கிறோம்.

ஏதாவது ஒரு துன்பம் ஏற்பட்டு விட்டால், ஒரு சிலர், அல்லாஹ்வின் பக்கம் திரும்புகின்றனர். இன்னும் சிலரோ, அப்பொழுது அழுது புலம்புவதையும், மனிதர்களிடத்தில் ஆறுதல் தேடுவதையும் தங்களின் வேகத்தை வெளிப்படுத்துகிறார்களே தவிர, இரண்டு

# உலகம்.... அது பற்றி உங்களுக்குத் தெரியுமா?

وقال رجل لعلي بن أبي طالب ﷺ وهو في خطبة له : يا أمير المؤمنين ، صِفْ لنا الدنيا . فقال : ما أصِفُ من دارٍ أوّلها عَنَاءٌ ، وآخِرُها فَنَاءٌ في حلالها حِسابٌ ، وفي حرامها عقاب ، مَنْ صَحَّ فيها أَمِنَ ، ومَنْ مَرِضَ فيها نَدِمَ ، ومَن استغنى فيها فُتِنَ ، ومَنِ افتقَرَ فيها حَزِنَ .

“ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் பிரசங்கம் செய்து கொண்டிருந்தபோது, “உலகத்தைப் பற்றி எங்களுக்குச் சொல்லுங்கள்” என்று ஒரு மனிதர் கேட்டார். அதற்கு அவர்கள், “இந்த உலகத்தைப் பற்றி நான் என்ன சொல்வதற்கு! அதன் ஆரம்பமே பிரச்சனைதான். அதன் முடிவு அழிவாகும். அதனுடைய ஹலாலானவைகளின் விஷயத்தில் நாளை மறுமையில் கேள்வி கணக்குகள் கேட்கப்படும். அதனுடைய ஹராமானவற்றின் விஷயத்தில் தண்டனை கொடுக்கப்படும். அந்த உலகத்தில் ஆரோக்கியமாக வாழ்ந்தவர் நிம்மதி பெற்றார். நோயாளியாக வாழ்ந்தவர் கைசேதப்பட்டார். செல்வம் கொடுக்கப்பட்டவர் சோதனைக்குள்ளாக்கப்பட்டார். வறுமையில் வாழ்ந்தவர் கவலையுற்றார்” என்று கூறினார்கள்.

(நூல் : இத்திஹாதுஸ் ஸஆதத்தில் முத்தகீன்)

---

**உலகத்தைப் பார்த்து ஏமாந்தவர்களுக்கு, ஸஹாபாக்களின் அரிய உபதேசங்களைக் கொண்டு, நல் வழிகாட்டிக் கொண்டிருக்கும் குர்ஆனின் குரல் இன்னும் நிறைய உபதேசங்களை எடுத்துக் கூறி சிறப்படைய வாழ்த்துகிறோம்.**

# செய்யது சகோதரர்கள்

## நாகூர்.

ரக்அத்துகள் தொழுது அல்லாஹ் விடத்தில் துஆ செய்தால் அல்லாஹ் நம்மை திரும்பிப் பார்ப்பான் என்ற சிந்தனை நம் சமுதாய மக்களிடமிருந்து வெகு தூரம் சென்று விட்டது.

சில சமயங்களில், பள்ளிவாசலுக்குச் செல்ல முடியவில்லை என்ற காரணத்தினால் தொழுகையை முழுமையாக விட்டுவிடக்கூடிய நிலைகள் பரவலாகக் காணப்படுகின்றன.

எனவே, நமது பயணங்களும், நமது ஈருலகக் காரியங்களும், தொழில்களும், குடும்பங்களும், நம் அலுவல்களும் சீராக இயங்க வேண்டுமானால், தொழுகை மட்டுமேசரியானவழியாகும். அது இல்லாமல் ஆயிரம்வழிகளை நாம் தேடினாலும் நமக்கு இம்மை மறுமை இரண்டும், நஷ்டமும் – நாசமும் நிறைந்ததாகவே ஆகி விடும். அல்லாஹ் பாதுகாப்பானாக!

☛ வீட்டில் வயதான பெரியவர்கள், தொழும்போது அல்லது அவர்கள் வணக்க, வழிபாடுகளில் ஈடுபட்டிருக்கும்போது அல்லது அவர்கள் ஓய்வெடுக்கும்போது நம் வீட்டு இளம் பிள்ளைகள் சப்தமாக டிவி. பார்ப்பதும், அவர்களுக்கு இடையூறாக சப்தமிட்டு பேசி சிரித்துக் கொண்டிருப்பதும் பல குடும்பங்களில் நடந்து வருகின்றனவே. மார்க்கம் என்ன சொல்கிறது?

**விழுப்புரத்திலிருந்து**
**அன்வர்தீன்**

✍ சிறுவர்கள் மீது இரக்கங் காட்டாதவர்களும், பெரியவர்களை கண்ணியப்படுத்தாதவர்களும் நம்மைச் சார்ந்தவர்களல்ல என்ற நபி (ஸல்) அவர்களின் எச்சரிக்கை நம் பிள்ளைகளின் கண்களிலும், காதுகளிலும் போடப்படவேண்டிய ஒன்றாகும். அந்த பெரியவர்கள் தூங்கிக் கொண்டிருந்தாலும் சரி அல்லது உலகம் சார்ந்த காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும் சரி அல்லது மார்க்கம் சார்ந்த காரியங்களில் ஈடுபட்டிருந்தாலும்சரி. அவர்கள் நமக்குள் இருக்கும்போது நம் நிலைகளை நாம் கொஞ்சம் அடக்கி வைத்து பழகிக் கொள்ள வேண்டும். அப்படியில்லையானால், இவ்வுலகில் நாம் வயது முதிர்ந்தவர்களாக ஆகும்போது நம்முடைய சந்ததிகள் நம்மை மதிக்காத ஒரு சூழ்நிலையை நம் கண்களால் நாம் பார்க்க வேண்டியநிலைஏற்படலாம். அத்துடன், நபி (ஸல்) அவர்கள் மேற் கூறிய எச்சரிக்கைக்கும் நாம் ஆளாகி விடலாம். நஊதுபில்லாஹ்!

☛ புனித திருகுர்ஆனில் மற்ற எல்லா நபிமார்களை விடவும் ஹள்ரத் மூஸா (அலை) அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பல்வேறு இடங்களில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ளதே! காரணம் என்ன?

**நாகையிலிருந்து**
**ஜே.எம்.யூசுஃப்**

✍ மற்ற நபிமார்களை விட, ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர்

கள் ஆக உயர்ந்த ஈமானுடைய தரத்தை அடைந்திருந்தார்கள். அதன் காரணமாகவே, எந்தத் துணையும் இல்லாமல், யார் மூல மாகவும் இல்லாமல் அல்லாஹ் விடத்தில் நேரடியாக பேசும் பாக்கியத்தைப் பெற்றார்கள்.

அவ்வாறே, ஒவ்வொரு நபிமார் களுக்கும் எதிரிகள் இருந்தார்கள். அந்த அனைத்து எதிரிகளுக்கும் மிக உச்சகட்ட எதிரியாக ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர் களுடைய காலத்தில் வாழ்ந்த ஃபிர்அவ்ன் செயல்பட்டு வந்தான். இறை நிராகரிப்பின் உச்சத்தை அவன் அடைந்து விட்டான். அதன் காரணமாகவே, மற்ற நபிமார்களின் எதிரிகளின் நிலைகளைத் தாண்டி, தானே இந்த உலகத்தைப் படைத்த இறைவன் என்றும், தனக்குக் கட்டுப்பட்டுதான் இந்த நதிகளெல்லாம் ஓடுகின்றன என்றும் மக்களை பயமுறுத்தி அவர்களை தனக்கு பணிய வைத்துக் கொண்டிருந்தான். இந்த ஈமான் - குஃப்ரு இந்த இரண்டு நிலைகளிலும் ஹள்ரத் நபி மூஸா (அலை) அவர்களும், அவர்களின் எதிரி ஃபிர்அவ்னும் சொல்ல முடியாத அளவுக்கு உச்சத்தை அடைந்திருந்ததால் கியாமத் நாள் வரை அவர்களைப் பற்றி இந்த உலகம் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுமென் பதற்காக அல்லாஹ் மற்ற நபிமார்களை விட, அவர்களின் வரலாற்று நிகழ்வுகளை மட்டும் திரும்பத் திரும்ப கூறுகிறான்.

☛ நான் கடந்த சில ஆண்டு களுக்கு முன்பு, காலி மனை ஒன்றை வாங்கி வைத்துள்ளேன். பிற்காலத்தில் அதை விற்றால் அது நமக்கு ஏதாவது ஒரு வகை யில் உதவியாக இருக்கும் என்று நினைத்தேன். மேலும், நான் சொந்த வீட்டிலேயே வசித்து வருகிறேன். இந்த இரண்டிற்கும் சேர்த்து என் மீது ஏதாவது ஜகாத் கடமையாகுமா?

**புதுக்கோட்டையிலிருந்து**
**அக்பர் அலி**

✍ தாங்கள் வைத்திருக்கின்ற மேற்படி இரண்டு சொத்துகளினா லும் உங்களின் மீது ஜகாத் கடமையாகாது.

☛ சமீப காலமாக நம் சகோதரர்கள், பிறப்பு - இறப்பு போன்ற எந்த நிகழ்வாக இருந் தாலும் அவர்களின் உருவப் படங்களைப் போட்டு, அவர்கள் ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் அதன் மூலம் மக்களிடத்தில் அளவுக்கதிகமான ஆடம்பரமான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறார்கள். இதுபற்றி தங்களின் பதில் என்ன?

**விழுப்புரத்திலிருந்து**
**அன்வர்ஜீ**

✍ பொதுவாக, போட்டோ, வீடியோ, உருவப்படங்கள் போன்றவற்றின் விஷயத்தில் நம் மார்க்கம் 1400 ஆண்டுகளுக்கு

முன்பு கூறிய அதே தீர்ப்புதான் இன்று வரையும் நீடிக்கிறது. இன்ஷா அல்லாஹ் கியாமத் நாள் வரை அந்தத் தீர்ப்பில் எந்த மாற்றமும் ஏற்படப் போவதில்லை. நமது மார்க்க அறிஞர்களும், மதரஸாக்களும் இதற்கு மாற்றமான எந்தவொரு தீர்ப்பையும் இன்றுவரை வழங்கவுமில்லை. இனி வழங்கப்போவதுமில்லை.

எனவே, அவசியமின்றி, மார்க்கத்தின் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு, நாமாக உலகத்தின் வழிகளை உருவாக்கிக் கொண்டால் அதற்கு மார்க்கம் பொறுப்பாகாது. போட்டோக்கள் போட்டு போஸ்டர்கள் ஒட்டப்படுவது முற்றிலும் ஹராமான காரியம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதை இலேசாக நினைத்து இதிலென்ன குற்றம் இருக்கிறது என்று நினைப்பவர்கள், **மார்க்கத்தை மதிக்கவில்லை** என்பதை தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

நம் சமுதாயப் பணங்கள் இப்படித்தான் நிறைய ஆடம்பர காரியங்களில் வீணடிக்கப்படுவதை யாரும் மறுக்க முடியாது. அல்லாஹ்வுக்கு மாற்றமான வழிகளில் செயல்படும் நம்மவர்களுக்கு அல்லாஹ்வின் உதவி எப்படி கிடைக்கும்? ஆடம்பரத்துடன் நடைபெறக்கூடிய திருமணம் போன்ற நிகழ்வுகள் எப்படி வெற்றி பெறும்?

இனியாவது எதிரிகளின் சூழ்நிலைகளை தோற்கடிப்பதற்காக அல்லாஹ், ரஸூலின் கட்டளைகளை மதித்து செயலாற்றுவோம். மார்க்கத்தை கவனமாக பின்பற்றுவோம்.

☛ நோன்பு காலங்களில் ஜகாத்திற்காக எடுத்து வைத்த பணத்தில் கொஞ்சம் மீதி இருக்கிறது. அதை என்ன செய்வது?

**திண்டுக்கலிலிருந்து**
**ஏ.எஸ். முஹம்மது**

✍ அடுத்தடுத்து ஜகாத் கொடுக்க வேண்டிய நிலைகள் ஏற்பட்டால் அதிலிருந்து கொடுத்து மிக விரைவாக அந்த ஜகாத் பணத்தை காலி செய்து விட வேண்டும். ரமளானில் எடுத்து வைப்பது அந்த ரமளானில் கொடுப்பதற்காக மட்டுமே அல்ல. மற்ற காலங்களிலும் தேவையுடையவர்கள் வரும் போது அவர்களுக்கும் அதிலிருந்து கொடுத்துக் கொள்வதை மார்க்கம் அனுமதிக்கிறது.

☛ நமது மார்க்கத்தில் வளைகாப்பு, சீர் சடங்குகள் உண்டா?

**ஜம்பையிலிருந்து**
**ஆதில் அஹமது**

✍ அப்படி எதுவும் நம் மார்க்கத்தில் சொல்லப்படவில்லை. அப்படியொரு நிகழ்வை ஏற்படுத்தி அந்த காரணத்தை வைத்தாவது அந்தப் பெண் பிள்ளையை ஓரிரு மாதங்கள் அவளின் தாய் வீட்டிற்கு அனுப்பி வைத்தால் அவளும் கொஞ்சம் சந்தோஷத்தை அனுபவிப்பாளே என்ற காரணத்

87 வருட பாரம்பரியம்

ஆடைகளும் கலாச்சாரமும்

நான்கு தலைமுறைகளாய்



மனசெல்லாம் மஹாராஜா... ®

மஹாராஜா

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர் : காந்திஜி ரோடு

தஞ்சாவூர் : நியூ ஹவுசிங் யூனிட்

இராமநாதபுரம்

தாலோ என்னவோ நம் முன்னோர்கள் அப்படியொரு நிகழ்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏனெனில், பல குடும்பங்களில் புகுந்து விட்ட மணப்பெண்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி அவர்கள் எங்கும் சொல்ல முடியாமல் சிக்கித் தவித்து வரக்கூடிய வேளையில், அவர்கள் தாய் வீட்டிற்குச் சென்று கொஞ்சம் ரிலாக்ஸாகிக் கொண்டால் நன்றாக இருக்குமே!

ஆனால், இந்த நிகழ்வு நாளுக்கு நாள் வளர்ந்து, இன்று அதற்காக பெரிய திருமண மண்டபங்களைப்பிடித்து, திருமணத்திற்கு செலவு செய்வதைப் போன்று, அதற்கும் பெரிய செலவுகள் செய்யப்படுகின்றன. அவசியமின்றி செய்யப்படுகின்ற இது போன்ற வீண் விரயமான செலவுகளை மார்க்கம் முற்றிலுமாக தடை செய்கிறது. சந்தோஷத்திற்காக சில பெரியவர்களை வைத்து, துஆ செய்து அந்த சீமந்தப் பெண்ணை தாய் வீட்டிற்கு அனுப்பிவைப்பதுதவறல்ல. அதற்காக நீண்ட சிரமங்கள் எடுப்பதும், இஸ்ராஃபான செலவுகள் செய்வதும் மார்க்கத்தில் அனுமதிக்கப் படாத காரியங்களாகும்.

☛ இரவு உறங்கி விழிக்கும் போது, நம் ஆடையில் ஈரமானது போல் இருந்தால் குளிப்பு கடமையாகுமா?

**தாராபுரத்திலிருந்து**
**ஜாஹீர் உசேன்**

✍ ஆடையில் ஈரம் தென்பட்டு, அதுவிந்து துளியாக இருக்குமோ என்று உறுதியானால் அல்லது சந்தேகப்பட்டால் குளித்து சுத்தமாகிக் கொள்வது கடமையாகும். அப்படியின்றி, சிறுநீர் துளிகளாக அல்லது வேறு அசுத்தங்களாக இருக்குமானால் உடலிலும், ஆடையிலும் பட்டிருக்கக் கூடிய இடங்களை மட்டும் முழுமையாக சுத்தம் செய்து கொள்வது மிக மிக அவசியமாகும்.

☛ இமாம் ஜமாஅத் நடக்கும் போது இடமில்லாத காரணத்தினால் வெளிப்பள்ளியில் தொழுபவர்களுக்கு மலக்குகளின் ஆமீன் கிடைக்குமா?

**உத்தமபாளையத்திலிருந்து**
**எஸ்.சையது அலி**

✍ கண்டிப்பாக கிடைக்கும்.

☛ மிஸ்வாக் செய்வதின் விளக்கத்தை அறிந்து கொள்ள நினைக்கிறோம். விபரம் தேவை.

**தஞ்சையிலிருந்து**
**ஹசன் பானு**

✍ குர்ஆனின் குரலில் 2024 மே மாதம் முதல் தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கக்கூடிய "மிஸ்வாக்" தொடர் கட்டுரையை ஆரம்பம் முதல் படித்து பாருங்கள். இன்ஷா அல்லாஹ் விளக்கம் பெறுவீர்கள். அதை படித்து விட்டு அமல் செய்யுங்கள். அதன் நன்மையில் அல்லாஹ் எங்களுக்கும், அந்த கட்டுரையை எழுதி வெளியிட்ட ஆசிரியர் அவர்களுக்கும் பங்குகளை கொடுப்பான்.

# ஒருவன்

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

قُلْ هُوَ اللّٰهُ أَحَدٌ ○ اللّٰهُ الصَّمَدُ ○ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ○ وَلَمْ يَكُنْ لَهُ كُفُوًا أَحَدٌ ○

“[நபியே மனிதர்களை நோக்கி,] நீங்கள் கூறுங்கள்: அவன்தான் அல்லாஹ் [அவன்] தனித்தவன். [அந்த] அல்லாஹ் [எவருடைய] தேவையுமற்றவன். [அனைத்தும் அவன் அருளையே எதிர்பார்த்திருக்கின்றன] அவன் [எவரையும்] பெறவுமில்லை; [எவராலும்] பெறப்படவுமில்லை. [ஆகவே, அவனுக்குத் தகப்பனுமில்லை சந்ததியுமில்லை.] அவனுக்கு நிகர் யாருமில்லை.” - அல்குர்ஆன் (112 : 1, 2, 3, 4)

திருகுர்ஆனின் 112வது அத்தியாயமான “அல் இக்லாஸ்” அத்தியாயம் சிறியதாக இருந்தாலும் ஏகத்துவ இறைக் கொள்கையை உள்ளடக்கியதாக அது இருப்பதால் அதற்கு ஏராளமான சிறப்புக்கள் உண்டு.

மார்க்க அறிஞர்கள் கூறுகின்றனர். “இக்லாஸ்” என்றால் “தூய்மையாக்குதல்” என்று பொருள். இந்த அத்தியாயம் ஓரிறைக் கொள்கையை அதற்கே உரிய தூய வடிவில் எடுத்துரைப்பதால் இக்லாஸ் (தூய்மையாக்குதல்) என்று இதற்கு பெயர் வந்தது.

## அருளப் பெற்ற காரணம்

ஹள்ரத் உபை பின் கஅப் (ரளி) அவர்கள் கூறியதாவது: “நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இணைவைப்பாளர்கள் வந்து, “உம்முடைய இறைவனின் பரம்பரையை (அவனுடைய தந்தை யார்? மகன் யார்?” என்பதைப் பற்றி) எங்களிடம்எடுத்துக்கூறுங்கள்” என்று கோரினர். அப்போது தான் அல்லாஹ் 112வது (அல்இக்லாஸ்) அத்தியாயத்தை இறக்கியருளினான்.”

(நூல் : திர்மிதீ - 3277)

அன்றைய மக்கள் பல் வேறு சிலைகளையும், ஜின்களையும் இறைவனாக எண்ணி வழிபட்டுவந்தனர். மனிதர்களுக்கும், ஜின்களுக்கும் மனைவி மக்கள் இருப்பதைப் போன்று இறைவனுக்கும் அவ்வாறு இருக்கும் என்று எண்ணினர்.

அதனால் அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, “நீர் கூறுகின்ற இறைவனின் பரம்பரையை எடுத்துரைப்பீராக” என்றனர். அப்போது தான் படைத்தவன், படைப்புக்

களைப் போன்றவன் அல்லன் என்றுரைக்கும் விதமாக அமையப்பெற்ற அல் இக்லாஸ் அத்தியாயம் அருளப்பெற்றது.

## நேசித்தல்

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது : "அன்சாரிகளில் (குல்ஸூம் பின் ஹித்ம் எனும்) ஒருவர் 'குபா' பள்ளிவாசலில் மக்களுக்குத் தலைமை தாங்கித் தொழ வைப்பவராக (இமாமாக) இருந்தார். (அல் ஃபாத்திஹா அத்தியாயத்திற்குப் பின்) ஓதப்படும் அத்தியாயத்தை ஓதி மக்களுக்கு அவர் தொழ வைக்க ஆரம்பிக்கும் போதெல்லாம், அந்த அத்தியாயத்தை ஆரம்பிப்பதற்கு முன் 'குல் ஹுவல்லாஹு அஹத்' (என்று தொடங்கும் 112வது) அத்தியாயத்தைஓதியே ஆரம்பிப்பார்' (அதாவது 'குல் ஹுவல்லாஹு அஹத்' அத்தியாயத்தை ஓதிய) பிறகு தான் மற்றோர் அத்தியாயத்தை ஓதுவார். ஒவ்வொரு ரக்அத்திலும் அவர் இவ்வாறு செய்வது வழக்கம். இது குறித்து அவரிடம் அவருடைய தோழர்கள், "நீங்கள் இந்த (குல் ஹுவல்லாஹு அஹத்) அத்தியாயத்தை ஓத ஆரம்பிக்கிறீர்கள். பிறகு அது போதாதென்று மற்றோர் அத்தியாயத்தையும் ஓதுகிறீர்களே! இந்த அத்தியாயத்தை மட்டும் ஓதுங்கள்! அல்லது இதை விட்டுவிட்டு மற்றோர் அத்தியாயத்தை மட்டும் ஓதுங்கள் (இரண்டையும் ஓதாதீர்கள்)" என்று கூறினார்கள். அதற்கு அவர், "நான் இ(ந்த அத்தியாயத்)தை ஓதுவதைக் கைவிடமாட்டேன். நீங்கள் விரும்பினால் இவ்வாறு (ஓதித் தலைமை தாங்கித் தொழ வைக்கும் பணியைச்) செய்கிறேன். (இதை) நீங்கள் வெறுத்தால் நான் உங்களுக்கு(த் தொழ வைப்பதை) விட்டு விடுவேன் (உங்களுக்குத் தொழ வைக்க மாட்டேன்)" என்றார்.

அம்மக்கள் அவரைத் தங்களில் சிறந்தவராகக் கருதிக் கொண்டிருந்தனர். அவரல்லாத மற்றொருவர் தங்களுக்குத் தொழ வைப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஆகவே, பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள், தங்களிடம் வந்த நேரத்தில் இந்தச் செய்தியை அவர்களிடம் தெரிவித்தனர். அப்போது நபி (ஸல்) அவர்கள் (அந்த மனிதரிடம்) "இன்னாரே! உங்கள் தோழர்கள் உங்களைப் பணிப்பது போன்று நீங்கள் ஏன் செய்யக்கூடாது? என்ன காரணத்தால் ஒவ்வொரு ரக்அத்திலும் இந்த அத்தியாயத்தைக் கட்டாயப் படுத்திக் கொண்டீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு அவர், "நான் இந்த அத்தியாயத்தை நேசிக்கிறேன்" என்று சொன்னார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அ(ந்த

அத்தியாயத்)தை நீர் நேசிப்பது உம்மைச் சொர்க்கத்தில் சேர்க்கும்" என்று கூறினார்கள்.
(நூல் : புகாரீ-774, திர்மிதீ-2819)

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒரு முறை நான் அருமை நாயகம் (ஸல்) அவர்களுடன் வந்தபோது, ஒருவர் குல்ஹுவல்லாஹு அஹத் அத்தியாயம் ஓதுவதைக் கேட்ட அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "கடமையாகி விட்டது" என்றார்கள். அப்போது, நான், "நாயகமே என்ன கடமையாகி விட்டது?" என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், "சொர்க்கம் கடமையாகி விட்டது" என்று சொன்னார்கள். அப்போது அந்த மனிதரிடம் சென்று இந்த நற்செய்தியைச் சொல்ல விரும்பினேன். ஆயினும் நபி (ஸல்) அவர்களுடன் மதிய உணவு உண்பது தவறிப் போய் விடுமே என்ற எண்ணத்தால் உணவிற்கு முதலிடம் கொடுத்தேன். (நபி (ஸல்) அவர்களுடன் உணவு அருந்துவது பெரும் பாக்கியம் ஆகும்.) அதன் பிறகு அம்மனிதர் இருந்த இடத்திற்கு வந்த போது அவர் அவ்விடத்தி லிருந்து சென்று விட்டிருந்தார்."
(நூல்: முஅத்தா மாலிக் -193, திர்மிதீ - 2815)

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது: "ஒரு மனிதர் அருமை நாயகம் (ஸல்) அவர்களிடம், "நாயகமே! எனக்கு ஒரு சகோதரர் இருக்கிறார். அவர் 'குல் ஹுவல்லாஹு அஹத்' (அத்தியாயத்தை) ஓதுவதை மிகவும் விரும்புகிறார்" என்று கூறினார். அப்போது நபி (ஸல்) அவர்கள், "உன்னுடைய சகோதரனுக்கு சொர்க்கம் கிடைப்பதை நற்செய்தியாகக் கூறு!" என்றார்கள்.
(நூல் : தஃப்சீர் துர்ருல் மன்ஸூர்)

## அல்லாஹ்வின் பண்புகள்

ஹள்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது : "அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஒரு மனிதரை படைப் பிரிவு ஒன்றுக்குத் தளபதியாக்கி அனுப்பினார்கள். அவர், தமது தொழுகையில் தம் தோழர்களுக்கு (குர்ஆன் வசனங்களை) ஓதி (தொழ வைத்து) வந்தார்; (ஒவ்வொரு முறையும்) ஓதி முடிக்கும்போது 'குல் ஹுவல்லாஹு அஹத்' எனும் (112 ஆவது) அத்தியாயத்துடன் முடிப்பார். அப்படையினர் திரும்பி வந்த போது நபி (ஸல்) அவர்களிடம் இதைப் பற்றி தெரிவித்தனர். அப்போது நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள், "எதற்காக இப்படிச் செய்கிறார்? என்று அவரிடமே கேளுங்கள்" என்று கூற, அவர்களும் அவரிடம் கேட்டனர்.

அவர், "ஏனெனில், அந்த அத்தியாயம் பேரருளாளனின் (ஓரிறைப்) பண்புகளை எடுத்துரைக்கின்றது. நான் அதை (அதிகமாக) ஓதுவதை விரும்பு

கின்றேன்" என்று சொன்னார். (இதைக் கேள்விப்பட்ட) நபி (ஸல்) அவர்கள், "அவரை அல்லாஹ் நேசிக்கிறான் என்று அவருக்குத் தெரிவியுங்கள்" என்று கூறினார்கள்.

(நூல் : புகாரீ-7375, முஸ்லிம் - 1481)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார், இக்லாஸ் அத்தியாயத்தை, கடமையாக்கப்பட்ட ஒவ்வொரு தொழுகைக்குப் பிறகும் பத்து முறை ஓதிவருவாரோ, அவருக்கு அல்லாஹ் தம்முடைய பொருத்தத்தையும், மன்னிப்பையும் அவசியமாக்கிவிட்டான்."

(நூல்: தஃப்சீர் துர்ருல் மன்ஸுர்)

## கடன் பிரச்சனைத் தீரும்

ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மய்யித் (ஜனாஸா) தொழ வைப்பதற்காக கொண்டு வரப்பட்டது. அப்போது அண்ணலார் (ஸல்) அவர்கள், "இவர் யாருக்காவது கடன் கொடுக்க வேண்டியது இருக்கிறதா?" என்று வினவினார்கள். "ஆம்! இவர் மீது நான்கு வெள்ளிக் காசுகள் கடன் இருக்கிறது" என்று பதிலளிக்கப்பட்டது. அண்ணலார் (ஸல்) அவர்கள், "அப்படியானால், அவருக்காக நீங்கள் தொழுது கொள்ளுங்கள்; நான் தொழவைக்க மாட்டேன். காரணம் இவர் கடனாளியாக மரணித்து இருக்கிறார்" என்று கூறினார்கள்.

அப்போதுவானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வந்து, "நாயகமே! அல்லாஹ் உங்களுக்கு ஸலாம் கூறினான். மனித உருவில் சென்று அந்தக் கடனைக் கொடுத்து விடும்படி எனக்கு உத்தரவிட்டான். நான் போய் அவர் கடனைக் கொடுத்து விட்டேன். எனவே, நீங்கள் அவருக்காக ஜனாஸா தொழ வைக்க வேண்டும் என்பது இறைவனின் கட்டளை. எனவே, நீங்கள் சென்று அவருக்கு ஜனாஸா தொழுகையை நிறைவேற்றி வையுங்கள். அல்லாஹ் அவருடைய பாவங்களை மன்னித்து விட்டான்" என்றார்கள்.

அப்போது அண்ணலார் (ஸல்) அவர்கள், ஜிப்ரயீல் (அலை) அவர்களை நோக்கி, 'இறந்துபோன அவருக்கு இப்படிப்பட்ட மரியாதை கிடைக்க காரணமென்ன?' என்று வினவினார்கள். ஜிப்ரயீல் (அலை) அவர்கள், "இறந்து போன அம்மனிதர் தினந்தோறும் (திருகுர்ஆனின் 112வது) இக்லாஸ் அத்தியாயத்தை நூறு தடவை ஓதி வந்தார். (இதுதான் காரணமாகும்.)

மேலும், ஒருவர் அந்த அத்தியாயத்தை தொழுகைகளில் (அடிக்கடி) ஓதி வந்தால், அவருக்கும், நரகம் உறுதி செய்யப்பட்ட அவருடைய சுற்றத்தாருக்கும் நரக வேதனையிலிருந்து விடுதலை செய்து

## பயந்து கொள்ளுங்கள். மனிதர்களே!

"நிச்சயமாக மறுமை நாளின் அடையாளங்களில், கல்வி உயர்த்தப்படுவதும், மடமை உறுதிப்படுத்தப்படுவதும், மது அருந்தப்படுவதும், விபச்சாரம் வெளிரங்கமாக நடப்பதும் நிகழும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள். (நூல் : புகாரீ 80)


வாழ்த்துக்களுடன்....

**ARM**

நம்பிக்கையாளர்களே வெற்றியாளர்கள்

**உங்கள் திட்டம் – எங்கள் பொருட்கள்**
**ஓர் உறுதியான இணைப்பு**

**30க்கும் மேற்பட்ட முதன்மையான பிராண்டு**

**சிமெண்ட் | சானிட்டரிவேர்ஸ்**

**கம்பி | கெமிக்கல்ஸ்**

2154, வடக்குராஜ வீதி,
புதுக்கோட்டை.
செல் : +91 7373 7989 30

233, ECR
கோட்டைப்பட்டிணம்.
செல் : +91 7373 7989 11

31, ஏர்போர்ட் ரோடு, திருச்சி.
செல் : +91 7373 7989 45

www.armsons.in

விடும்படி அல்லாஹ்விடம் அவர் மன்றாடுவார் (இவ்வாறான அந்தஸ்து அவருக்கு வழங்கப் படும்)" என்று கூறினார்கள்.

## ஏழ்மை நிலை நீங்கும்

ஹள்ரத் சஹ்ல் பின் சஅத் (ரளி) அவர்கள் கூறியதாவது : "நபிகள் நாயகம் (ஸல்) அவர் களிடம் ஒருவர் வந்து தனது குடும்பத்திலுள்ள ஏழ்மை நிலையை முறையிட்டு அது நீங்குவதற்கு பிரார்த்திக்கும் படி கோரினார். அதற்கு அண்ணலார் (ஸல்) அவர்கள் அவரிடம் "நீங்கள் வீட்டுக்குள் நுழையும்போது வீட்டில் உள்ளவர்களுக்கு "அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல் லாஹி வபரக்காதுஹு" என்று மொழிந்தவராகவும், வீட்டில் யாரும் இல்லாவிட்டால் என்னை மனதில் நினைத்து "அஸ்ஸலாமு அலைக்கும் அய்யுஹன் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரக்கா துஹு" என்று மொழிந்தவரா கவும் மேலும் (112வது) அத்தி யாயம் இக்லாஸை ஒருமுறை ஓதியவராகவும் நுழையுங்கள்" என்று கூறினார்கள். அவரும் அவ் வாறே கடைபிடித்து வந்தார். அதன் காரணமாக அல்லாஹ் அவரின் ஏழ்மையை நீக்கி வளத்தை கொடுத்தான். அவர் தனக்கு கிடைக்கப்பெற்ற வளத்திலிருந்து பக்கத்து வீட் டாருக்கும் வாரி வழங்கினார்."

(நூல் : தஃப்சீர் குர்துபீ, தஃப்சீர் ராஸீ)

## இறுதித்தொழுகையில் வானவர்கள்

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர் கள் கூறியதாவது : "அருமை நாயகம் (ஸல்) அவர்கள் நபித் தோழர்களோடு தபூக்கில் இருந்தபோது என்றைக்கும் இல்லாத அளவு சூரியனின் ஒளி வெண்மையாகவும், பிரகாசமா கவும் இருந்தது. அவ்வாறு நாங் கள் அதை ஒருபோதும் பார்த்த தில்லை. எனவே நாங்கள் அனைவரும் வியப்படைந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்களி டம் வானவர் தலைவர் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் வருகை தந்து, "(நாயகமே! மதீனாவில் இறந்து விட்ட) முஆவியா பின் முஆவியா (ரளி) அவர்களின் இறுதித் தொழுகையில் கலந்து கொள் வதற்கு எழுபதாயிரம் வானவர் களுடன் நான் இறங்க வேண்டும் என்று அல்லாஹ் கட்டளை யிட்டுள்ளான். நீங்கள் அவருக்கு இறுதித் தொழுகை நடத்துகிறீர் களா?" என்று கேட்டார்கள்.

(நபி (ஸல்) அவர்கள், 'ஆம்' என்றார்கள்.) உடனே ஜிப்ரயீல் (அலை) அவர்கள் தமது இறக்கையை பூமியின் மீது அடித்தபோது மலைகள் விலகின. நபி (ஸல்) அவர்கள் (மதீனாவில் இருக்கும்) அன்னாரின் ஜனாஸாவை நேரடியாகப் பார்ப் பது போன்றாகிவிட்டது. பிறகு நபியவர்களும், நபித் தோழர் களும் அன்னாருக்காக இறுதித் தொழுகை தொழுதார் கள். நபி

(ஸல்) அவர்கள், "(அவர்) இந்த அந்தஸ்தை எவ்வாறு பெற்றார்?" என்று கேட்டார்கள். ஜிப்ரயீல் (அலை) அவர்கள், "அவர் அல்-இக்லாஸ் அத்தியாயத்தை மிகவும் நேசித்தார். (அதாவது, அமர்ந்த நிலையில், நின்ற நிலையில், பசித்திருந்த நிலையில், படுத்த நிலையில், நடந்த நிலையில்என அதை அதிகமாக ஓதிவருபவராக இருந்தார்)" என்று பதிலளித்தார்கள்.

(நூல் : முஅஜமுல் கபீர் இமாம் தப்ரானீ, முஸ்னது அபூய அலா, அல் இஸ்தீஆப் இமாம் இப்னு அப்தில் பர், உஸ்துல் ஃகாபா, தஃப்சீர் ராஸீ)

## வானவர்களால் பேசப்பட்டவர்

ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிப்ரயீல் (அலை) அவர்களோடு இருந்த போதுஹள்ரத் அபூதர் அல்கிபாரீ (ரளி) அவர்கள் நபி (ஸல்) அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். அப்போதுஜிப்ரயீல் (அலை) அவர்கள், "அங்கேவருவது அபூதர் (ரளி) தானே!" என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அவரை உங்களுக்கு தெரியுமா?" என்று கேட்டார்கள். அதற்கு ஜிப்ரயீல் (அலை) அவர்கள், "உங்களிடத்தில் எப்படி அவர் பிரபலமோ அது போன்று எங்களிடமும் அவர் பிரபலமானவர் தான். (அதாவது, அவரைப் பற்றி அதிகமாக எங்களிடம் பேசிகொள்வோம்)" என்றார்கள். நபி (ஸல்) அவர்கள், "அபூதர் (ரளி) அவர்களுக்கு இந்த பாக்கியம் எவ்வாறு கிடைத்தது?" என்று கேட்டார்கள். அதற்கு ஜிப்ரயீல் (அலை) அவர்கள், "அவர் அதிகமாக 'குல்ஹுவல்லாஹு அஹத்' அத்தியாயத்தை ஓதக்கூடியவராக இருக்கிறார்" என்று பதிலளித்தார்கள்.

(நூல்:- தப்ஸீர் ராஸீ)

## பிரார்த்திக்கும் போது

ஹள்ரத் புரைதா (ரளி) அவர்கள் கூறியதாவது : "ஒருவர், 'இறைவா! நான் உன்னிடமே கேட்கிறேன். நீதான் இறைவன்; உன்னை அன்றி வேறு இறைவன் யாரும் இல்லை; நீ தனித்தவன்; (எவருடைய) தேவையுமற்றவன்; (அனைத்தும் உன்னுடைய அருளையே எதிர்பார்த்திருக்கின்றன) நீ (எவரையும்) பெறவுமில்லை; நீ (எவராலும்) பெறப்படவுமில்லை. (ஆகவே, உனக்குத் தகப்பனுமில்லை; சந்ததியுமில்லை.) உனக்கு நிகர் யாருமில்லை என்று நான் சாட்சி சொல்கிறேன்" என்று கூறி பிரார்த்தித்தார்.

அதை செவியுற்ற பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள், "அவன் எந்தப் பெயரால் தன்னை அழைத்தால் (அந்த அழைப்புக்கு உடனடியாக) பதில் வழங்குவானோ, எந்தப்

பெயரால் கேட்டால் (மறுக்காமல்) கொடுப்பானோ, அந்தப் பெயரைக் கொண்டு நீர் அல்லாஹ்விடம் கேட்டு விட்டீர்" என்று கூறினார்கள்.

மற்றொரு அறிவிப்பில், "இஸ்முல் அஃளம் எனும் (மகத்தான பெயரைக்) கொண்டு மாண்பும், வல்லமையும் மிக்க அல்லாஹ்விடம் நீ கேட்டுவிட்டாய்" என்று கூடுதலாக இடம் பெற்றுள்ளது.

அறிவிப்பாளர் : ஹள்ரத் புரைதா (ரளி) அவர்கள் (நூல் : அபூதாவூத் 1276, திர்மிதீ - 3387, இப்னுமாஜா-3847, இப்னுஹிப்பான், ஹாகிம்)

## தொழுகைகளுக்குப் பிறகு

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் ஜும்ஆ தொழுகைக்குப் பிறகு சூரத்துல் இக்லாஸ், சூரத்துல்ஃபலக், சூரத்துன் நாஸ் ஆகியவற்றை ஏழுமுறை ஓதி வருகிறாரோ அவரை அல்லாஹ் அந்த வெள்ளிக்கிழமையில் இருந்து அடுத்த வெள்ளிக்கிழமை வரை (எல்லா விதமான) தீமைகளிலிருந்து பாதுகாக்கிறான்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள், (நூல் : தஃப்சீர் துர்ருல் மன்ஸுர், இப்னு சின்ணீ அமலுல் யவ்மி வல்லைல், இப்னு ஷாஹீன் அத்தர்கீபு ஃபீ ஃபளாயிலுல் அஃமால்)

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் மஃரிப் தொழுகைக்குப் பிறகு யாரிடத்திலும் பேசாமல் இருந்து இரண்டு ரக்அத் தொழுகிறாரோ அதன் முதல் ரக்அத்தில் சூரத்துல் ஃபாத்திஹா, சூரத்துல் காஃபிரூன் இரண்டாவது ரக்அத்தில் சூரத்துல் ஃபாத்திஹா, சூரத்துல் இக்லாஸ் ஆகியவற்றை ஓதி தொழுது முடிப்பவர், பாம்பு அதன் தோலிலிருந்து வெளிப்படுவதைப் போல் அவர் தனது பாவங்களை விட்டும் விலகியவராக ஆகிறார்."

அறிவிப்பாளர்: ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : தஃப்சீர் மன்ஸுர்)

பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "இறை நம்பிக்கையுடன் மூன்று காரியங்களை யார் கடைபிடித்து வருவாரோ, அவர் சொர்க்கத்தின் எந்த வாசல் வழியாகவும் நுழையலாம். தான் நாடிய அளவிற்கு 'ஹூருல் ஈன்' (எனும் சொர்க்கத்து) பெண்களை மணமுடித்துக் கொடுக்கப்படுவார்.

1) தன்னை கொலைசெய்தவனை (மறுமைநாளில் பழி வாங்காமல்) மன்னித்து விடுபவர்.
2) மறைந்துபோன (மறந்து விட்ட) கடனை நிறைவேற்றியவர்.
3) ஒவ்வொரு நாளும் கடமையான தொழுகைக்குப் பிறகு பத்து முறை 'குல் ஹுவல்லாஹு அஹத்' அத்தியாயத்தை ஓதி வருபவர்."

# ஆக்ஸ்போர்டு இங்கிலீஷ் ஸ்கூல் (CBSE)

## OXFORD ENGLISH SCHOOL (CBSE)

**சிதம்பரம் - 608001.** கடலூர் மாவட்டம்.

**KG to XII Grade**
**NEET, JEE, CA,CPT வகுப்புகள் நடத்தப்படும்.**

★ **ஹாஸ்டல் வசதி உண்டு.**

● முஸ்லிம் மாணவர்களுக்கு தனியாக அரபி பாடம், தொழும் முறை, இஸ்லாமிய மார்க்க வழிமுறை பயிற்றுவிக்கப்படும்.

அல்ஹாஜ் **Dr.முஹம்மது இல்யாஸ், M.B.A.,M.Sc.,Ph.D.**
Founder & Chairman.

**தொடர்புக்கு :** Email : **oxfordescdm@gmail.com**
Tel : **+91-7373030412, 414, 421.**
WhatsApp : **+91-9566247805** https://oxfordenglishschool.info

---

நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
**இராமநாதபுரம் - 623 501.**

போன் : 04567-224500, 228500
செல் : 9443255158

அப்போது ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள், "நாயகமே! அவற்றில் ஒன்றை செய்தாலுமா (அவ்வாறு கிடைக்கும்)?" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "(ஆம்!) அவற்றில் ஒன்றை செய்தாலும் (கிடைக்கும்)."

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரளி) அவர்கள் (நூல் : முஸ்னது அபீயஅலா, மஜ்மஉஸ் ஸவாயித் இமாம் ஹைஸமீ, தஃப்சீர் இப்னு கஸீர்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் ஐந்து வேளை ஃபர்ளு தொழுகைக்குப் பிறகு ஆயத்துல் குர்ஸீ மற்றும் சூரத்துல் இக்லாஸை ஓதி வருவாரோ அவர் சொர்க்கம் செல்வதற்கு மரணத்தைத் தவிர எந்த குறுக்கீடும் இல்லை."

அறிவிப்பாளர்:- ஹள்ரத் அபூ உமாமா (ரளி) அவர்கள், (நூல்: தப்ரானீ, தஃப்சீர் துர்ருல் மன்ஸுர்)

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் ஒவ்வொரு நாளும் இருநூறு முறை 'குல் ஹுவல்லாஹு அஹத்' அத்தியாயத்தை ஓதுகிறாரோ அவருக்கு அவருடைய ஐம்பது ஆண்டுகளின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. அவர் மீதுகடன் ஏதும் இருந்தாலே தவிர."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதீ - 2816)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "யார் 'குல் ஹுவல்லாஹு அஹத்' அத்தியாயத்தை இருநூறு முறை ஓதுவாரோ அவருக்கு ஐநூறு வருட வணக்க வழிபாடு செய்த கூலி உண்டு."

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஹஸன் (ரளி) அவர்கள், (நூல் : தஃப்சீர் துர்ருல் மன்ஸுர்)

ஹள்ரத் முஆத் பின் அனஸ் அல் ஜுஹனி (ரளி) அவர்கள் கூறியதாவது : "பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள், "யார் 'குல் ஹுவல் லாஹு அஹத்' அத்தியாயத்தை முழுமையாக பத்து முறை ஓதுகிறாரோ, அவருக்கு சொர்க்கத்தில் ஒரு மாளிகையை கட்டிக் கொடுக்க அல்லாஹ் ஏற்பாடு செய்வான்" என்று கூறினார்கள்.

அப்போது உமர் (ரளி) அவர்கள், "அவ்வாறாயின் நாங்கள் (அதைவிட) அதிகமாக ஓதுவோம் நாயகமே!" என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் அதிகமாக வழங்குபவன். இயலாமையில் இருந்து அதிகம் தூய்மையானவன்" என்று கூறினார்கள்.

(நூல் : முஸ்னது அஹ்மத், தாரமீ, தஃப்சீர் இப்னு கஸீர்)

## ஷைத்தானை விட்டும் பாதுகாக்கும்

கண்மணி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "மக்கள் (இதைப் படைத்தவன்

யார்? இதைப் படைத்தவன் யார்? என்று ஒவ்வொன்றாக) தங்களுக்கிடையில் கேள்வி கேட்டுக்கொண்டே வந்துஇறுதி யில், இந்தப் படைப்புகளை யெல்லாம் அல்லாஹ் படைத் தான்; அல்லாஹ்வைப் படைத் தது யார்?" என்று கேட்கும் நிலைக்கு உள்ளாவார்கள். இத் தகையஎண்ணம்எவருக்கேனும் ஏற்பட்டால் அவர் உடனே **"அல்லாஹ் ஒருவனே. அல்லாஹ் எந்தத் தேவையும் இல்லாதவன். அவன் எவரையும் பெற்றெடுக்க வில்லை; எவராலும் பெற் றெடுக்கப்படவுமில்லை. அவனுக்கு நிகராக எவரும் இல்லை."** (திருகுர்ஆன் 112 : 1 - 4) இவ் வாறு கூறி இடது புறத்தில் மூன்று முறை துப்பட்டும்; ஷைத்தானைவிட்டு அல்லாஹ் விடம் பாதுகாப்புத் தேடட்டும்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : அபூதாவூத் 4098, 4099, ஸஹீஹ் ஜாமிஉ -8182)

மார்க்க அறிஞர்கள் கூறு கின்றனர். ஒவ்வொரு மனித னின் இறுதி நேரத்திலும் ஷைத்தான் வந்து பல்வேறு மனக்குழப்பங்களை ஏற்படுத்து வான். அதாவது, அதை, இதைப் படைத்தது அல்லாஹ் தான் என்றால், அல்லாஹ்வைப் படைத்தது யார்? என்ற கேள்வியை முன்வைப்பான். அந்நிலையில் அல்இக்லாஸ் அத்தியாயத்தை ஓதினால்

# துஆ செய்ய வேண்டுகிறோம்

"நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள்; நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்." – அல்குர்ஆன் (2 : 156)

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, மர்ஹூம் "பேங்க் முஸ்தபா" (ரஹ்) அவர்களின் மருமகளாரும், "பேங்க் முஸ்தபா" அவர்களின் மூத்த மகன் மர்ஹூம் M. கலீஃபுல்லாஹ் (ரஹ்) அவர்களின் அருமைத் துணைவியாரும், அறந்தாங்கி "முஸ்தபா காம்ப்ளக்ஸ்" மர்ஹூம் K. சிராஜுதீன் (ரஹ்) மற்றும் சகோதரிகளின் அருமைத் தாயாருமான

ஜனாபா **K. பரிதா பேகம்** அவர்கள்

17.10.2024 வியாழக்கிழமை அன்று இறைவனின் அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். (இன்னா லில்லாஹி...) எல்லாம் வல்ல அல்லாஹ், அம்மையாரின் அனைத்து நல் அமல்களையும் பொருந்திக் கொண்டு, அவர்களின் மறுமை வாழ்வை சிறப்பாக்கி வைக்க துஆ செய்யுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

**குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்**

**செல் : 98427 21265, 70940 21265**

அங்கிருந்து ஷைத்தான் ஓடி விடுவான்.

நாம் வாழும்போது இஸ்லாத்தை முறைப்படி பேணி வாழ்ந்தால்மட்டுமே நமது இறுதி நேரத்தில் ஏற்படக்கூடிய ஷைத்தானின் சூழ்ச்சிகளிலிருந்து அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பான் என்பது குறிப்பிடத்தக்கது.

## குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதி

ஹள்ரத் அபூ சயீத் அல் குத்ரீ (ரளி) அவர்கள் கூறியதாவது: "அண்ணல் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களை நோக்கி, 'ஓர் இரவில் குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை உங்களில் ஒருவரால் ஓத முடியாதா?" என்று கேட்டார்கள். அதைச் சிரமமாகக் கருதிய நபித்தோழர்கள், "எங்களில் யாருக்கு இந்தச் சக்தி உண்டு அல்லாஹ்வின் தூதரே!" என்று கூறினார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அல்லாஹ் ஒருவனே; அல்லாஹ் தேவையற்றவன்' (என்று தொடங்கும் 112வது அத்தியாயம்) குர்ஆனின் மூன்றிலொரு பகுதியாகும்" என்று சொன்னார்கள்." (நூல்: புகாரீ-5015)

## படுக்கைக்குச் சென்றால்

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் கூறியதாவது: "நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் தமது படுக்கைக்கு (உறங்கச்) சென்றால் ஒவ்வோர் இரவிலும் தமது உள்ளங்கைகளை இணைத்து அதில், 'குல்ஹுவல்லாஹு அஹத்', 'குல் அஊது பிரப்பில் ஃபலக்', குல் அஊது பிரப்பிந் நாஸ்' ஆகிய (112, 113, 114) அத்தியாயங்களை ஓதி ஊதிக் கொள்வார்கள். பிறகு தம் இரு கைகளால் (அவை எட்டுமளவுக்கு) தமது உடலில் இயன்றவரையில் தடவிக் கொள்வார்கள். முதலில் தலையில் ஆரம்பித்து, பிறகு முகம், பிறகு தம் உடலின் முற்பகுதியில் கைகளால் தடவிக் கொள் வார்கள். இவ்வாறு மூன்று முறை செய்வார்கள்." (நூல்: புகாரீ 5017, அபூதாவூத்-5056, திர்மிதீ-3314, இப்னுமாஜா -3875)

பேராசான் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "ஒருவர் தமது படுக்கையில் படுக்கச் சென்று தமது வலப் பக்கத்தில் சாய்ந்து படுத்துக் கொண்டு நூறு முறை 'குல்ஹுவல்லாஹு அஹத்' அத்தியாயத்தை ஓதினால் மறுமை நாளில் அவரிடம் அருள்வளமும் உயர்வும் மிக்க இறைவன், "என் அடியானே! உனது வலப்பக்கமாகச் சென்று சொர்க்கத்தில் நுழைந்து கொள்!" என்று கூறுகிறான்."

அறிவிப்பாளர்: ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (நூல்: திர்மிதீ-2816)

## காலை மாலை ஓத வேண்டியவை

ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு குபைப் (ரளி) அவர்கள் கூறு

கிறார்கள்: "நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் என்னிடம், 'சொல் வீராக!' என்றார்கள். அதற்கு நான் எதுவும் சொல்லவில்லை. மறு படியும் 'சொல்!' என்று சொல்ல, அதற்கும் நான் எதுவும் சொல்ல வில்லை. மூன்றாவது முறை மீண்டும் 'சொல்!' என்றார்கள். நான், 'நாயகமே! என்ன சொல்வது?' என்று கேட்டேன். நபி (ஸல்) அவர்கள், 'குல்ஹுவல்லாஹு அஹத்', குல் அஊது பிரப்பில் ஃபலக்', 'குல் அஊது பிரப்பின் னாஸ்' ஆகிய (112,113,114) அத்தியாயங்களை காலை, மாலை மூன்று முறை ஓதுவீராக. அவை அனைத்து பொருள் களி(ன் தீங்குகளி)லிருந்தும் பாதுகாப்புப் பெற உனக்குப் போதுமானதாக இருக்கும்" என்று கூறினார்கள்.

(நூல் : அபூதாவூத் - 4419)

அதிகமாக ஓத இயலாதவர் கள் குறைந்தது இந்த மூன்று அத்தியாயங்களை காலையும், மாலையும் ஓதிவந்தால் இன்ஷா அல்லாஹ் இதுவே போதுமாகி விடும்' என்பதாக அறிஞர்கள் சிலர் இந்த நபிமொழிக்கு விளக்கம் கூறுகிறார்கள்.

(நூல் : ஷரஹுத்தீபி)

எனவே, நாம் அனுதினமும் இக்லாஸ் அத்தியாயத்தை ஆசையுடனும், ஆர்வத் துடனும் ஓதி, இறையருளைப் பெறுவோமாக!

---


# மணமகள் தேவை

தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த, ஜெர்மனியில் இன்ஜினியராக பணிபுரியும், சாலிஹான குடும்பத்தைச் சார்ந்த, விவாகரத்தான, சுமார் 33 வயதுடைய, ஸாலிஹான **மணமகனுக்கு** மறுமணம் செய்ய ஸாலிஹான **மணமகள் தேவை.**

தொடர்புக்கு :

**6369082246**

# வரலாற்றில் ஓர் ஏடு

வரலாற்றில் ஒரு நாள் :

ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் நடந்து கொண்டிருந்தார்கள்.

“அபூதரே! நான் திரும்பி வரும் வரை தற்போது நீங்கள் இருப்பதைப் போன்று இந்த இடத்திலேயே இருங்கள்” என்று கூறிவிட்டு, நடந்து (சிறிது தூரம் சென்று) மறைந்து விட்டார்கள்.

அப்போது ஒரு குரல் கேட்கிறது. அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களுக்கு ஏதும் நேர்ந்து விட்டதோ? என்று ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் அச்சமடைந்தார்கள். திசையை நோக்கிப் போக ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் முயற்சி செய்யவில்லை. நபி (ஸல்) அவர்கள் திரும்பி வரும்வரை அங்கேயே காத்திருந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் வந்தபின், தான் செவியுற்ற அந்தக் குரலைப் பற்றி நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்தார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் அது வானவர் ஜிப்ரயீல் (அலை) அவர்களின் குரல்தான். அவர் என்னிடம் வந்து,

“உம்முடைய சமுதாயத்தாரில் யார் அல்லாஹ்வுக்கு எதையும் இணை வைக்காமல் இறந்து விட்டாரோ அவர் சொர்க்கம் புகுவார்” எனக் கூறினார் என்று சொன்னார்கள்.

அப்போது ஹள்ரத் அபூதர் (ரளி) அவர்கள் “அவர் விபச்சாரம் புரிந்தாலும், திருடினாலுமா?” என்று கேட்டார்கள்.

நபி (ஸல்) அவர்கள், “(ஆம்) விபச்சாரம் புரிந்தாலும், திருடினாலும் சரி (அவர் சொர்க்கம் புகுந்தே தீருவார்)” என்று கூறினார்கள்.

ஆதாரம் : தஃப்ஸீர் இப்னு கஸீர்
பாகம் இரண்டு/பக்கம் 471

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# ஸூஃபிகளின் தொழுகை

மவ்லவீ **பி.எம். கலீலுர் ரஹ்மான்** மன்பயீ எம்.ஏ., எம்.ஃபில்.,

இந்த உலகத்தில் நாம் அனுபவிக்கும் இன்பங்களிலேயே மிகப் பெரியது இறைவன் நம்மிடத்தில் உரையாடுவது தான்.

எனவே இறைவனோடு உரையாட வேண்டுமானால், அதிகாலையில்எழுந்து அவனை வணங்கி வழிபட வேண்டும். அச்சமயம் அல்லாஹ்வை வணங்கும்போது மிகப்பெரும் சந்தோஷம் உண்டாகும்.

## புகழுக்காகத் தொழாதே!

மனிதன், தான் விரும்புகிற காரியத்தை எளிதாகச் செய்து விடுகிறான். தான் விரும்பாத காரியத்தை பெரும் கஷ்டப்பட்டு செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான்.

கடமையான ஹஜ்ஜை முடித்த பின் இரண்டாம் ஹஜ் செய்ய மனிதன் ஆசைப்படுகிறான். ஆனால், அதற்கான தொகையை தர்மம் செய்ய அவனது மனம் விரும்புவதில்லை.

ஏனெனில் இரண்டாவது ஹஜ் செய்தால், அவனுக்கு பெயரும், புகழும் கிடைக்கும். தர்மம் செய்தால் அது யாருக்கும் தெரியாமல் போய்விடும்.

ஒருவன் ஆசிரியராக இருக்க ஆசைப்படுகிறான். அதனால் அவன் அறிவாளி என்றும், நல்ல மனிதன் என்றும் பெயர் பெறுவதை விரும்புகிறான்.

அதே மனிதன் நள்ளிரவில் எழுந்து இரண்டு ரக்அத்துகள் தொழுவதற்குச் சிரமப்படுகிறான். ஏனெனில், தொழுகை என்பது இறைவனுக்கும், இவனுக்கும் மட்டுமே தொடர்புள்ள ஒன்று.

புகழும், பெருமையும் தரும் காரியங்களைச் சிரமம் இருந்தாலும் செய்ய முன்வருகிறான். இவ்விரண்டும் இல்லாத காரியங்கள், சிரமமின்றி எளிமையாக இருந்தாலும் அதை செய்ய முன் வருவதில்லை.

தொழாத உடல், காய்ந்த மரம் போன்றது;

கேளிக்கை மற்றும் பொழுது போக்குகளில் கவனம் செலுத்துபவன் இரவு வணக்கத்தில் கவனம் செலுத்த மாட்டான்.

“பகலில், இறைவன் அல்லாத வேறு பக்கம் ஒருவனின் கவனம் சென்றதால், இரவில் அவன் கவனம் இறைவன் பக்கம் வராமல் பார்த்துக் கொள்ளப்பட்டது” என்று வானவர்களால் மறுமை நாளில் அவனிடம் சொல்லப்படும்.

இரவு நேரத்தில் இரண்டு ரக்அத் தொழுவது, உஹது மலையை விட பாரமாகத் தெரியும்.

காய்ந்த மரம் அடுப்பெரிப்பதற்கு மட்டுமே பயன்படுவது போல், வணக்க வழிபாடு செய்யாத உடல் பாகங்களை, வெட்டி எறிவதைத் தவிர வேறு எதற்கும் உதவாது.

## நீங்களெல்லாம் தொழுகையாளிகளா?

தீய நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளாதவர்களின் தொழுகை, தொழுகையே அல்ல!

**அல்லாஹ் கூறுகிறான்; “நிச்சயமாகத் தொழுகை அருவருக்கத்தக்க காரியங்களையும், தீய காரியங்களையும் தடுத்து நிறுத்தி விடும்.”**

- அல்குர்ஆன் (29 : 45)

**“உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவித் தேடுகிறோம்”** அல்குர்ஆன் 1 : 4 என்று தொழுகையில் அல்லாஹ்வோடு பேசியிருந்து விட்டு, இறுதியில் நபி (ஸல்) அவர்களுக்கு “அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹந் நபிய்யு - நபியே உங்கள் மீது ஸலாம் உண்டாவதாக” என்று ஒவ்வொரு தொழுகையிலும் ஸலாம் சொல்லிவிட்டு தொழுகையில் இருந்து வெளி வருகிறோம்.

இப்படிப்பட்ட பெரும் பாக்கியத்தைப் பெற்ற நாம் பாவச் செயல்களில் ஈடுபடலாமா?

இமாம் ஷாதுலீ (ரஹ்) அவர்களைச் சந்திக்க அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்த ஆலிம்களும் காஜி - நீதிபதிகளும் வந்திருந்தார்கள். அவர்களில் சிலர் இமாம் ஷாதுலீ (ரஹ்) அவர்களைச் சோதிக்க விரும்பினார்கள். அதை இமாம் ஷாதுலீ ( ரஹ்) அவர்கள் விளங்கிக் கொண்டு அவர்களிடம், “நீங்கள் தொழுது வருகிறீர்களா?” என கேட்டார்கள். அவர்கள் பதறிப் போய், “எங்களில் எவரேனும் தொழுகையை விடுவாரா?” என எதிர் கேள்வி கேட்டார்கள்.

அப்பொழுது இமாம் ஷாதுலீ(ரஹ்) அவர்கள் **“நிச்சயமாக மனிதன் பொறுமை இழந்தவனாக படைக்கப்பட்டிருக்கிறான்; ஏழ்மை அவனை வந்தடைந்தால் அவன் கதி கலங்கிப் போய் விடுகிறான். செல்வம் அவனை வந்தடைந்தால் பதுக்குகிறான். ஆனால், தொழுகையாளிகளைத் தவிர”** (70:19 - 21) என்ற இந்த இறை

வசனத்தை ஓதிக் காட்டி, "உங்களை கெட்டது அணுகினால் கலங்கமாட்டீர்களா? செல்வம் உங்களிடம் மிகைத்து காணப்பட்டால் கஞ்சத்தனம் செய்ய மாட்டீர்களா?" என்று வினவியதும் அவர்கள் எந்த பதிலும் சொல்லாமல் மௌனமாக இருந்தார்கள்.

அப்பொழுது இமாம் ஷாதுலீ (ரஹ்) அவர்கள், "நீங்கள் இவ்வசனம் கூறுவது போல் இறைவனை தொழவே இல்லை; அதனால்தான் என்னை நீங்கள் சோதிக்க வந்திருக்கிறீர்கள். இவ்வசனம் கூறுவது போல் நீங்கள் இருந்திருந்தால், இந்த எண்ணமே உங்களிடம் ஏற்பட்டிருக்காது" என்று கூறியதும் அவர்கள் நடுநடுங்கிப் போனார்கள்.

## கோழி கொத்துவது போல்.....

மனிதா! உன் பணியாளன் உனக்கு பணிந்து நடக்கும் அளவிற்காவது நீ உன் இறைவனுக்கு பணிந்து நடக்க வேண்டாமா? உன் பணியாளன் உனக்காக பணியாற்றும் போதெல்லாம் நீ அவனை நேசிக்கிறாய்.

அவ்வாறுதான் நீ இறைவனுக்கு கட்டுப்பட்டு நடக்கும் போது அவன் உன்னை நேசிக்கிறான். ஆனால் நீ இறை வழிபாட்டில் நீண்ட நெடுநேரம் ஈடுபடுவதில்லை. நீ தொழச் சென்றால் கோழி கொத்துவது போல் அவசர அவசரமாகக் கொத்தி விட்டு வந்து விடுகிறாய்.

அவசர அவசரமாகத் தொழுகையை முடித்துக் கொண்டு நீ எங்கே செல்கிறாய்? உலக சுகபோகங்களை அனுபவிக்கவா? அதைப் பற்றியும் அல்லவா மறுமை நாளில் நீ விசாரிக்கப்படுவாய்!

## தொழுதும் பயனில்லையா?

ஓரிறைக் கோட்பாட்டில் உறுதியாகவும், உணவில்கட்டுப்பாட்டுடனும், காம உணர்ச்சியில்கட்டுப்பாட்டுடனும், இருந்து கொண்டு தொழுகையில் அதிகம் ஈடுபடுவதே ஒருவருக்கு ஞானக்கண் திறக்க காரணமாக இருக்கும்.

உள்ளத்தை தொழுகையைக் கொண்டும் சரி செய்ய வேண்டும். தொழும்போது எந்த வகையான தேவையில்லாத எண்ணங்களும் உள்ளத்தில் எழாமல் இருந்தால், நீ வெற்றி பெற்றதாக நினைத்துக் கொள்! அவ்வாறு இல்லாமல் நீ தொழும்போது தேவையில்லாத எண்ணங்கள் உண்டானாலோ, நீ பள்ளிவாசலுக்கு எழுந்து செல்ல உனது கால்கள் தயங்கினாலோ அந்த நிலையை எண்ணி வருத்தப்பட வேண்டும்.

அத்தர் விற்பனை செய்யப்படும் கடையில் அமர்ந்திருந்தால், அதன் வாசனையை நுகராமல் இருக்க முடியாது.

அதுபோல தொழுகை என்பது இறைவனிடம் அமர்ந் திருப்பதற்குச் சமமாகும். நீ அவனிடம் அமர்ந்திருந்து விட்டு, அவனிடமிருந்து எந்த ஒன்றையும் நீ பெற்றுக்கொள்ள வில்லையானால் அது உன் உள்ளத்தில் இருக்கும் ஏதோ ஒரு தவறான எண்ணமோ, ஒழுக்கக் கேடோதான் காரணமாக இருக்கும்.

பள்ளிவாசலில் நீ தொழுது முடித்ததும் உடனே வெளி யேறி விடாதே! அங்கேயே சிறிது நேரம் அமர்ந்திருந்து, இறைவனிடம், தன் தொழுகை யில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்திருந்தால் அவற்றை மன்னிக்கும்படி பிரார்திக்க வேண்டும். இவ்வாறு கேட்ப தின் காரணமாக அல்லாஹ் நம் தொழுகையை ஏற்றுக் கொள் வான். நம் தொழுகை ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால் நமக்கு கிடைக்க வேண்டிய பலன் கிடைக்கும்.

## களா தொழுகை:

“இமாம் ஜமாஅத்தோடு தொழுதால் இருபத்தேழு மடங்கு அதிகமான நன்மைகள் வழங்கப்படும்” என நபி (ஸல்) அவர்கள் சொல்லியிருக் கிறார்கள்.

சில இறைநேசர்கள் எப் பொழுதாகிலும் ஒரு தொழுகை களாவாக ஆகிவிட்டால் அதனை இருபத்தேழு முறை திரும்பத் திரும்ப தொழுது இருக்கிறார்கள். இப்படி தொழ வேண்டும் என்பது சட்ட மில்லை என்று அறிந்திருந்தும் அவர்கள் தமக்கு ஏற்பட்ட சோம்பலுக்கு தண்டனையாக இவ்வாறு செய்திருக்கிறார்கள்.

இமாம் ஷாஃபியீ (ரஹ்) அவர்களின் தோழரான இமாம் முஜ்னீ (ரஹ் ) அவர்கள் இமாம் ஜமாஅத்தை தவற விட்டதால் இருபத்தைந்து முறை திரும்பத் திரும்ப தொழுபவர் களாக இருந்திருக்கிறார்கள்.

## நோடிப் பொழுதில், இருந்த இடத்திலிருந்து இறைவனைத் தொடர்பு கொள்ள...

நபி (ஸல்) அவர்கள் கூறு கிறார்கள். தொழுகை முஃமின் களின் மிஃராஜ் ஆகும்.

அஸ்ஸலாத் - தொழுகை எனும் சொல் திருகுர்ஆனில் 85 முறை இடம் பெற்றுள்ளது.

நபி (ஸல்) அவர்களுக்கு சித்ரத்துல் முன்தஹா அருகே அல்லாஹ் தொழுகையை வழங்கினான்.

உள ஓர்மையோடு மனிதன் தொழும்போது, தன் இருப்பிடங் களை விட்டு, படைப்பினங் களை விட்டு இறைவனோடு ஆத்மார்த்தமாக நெருங்கு கிறான்.

மனிதன் தொடர்ந்து உள ஓர்மையோடு தொழுதால்

# தேவை!

## மதுரையிலுள்ள பிரபலமான ஓர் அரபு கல்லூரிக்கு

## ஸஃபீர் (வசூலகர்) மற்றும் இரவு வாட்ச்மேன் தேவை!

உடனே தொடர்பு கொள்ளவும்.

**தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.**

தொடர்புக்கு :

**9443066539, 9486017570**

---

எங்கள் நோக்கம் எல்லா புகழும் இறைவனுக்கே உங்கள் மனநிறைவு

## மீரா டாக்குமெண்டேஷன் & லா அசோசியேட்ஸ்

சட்ட ஆலோசனைகள் வழங்கி பத்திர பதிவிற்கு தேவையான அனைத்து விதமான ஆவணங்களும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தயார் செய்து தரப்படும்.

**M.ஷேக் பரீத் அலீ,** M.Com.,M.L., அட்வகேட்,

100, சார்பதிவாளர் அலுவலக தெரு, அரவக்குறிச்சி – 639201. கரூர் Dt.



9940787789 / 04320-231789

எங்கள் இதர நிறுவனம் :

## மீரா இன்ஃபோநெட் இ-சேவை மையம்

அனைத்து விதமான ஆன்லைன் சேவைகளும் செய்து தரப்படும்

100/2, S.R.O. தெரு, அரவக்குறிச்சி.

9843062785 / 8148148177

## MEERA DIGITAL HUB மீரா டிஜிட்டல் ஹப்



அனைத்து விதமான கம்ப்யூட்டர், லேப்டாப், பிரிண்டர்ஸ், மொபைல் போன், CCTV கேமரா அனைத்தும் குறைந்த விலையில் கிடைக்கும்.

72, A.R.S. பில்டிங், கரூர் மெயின் ரோடு, அரவக்குறிச்சி.

8248522455 / 9080360049

சித்ரத்துல் முன்தஹாவில் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வை சந்தித்தது போல் நாமும் இருந்த இடத்திலிருந்து அல்லாஹ்வை சந்திக்க முடியும் என்பதைத் தான் அந்தச் சொல் கூறுகிறது.

தொழுகை என்பது இறைவனும், மனிதனும் சந்திப்பதற்கான ஓர் இடம். எனவே ரசித்து, சந்தோஷமாக, திருப்தியாக, உளஓர்மையோடு தொழவேண்டும். அலட்சியமாக, சோம்பலாக தொழுகைக்கு நெருங்காதீர்.

நபி(ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்திற்குச் சென்ற விபரத்தை திருகுர்ஆனில் அல்லாஹ் 17வது அத்தியாயத்தில் குறிப்பிடுகிறான்.

பதினேழாவது அத்தியாயத்தில் ஒரு நாளைக்கு ஃபர்ளு தொழுகை 17 ரக்அத்துகள் கடமையானதை அல்லாஹ் மறைமுகமாக அத்தியாயத்தின் தொடக்கத்திலேயே மிஃராஜ் பயணம் பற்றி சொல்வதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

நோன்பு, ஜகாத், ஹஜ் போன்ற இஸ்லாத்தின் அனைத்துச் சட்டங்களும் ஹள்ரத் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மூலமாகவே நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப் பட்டது. ஆனால் தொழுகை அல்லாஹ்வினால் நேரடியாக வழங்கப்பட்டது.

இறைவனுடைய அனைத்து சட்டங்களும் மனிதன் வாழும் இடத்தை நோக்கி வந்தன. ஆனால் தொழுகை அதை வழங்கும் இறைவனை நோக்கிச் சென்று வாங்கி வரப்பட்டது.

ஓர் அடியான் தொழும் போது தன் இறைவன் தன் எதிரே நிற்பது போன்று கருதி

"நான் உன்னையே வணங்குகிறேன்;

நான் உன்னிடமே உதவியும் கேட்கிறேன்" என்று கூறுகிறான்.

உங்களில் ஒருவர் தொழுகைக்கு நின்றால், நிச்சயமாக அவர் தன் இறைவனோடு தொடர்பில் இருக்கிறார். அல்லது அவருக்கு எதிரே இறைவன் இருக்கின்றான் என்று நபி (ஸல்) அவர்கள் சொன்னது போல் ஒவ்வொரு அடியானும் தொழ வேண்டும்.

"தொழுகை முஃமின்களின் மிஃராஜ்" என்று நபி (ஸல்) அவர்கள் சொல்வதின் நோக்கம் என்னவென்றால், தாம் மிஃராஜ் பயணத்தில் அனுபவித்த இன்பங்கள் யாவற்றையும் தனது சமுதாயத்தினரும் அனுபவிக்க வேண்டும் என்பதுதான்.

மிஃராஜ் உடைய நிலையை அனைவரும் அனுபவிக்க வேண்டுமானால் தொழுகையின் மூலம் அதை பெறலாம் என வழிகாட்டி இருக்கிறார்கள்.

தொழுகைக்காக தக்பீரைக் கட்டிக் கொண்டு ஏழு வசனங்

கள் கொண்ட ஃபாத்திஹா அத்தியாயத்தை ஓதத் தொடங்கியதும் இறைவனோடு தொடர்பு கிடைத்து விடும்.

தொலைபேசியில் சில எண்களை அழுத்தியதும் ஏதோ ஒரு நாட்டில் ஏதோ ஒரு மூலையில் இருக்கும் மனிதனை தொடர்பு கொண்டு காணொளி வாயிலாகவே பேச முடிகிறது என்றால் தொழுகை நமக்கு இறைவனோடு தொடர்பை ஏற்படுத்தாதா?

தொழுகை இன்று சடங்காக மாறி வருகிறது. அதைச் சரியாகச் செய்தால் சங்கடங்கள் விலகி சந்தோசங்கள் பெருகும்.

இன்று சிலர் தொழுகையில் நின்றதும் அவர்களுக்கு பல சிந்தனைகள் ஏற்படுகின்றன. மறந்தவை எல்லாம் நினைவுக்கு வருகின்றன.

அல்லாஹ்வை தொழுகையில் நினைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அல்லாஹ்வைத் தவிர அனைத்தையும் மனிதன் நினைத்துக் கொண்டிருக்கின்றான்.

கவ்லா என்னும் பெண்மணி நபி (ஸல்) அவர்களிடம் வந்து, "அல்லாஹ்வின் தூதரே! எனது கணவர் என்னை அவரது தாய்க்கு ஒப்பிட்டுப் பேசி விட்டார்; அதனால் நான் தலாக் ஆகி விட்டேன்; என் இளமை சென்று விட்டது; என் அழகு இல்லாமல் போய் விட்டது; என் உடலில் சக்தி குறைந்து விட்டது; குழந்தை பெற முடியாத வயோதிகத்தை அடைந்து விட்டேன்.

இந்நிலையில் அவர் தவறுதலாக என்னை தலாக் விட்டு விட்டார். அது எப்படி தலாக்காக ஆகும்? எனவே இந்த சட்டத்தை மாற்றுங்கள்" எனக் கேட்டுக் கொண்டார்.

நபி (ஸல்) அவர்கள், "சட்டம் அனைவருக்கும் சமமானது; சட்டத்தை என்னால் மாற்ற முடியாது; நான் என்ன செய்வேன்" என்று வருத்தமாகக் கூறினார்கள்.

ஆனால் கவ்லா அம்மையார் அவர்கள் விடுவதாக இல்லை. தொடர்ந்து கெஞ்சிக் கொண்டே இருந்தார். அழுது கொண்டே இருந்தார்.

அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் தர்ம சங்கடமான நிலையைப் பார்த்து விளங்கிக் கொண்டு "அதுதான் முடியாது என்று சொல்லி விட்டார்களே... பிறகு ஏன் இங்கே நின்று சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறீர்..... உங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள்" என அதட்டினார்கள். அவர்களை இழுத்துச் சென்று வெளியில் விட்டார்கள்.

கவ்லா அம்மையார் அவர்கள் தம் இல்லத்திற்குச் சென்றார்கள்.

சிறிது நேரத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு வஹீ வந்தது. 28வது ஜுஸுஉவின் முதல் நான்கு வசனங்கள் அருளப் பட்டன.

நபி (ஸல்) அவர்கள் அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களை அழைத்து, "கவ்லாவை அழைத்து வா!" என்று அனுப்பினார்கள்.

அன்னை கவ்லா அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "நீங்கள் இங்கிருந்து சென்றதும் என்ன செய்தீர்?"

கவ்லா : "உளூ செய்து கொண்டு இரண்டு ரக்அத்துகள் தொழுது இறைவனிடம் என் நிலையை எடுத்துச் சொன்னேன்."

நபி (ஸல் ) அவர்கள், "அல்லாஹ் உங்கள் கோரிக்கையை ஏற்று உங்கள் கணவர் உங்களை தாய்க்கு ஒப்பிட்டுப் பேசியது செல்லாது. அதாவது அது தலாக்காக ஆகாது என்று சொல்லிவிட்டான்; எனவே நீங்கள் உங்கள் கணவரோடு சேர்ந்து வாழுங்கள்" எனச் சொல்லி அனுப்பி வைத்தார்கள்.

இவ்வளவு பெரிய அண்டத்தில், ஆகச் சிறிய பூமியில், அதில் மதீனா என்னும் சின்ன நிலப்பரப்பில், அதில் கவ்லா அம்மையாரின் சின்ன குடிசை வீட்டிலிருந்து கொண்டு அந்த அம்மையார் அல்லாஹ்வை தொடர்பு கொண்டு தம் கோரிக்கையை முன்வைத்ததும் அது அகிலத்தின் அதிபதி அல்லாஹ்வைச் சென்றடைந்திருக்கிறது என்றால் அது தொழுகையின் மூலம் தானே நிகழ்ந்துள்ளது.

எனவே நாம் தொழுகையில் தக்பீரை கட்டி விட்டால் இறைவனோடு பேசுகிறோம். அப்படி பேசியதால்தான் அந்த அம்மையாருக்கு உடனே பதில் அளிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள் மீது இட்டுக் கட்டப்பட்ட செய்தி பரவி வந்த நேரத்தில் நபி (ஸல்) அவர்களின் நடைமுறை அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களுக்கு மிகவும் துன்பமாக இருந்தது.

அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களும் என் விஷயத்தில் அல்லாஹ் தீர்ப்பளிப்பான் என்று சொல்லிவிட்டு தொழுது துஆ செய்தார்கள். மறுகணமே அந்நூர் அத்தியாயத்தில் பத்து வசனங்கள் அருளப்பட்டு அவர்கள் பத்தினி என இறைவன் பறை சாற்றினான்.

எனவே தொழுகை மூலம் இறைவனை உடனே தொடர்பு கொள்ள முடியும் என்பதை மனதில் நிறுத்தித் தொழுங்கள்.

## ஆபத்தையும் பொருட் படுத்தாமல் மக்களுக்கு உதவி செய்து மனித நேயத்தை நிரூபித்த குஜராத் முஸ்லிம்கள்!

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் வதோதரா பகுதியில் ஆதரவற்ற மக்களுக்கு உதவி செய்யும் வகையில் களத்தில் இறங்கிய அப்பகுதி முஸ்லிம் மக்களின் மனிதநேயம் "இதுதான்இந்தியா" என அனைவரின் பாராட்டுதல் களையும் பெற்றுள்ளது.

குஜராத்தில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத வெள்ளம் மாநிலத்தையே புரட்டி போட்டுள்ளது. பெய்து வரும் பெருமழை காரணமாக ராஜ் கோட், ஆனந்த், அகமதாபாத், பாரூட் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளம் தீவிர பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வதோதரா உள்ளிட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தில் முதலைகளும் அடித்து வரப்பட்டதால் மக்கள் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

மேலும் வெள்ளம் பாதிக்கப் பட்ட பகுதிகளில் இராணுவம் மற்றும்பேரிடர் மீட்புக்குழுவின ரால் பொதுமக்கள் சுமார் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடத் தில் தங்க வைக்கப்பட்டனர்.

இதனிடையே வதோதரா பகுதியில் வெள்ளத்தில் சிக்கி மாடியில் தஞ்சம் அடைந்துள்ள மக்களுக்கு கழுத்தளவு தண்ணீ ரில் நீந்திச் சென்று முஸ்லிம் கள் உணவளித்தார்கள். வெள்ள நீரின் அளவையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கு உதவி செய்யும் வகையில் களத் தில் இறங்கிய அப்பகுதி முஸ்லிம் மக்களின் மனித நேயம் குறித்த இந்த வீடியோ சமூக வலைதளங்களில் அனை வரின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.

## வக்ஃபு திருத்த சட்ட மசோதாவிற்கு எதிராக நாடு தழுவிய போராட்டம்!

வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடு தழுவிய போராட்டத்திற்கு ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சித் தலைவர் அசதுத்தீன் உவைஸி அழைப்பு விடுத்துள்ளார்.

சுதந்திரத்திற்கு முன்பிருந்தே முஸ்லிம் செல்வந்தர்களும், முஸ்லிம் மன்னர்களும் தங்களதுநிலங்கள் மற்றும் தங்களது கட்டுப்

பாட்டிலிருந்த சொத்துகள் ஆகியவற்றை இறைவனுக்கு தானமாக வழங்கினர். இத்தகைய சொத்துக்கள் "வக்ஃப்" சொத்துக் கள் எனக் குறிப்பிடப்பட்டு அவை பராமரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றன.

இவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு முஸ்லிம்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பள்ளிவாசல்கள் மற்றும் ஆன்மிக தலங்கள், தர்ஹாக்கள் பராமரிப்பு, கல்வி மேம்பாடு உள்ளிட்டவற்றிற்கும் செலவிடப்பட்டு வருகிறது.

இந்த சொத்துக்களை பராமரிக்க 1954ஆம் ஆண்டு வக்ஃபு சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டத்தின்படி மாநில அரசுகளால் மாநில வக்ஃபு வாரியங்கள் நிறுவப்பட்டன. இந்த அமைப்புகள் வக்ஃபு சொத்துக்களை நிர்வகித்து வருகின்றன. இதன்கீழ் மாவட்ட வக்ஃபு குழுக்கள் செயல்படுகின்றன.

இதற்கிடையே இந்த சட்டத்தில் திருத்தம் செய்ய மத்திய அரசு திட்டமிட்டது. வக்ஃபு சட்டத்தில் 40 திருத்தங் களை செய்வதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இதனைத் தொடர்ந்து வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதா கடந்த ஆகஸ்ட் 8ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்க் கட்சிகளின் கடும் எதிர்ப்பால் அந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்பப் பட்டது. மேலும், வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதா பற்றி முஸ்லிம்களிடம் கருத்து கேட்க, பாரதீய ஜனதா சிறு பான்மையினர் பிரிவு சார்பில் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினர், நாடு முழு வதும் உள்ள முஸ்லிம்களிடம் வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதா குறித்த கருத்துக்களை கேட்டு நாடாளுமன்ற கூட்டுக் குழுவிடம் தெரிவிக்கவுள்ளனர்.

இந்த நிலையில் வக்ஃபு வாரிய சட்ட திருத்த மசோதா விற்கு எதிராக நாடு முழுவதும் போராட்டம் நடத்த ஆல் இந்தியா மஜ்லிஸே இத்திஹாதுல் முஸ்லிமீன் கட்சியின் தலை வரும், ஹைதராபாத் தொகுதி எம்.பி.யுமான அசதுத்தீன் உவைஸி அழைப்பு விடுத்துள்ளார்.

## புல்டோசர்கள் இடித்து நொறுக்குவதற்கல்ல...

அண்மையில் தெலுங் கானாவில் ஏற்பட்ட வெள்ளத் தின்போது முன்னேறு ஆற்றின் குறுக்கேயுள்ள பிரகாஷ்நகர் பாலத்தில் 9 பேர் சிக்கிக் கொண் டனர். வெள்ளத்தின் போக்கு அதிகமாக இருந்ததால் அவர்

களைக் காப்பாற்றுவது பெரும் சவாலாக இருந்த நேரத்தில் தம் உயிரையும் துச்சமாக மதித்து, அவர்களைக் காப்பாற்ற முன் வந்தார் சுப்ஹான் கான். அவருக்குத் துணை நின்றார் வெங்கடரமணா.

ஹரியானா மாநிலம் மேவாட் மாவட்டத்தைச் சேர்ந்த சுப்ஹான்கான் பிரகாஷ் நகரில் கடந்த 7 ஆண்டுகளாக ஜே.சி.பி. ஓட்டுநராகப் பணியாற்றி வருகிறார். “நான் உயிரிழந்தாலும் பரவாயில்லை. ஒரேயொரு உயிர் தான் போகும். நான் பிழைத்தால் ஒன்பது உயிர்களுடன் திரும்பி வருவேன்” என்று கூறி சுப்ஹான் கான் புல்டோசரை எடுத்தார். “35 இலட்சம் மதிப்பிலான ஜே.சி.பி. போனாலும் பரவாயில்லை. உயிரைக் காப்பாற்றுங்கள்” என்று கூறி சுப்ஹானுக்கு உறுதுணையாக நின்றார் ஜே.சி.பி. உரிமையாளர் வெங்கட்ரமணா.

அடித்துப் புரண்டுவரும் வெள்ளச் சுழற்சிக்கு மத்தியில் ஜே.சி.பியைச் செலுத்தினார் சுப்ஹான். பாதிகூடச் செல்ல முடியவில்லை. திரும்பிவிட்டார். மீண்டும் முயன்றார்; முடியவில்லை; திரும்பிவிட்டார். இறுதியாகப் போராடிச் சென்றார். 9 பேரையும் பத்திரமாக மீட்டுத் திரும்பினார் சுப்ஹான் கான்.

“என் தந்தை உள்ளே செல்லும்போது நான் நடுங்கினேன். ஆனால் அவர் சாதித்துக் காட்டிவிட்டார்” என்று நெகிழ்கிறார் சுப்ஹான் கானின் மகள்.

B.R.S. தலைவரும், முன்னாள் அமைச்சருமான K.T. ராமாராவ் உள்ளிட்ட பலரும் சுப்ஹானின் துணிச்சலையும், முயற்சியையும் பாராட்டி வருகின்றனர். சமூக ஊடகங்களில் ‘புல்டோசர் ஹீரோ’ என சுப்ஹானைப் பாராட்டி பலரும் பதிவிட்டு வருகின்றனர்.

உத்தரபிரதேசம், ஹரியானா போன்ற பாரதீய ஜனதா ஆளும் மாநிலங்களின் அரசுகள் முஸ்லிம்களின் வீடுகளையும், கடைகளையும், வழிபாட்டுத் தலங்களையும் வெறுப்பினால் இடித்துத் தரைமட்டமாக்கி விட்டு, தங்களை புல்டோசர் பாபா என பெருமிதமாகக் கூறி வரும் நிலையில், “புல்டோசரை எப்படி பயன்படுத்த வேண்டும்? என்று உத்தரபிரதேச முதலமைச்சரைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்” என்று பிரதமர் மோடி கூறி வரும் வேளையில், புல்டோசரை எப்படி பயன்படுத்த வேண்டும்? என்று பிரதமருக்கு மட்டுமல்ல; உலகிற்கே பாடம் புகட்டியிருக்கிறார் உண்மையான புல்டோசர் ஹீரோவான சுப்ஹான் கான்.

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்

**94420 56547**

## நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் சூடான காரசார விவாதம்!

வக்ஃபு வாரிய சட்டத் திருத்த மசோதா குறித்து ஆய்வு செய்ய ஜெகதாம்பிகா பால் தலைமையில் அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் காரசார விவாதம் நடைபெற்றது. காங்கிரஸ், தி.மு.க. மற்றும் ஆளும்கட்சியை ஆதரிக்கும் தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### இரண்டாவது கூட்டம்

வக்ஃபு வாரிய சட்ட திருத்தம் குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் முதல் கூட்டம்கடந்த ஆகஸ்ட் 22ஆம் தேதி டெல்லியில் நடைபெற்றது. முதல் கூட்டம் நடைபெற்ற போது, குழுவில் இடம் பெற்றுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து கருத்துக்களை தெரிவித்தனர். இதையடுத்து, வக்ஃபு வாரியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சொத்துக்களை அரசு கையகப்படுத்தாது என்றும், வக்ஃபு வாரியத்தின்கட்டுப்பாட்டில்தான் இருக்கும் என்றும் நாடாளுமன்ற கூட்டுக்குழுத் தலைவர் ஜெகதாம்பிகா பால் விளக்கம் அளித்திருந்தார். மேலும், வக்ஃபு வாரிய சட்டத் திருத்த மசோதா குறித்து முஸ்லிம் அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினிடம் ஆலோசிக்கப்படும் என அவர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் இரண்டாவது கூட்டம் குழுவின் தலைவர் ஜெகதாம்பிகா பால் தலைமையில் டெல்லியில் நடைபெற்றது. 31 உறுப்பினர்கள் பங்கேற்ற இந்தக் கூட்டம் காலை 11 மணிக்கு தொடங்கி இரவு 7 மணி வரை நடைபெற்றது.

இந்தகூட்டத்தில் இந்தியன் முஸ்லிம் சிவில் உரிமைகள் (ஐ.எம்.சி.ஆர்.) அமைப்பைச் சேர்ந்த வழக்கறிஞர் பூசைல் அஹமது அய்யூபி, அகில இந்திய சன்னி ஜம்இய்யத்துல் உலமா அமைப்பு உள்ளிட்ட பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் மற்றும் பல்வேறு தரப்பினர் பங்கேற்று, தங்களது கருத்துக்களை மிகத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் எடுத்து வைத்தனர்.

### சூடான விவாதம்

கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் வக்ஃபு வாரிய நிர்வாகம் மற்றும் சொத்துக்கள் அனைத்தையும் நிர்வாகிக்கும் அதிகாரத்தை எப்படி மாவட்ட ஆட்சியருக்கு கொடுக்கலாம்? என கேள்வியெழுப்பினார்கள். இதனால் பாரதீய ஜனதா ஆதரவு எம்.பி.க்கள் மற்றும் எதிர்க்கட்சி

# நிரந்தர நன்மை பெற ஓடி வாருங்கள்!

அன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்....

வேலூர் மாவட்டம் அரியூரில் அமைந்துள்ள **ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரியில்** பயிலும் மாணவர்களின் இட நெருக்கடியைப் போக்கும் விதத்தில் அருகிலுள்ள காலி இடம் **(ரூபாய் ஒரு கோடியே நாற்பது இலட்சம்)** விலை பேசப்பட்டு அதை வாங்குவதற்காக கடந்த ஓராண்டாக தங்களைப் போன்ற நல்லுள்ளம் கொண்டவர்களிடம் உதவி வேண்டி கோரிக்கை வைத்திருந்தோம். அதன்படி, தாங்கள் செய்த பெரிய உதவிகளின் மூலம் நிறைந்த பணங்களைப் பெற்றுக் கொண்டோம். அல்ஹம்துலில்லாஹ் !

இன்னும் ரூபாய் 30 இலட்சங்கள் தேவைப்படுவதால் தயாள சிந்தனையுள்ளவர்கள் தாராளமாக அள்ளிக் கொடுத்து உதவினால் இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் மேற்படி இடத்தை முழுமையாக நாம் பெற்றுக் கொள்ள உதவியாக இருக்கும்.

**எனவே, விரைவாக தங்களின் பேருதவிகளை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.**

தங்களின் இந்த உதவியால் கியாமத் நாள் வரை தங்களுக்கும், தங்கள் பெற்றோர் மற்றும் தாங்கள் யாருக்காக நிய்யத் செய்தீர்களோ அவர்களுக்கும் ஸதக்கா ஜாரியாவாக தொடர்ந்து நன்மைகள் கிடைத்துக் கொண்டே இருக்கும் இன்ஷா அல்லாஹ்.

इंडियन बैंक Indian Bank

| | |
|---|---|
| ஒரு சதுர அடி ரூபாய் | **1,000/-** |
| ஒரு முஸல்லா அளவு ரூபாய் | **6,000/-** |

**AZEEZIA EDUCATIONAL & CHARITABLE TRUST**

**A/C No. : 6845938157**

**BRANCH NAME : ARIYUR**

**IFSC CODE : IDIB000A198**

Estd.: 2007.1427

**மேலும் விபரங்களுக்கு :**

மவ்லானா **உபைதுல்லாஹ்** சாஹிப் காஸிமி, நிறுவனர் & முதல்வர்

## ஜாமிஆ தக்வியதுல் இஸ்லாம் அரபிக் கல்லூரி

அஜீஸ் நகர், அரியூர், வேலூர்–632055. தமிழ்நாடு Cell : 9443491834

எம்.பி.க்கள் மற்றும் பல்வேறு முஸ்லிம் அமைப்புகள் மூலம் சூடானவிவாதம் நடைபெற்றது.

"வக்ஃபு வாரியம் என்பது முஸ்லிம்களின் அடையாளம் என்றும், அதை எப்படி மாற்றியமைக்க முடியும்?" என்றும் சமாஜ்வாதி கட்சி எம்.பி. முஹிப்புல்லாஹ் கேள்வியெழுப்பினார். இதேபோன்று பேசிய அகில இந்திய மஜ்லிஸே இத்திஹாதுல்முஸ்லிமீன்கட்சித் தலைவர் அசதுத்தீன் உவைஸி "வக்ஃபு வாரிய சொத்துக்கள் மாநில அரசுகளின் நிர்வாகத்தின் கீழ் மற்றும்கட்டுப்பாட்டில் மட்டுமே வர வேண்டும்" என வலியுறுத்தினார். வக்ஃபு சொத்துக்கள் குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக தானம் செய்யப்பட்ட நிலையில், வக்ஃபு என்ற பெயரை மாற்றியமைத்து, புதிய சட்டம் கொண்டு வருவது ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட வக்ஃபு சொத்துக்களை மீட்க வழி ஏற்படாது என்றும் மேலும் ஆக்கிரமிப்பு செய்யப்படும் சூழல்தான் ஏற்படும் என்றும் குற்றம்சாட்டினர். இதேபோன்று பேசிய ஆம் ஆத்மி எம்.பி. சஞ்சய் சிங் 'அரசியலமைப்புச் சட்டத்தை பாரதீய ஜனதா கொஞ்சங் கூட மதிக்கவில்லை' என்று விமர்சனம் செய்தார்.

## வெளிநடப்பு

வக்ஃபு வாரிய சட்டம் 1995 பிரிவு 40இன் கீழ் வக்ஃபு நிலமா, இல்லையா? என்பதை வக்ஃபு வாரியங்களே தற்போது முடிவு செய்து வரும் நிலையில், இந்தப் பிரிவு 40-ஐ நீக்குவதன் நோக்கம் குறித்து, தி.மு.க. எம்.பி. ஆ.ராசா கேள்வியெழுப்பினார். இதற்கு சிறுபான்மையினர் விவகாரங்கள் துறை அமைச்சக அதிகாரிகள் தெளிவான விளக்கமளிக்கவில்லை. மேலும், பல்வேறு அமைப்புகள் சார்பில் பங்கேற்றவர்கள் எழுப்பிய சந்தேகங்கள் மற்றும் கேள்விகளை குழுவின் தலைவர் ஜெகதாம்பிகா பால் அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டத்திலிருந்து காங்கிரஸ், தி.மு.க., ஆம் ஆத்மி உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அவர்களுடன் இணைந்து தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் ஆகிய ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள இரண்டு முக்கிய கட்சிகளைச் சேர்ந்த எம்.பி.க்களும் வெளிநடப்பு செய்தனர்.

முஸ்லிம் அமைப்புகள் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தங்களது கருத்துக்களை பதிவு செய்ய குழுவின் தலைவர் ஜெகதாம்பிகா பால் அனுமதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## உலகையே உலுக்கிய இரண்டு திகிலூட்டும் சம்பவங்கள் அமெரிக்காவில் நடந்துள்ளன

பலஸ்தீனியர்களை குண்டு வீசி தாக்குவதில் இஸ்ரேலுடன் நேரடியாக ஈடுபட்டுள்ள அமெரிக்காவில் இரண்டு மாகாணங்கள் உள்ளன.

அமெரிக்கா இல்லாமல் இஸ்ரேல் போராட முடியாது. இந்நிலையில், அங்குள்ள இரண்டு அமெரிக்க மாகாணங்களை பற்றி பார்ப்போம். ஒரு மாகாணம் வட கரோலினா, மற்றொன்று புளோரிடா.

அவற்றின் முக்கியத்துவம் என்னவென்றால், வடகரோலினா என்பது அமெரிக்காவின் இராணுவ மையமாகும். இந்த மாநிலத்தில் சுமார் 10 மில்லியன் மக்கள் தொகைஉள்ளது. மேலும், கிட்டத்தட்ட முழு மக்களும் இராணுவ உபகரணங்களை தயாரிப்பதில் அல்லது இராணுவ தளங்களை இயக்குவதில் ஈடுபட்டுள்ளனர். இங்கே பெரிய அமெரிக்க தளங்கள் உள்ளன. இங்கிருந்து குண்டுகளை ஏற்றிச் செல்லும் சரக்கு விமானங்கள் புறப்பட்டுச்சென்று இஸ்ரேலுக்கு குண்டுகளை வழங்குகின்றன. அவற்றை இஸ்ரேல் பலஸ்தீனியர்கள் மீது வீசுகிறது.

இங்கிருந்து இஸ்ரேலுக்கு ஆயுதமேந்தி விமானங்கள் புறப்படும்போது "பலஸ்தீனியர்களை கொல்லுங்கள்; பலஸ்தீனியர்களைக் கொன்றுவிடுங்கள்" என்று ஆரவாரம் செய்யுமளவிற்கு இங்குள்ள மக்கள் இஸ்ரேலின் பலமான ஆதரவாளர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

புளோரிடாவில், அமெரிக்காவின் பணக்கார யூதர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் தான் அமெரிக்க ஆட்சியில் செல்வாக்கு செலுத்தும் யூதர்கள். இவர்கள் இஸ்ரேலுக்கு உதவிகளை அனுப்புகிறார்கள். பின்னர் அவை வடகரோலினாவுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கு அவை விமானங்களில் ஏற்றப்பட்டு அனுப்பப்படுகின்றன.

புளோரிடா நிதி மற்றும் அரசியல்சக்தியைக் குறிக்கிறது.

வட கரோலினா இராணுவ சக்தியைக் குறிக்கிறது.

இந்நிலையில் சென்ற மாதம் அல்லாஹ் கடலிலிருந்து ஒரு பெரிய புயலைஎழுப்பினான். அதற்கு மேற்கத்தியர்கள் 'ஹெலினா' என்று பெயரிட்டனர். இந்தப் புயல் கடலிலிருந்து எழுந்து மற்ற எல்லா மாகாணங்களையும் கடந்து வடகரோலினாவில் நேராக வெடிகுண்டுகளை வீசும் ஒரு பெரிய குண்டு வீச்சாளர் போல நேரடியாகத் தாக்கியது. இப்போது வட கரோலினாவின் நிலைமை என்ன?

ஆனால், அதற்கு முன் ஒரு சுவாரஸ்யமான உண்மையைப் பகிர்ந்து கொள்வோம்.

பலஸ்தீனத்தை மீண்டும் கட்டியெழுப்ப $35 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவாகும் என்று உலகவங்கி மதிப்பிட்டுள்ளது.

முன்னோக்கி நகர்ந்து இந்த 'ஹெலினா' புயல் வட கரோலினாவைத் தாக்கியது மற்றும் பலத்த மழை மற்றும் வெள்ளத்தை ஏற்படுத்தியது. இந்த நேரத்தில், வடகரோலினாவின் 10 மில்லியன் மக்கள் தொகையில், கணிசமான பகுதியினர் ஏற்கனவே வீடற்றவர்களாகி விட்டனர். அவர்களுக்கு குடிநீர் இல்லை; உடைகள் இல்லை; உணவு இல்லை; தங்குமிடம் இல்லை. அவர்கள் திறந்த வானத்தின் கீழ் கிடக்கின்றனர்.

அமெரிக்க அரசாங்கம் வட கரோலினாவை மீண்டும் கட்டியெழுப்ப எவ்வளவு செலவாகும் என்று மதிப்பிடுகிறது? ஆம் $35 பில்லியன் அமெரிக்க டாலர்.

இப்போது புளோரிடாவுக்கு செல்லலாம். மெக்ஸிகோ வளைகுடாவிலிருந்து எழும் மற்றொரு புயல், உலகின் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகளை ஏற்றிய பெரிய குண்டுவீச்சைப் போல புளோரிடாவை நோக்கிச் சென்றது. இந்நிலையில், மணிக்கு 180 மைல் வேகத்தில் வீசிய காற்று, மனிதகுலம் இது வரை கண்டிராத காற்று, கடலில் சுழன்று புளோரிடாவை நோக்கி நகர்ந்தது. புளோரிடா மாநிலம் முழுவதும் இந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகியது. புளோரிடாவில் 22 மில்லியன் மக்கள் உள்ளனர். அதில் ஒரு சில மில்லியன் மக்கள் மட்டுமே பாதுகாப்பாக உள்ளனர். மீதமுள்ளவர்கள் வீடற்றவர்களாக மாறியுள்ளனர். இந்த புயல் கடுமையாக இருப்பதால் மாகாணம் முழுவதுமுள்ள மக்கள் வெளியேற்றப்பட்டனர். புளோரிடாவை மீண்டும் கட்டியெழுப்ப அமெரிக்காவிற்கு எவ்வளவு செலவாகும்? 200 பில்லியன் அமெரிக்க டாலர்கள்.

அல்குர்ஆனில் அல்லாஹ் பூமியில் பயணம் செய்து, அக்கிரமக்காரர்களுக்கு எப்படி

## நிலம் சம்பந்தப்பட்ட தகராறுக்கான தண்டனை!

ஹஸ்ரத் அபூசலமா அப்துல்லாஹ் பின் அப்திர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : எனக்கும், என் கூட்டத்தாருக்குமிடையே ஒரு நிலம் தொடர்பாகத் தகராறு இருந்து வந்தது. நான் ஹஸ்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்களிடம் சென்று அதைப் பற்றிக் கூறினேன். ஹஸ்ரத் அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள், "அபூசலமா! மண்ணாசையைத் தவிர்த்துக் கொள்க! ஏனெனில், அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்கள், "யார் அநியாயமாக ஒரு சாண் அளவு நிலத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறாரோ அவரது கழுத்தில் அந்த நிலத்தி(ன் மேற்பகுதியி)லிருந்து ஏழு பூமிகள்வரை (செல்லும் பகுதி) மாலையாக மாட்டப்படும்" என்று கூறியுள்ளார்கள்" என்றார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

தண்டனைகளை அனுப்பினான்? என்பதை கவனிக்குமாறு இரண்டுமுறை குறிப்பிடுகிறான்.

**“நிலத்தில் பயணம் செய்யுங்கள்; பின்னர் நிராகரிப்பவர்களின் முடிவு எப்படி இருந்தது? என்பதைக் கவனியுங்கள்” என்று (நபியே!) நீர் கூறுவீராக.** -அல்குர்ஆன் (6 : 11)

**“பூமியில் பயணம் செய்து, முன்னோர்களின் முடிவு எப்படி இருந்தது? என்பதைக் கவனியுங்கள். அவர்களில் பெரும்பாலோர் பல தெய்வ வழிபாடு செய்பவர்கள்” என்று (நபியே! ) நீர் கூறுவீராக.**

-அல்குர்ஆன் (30 : 42)

அப்படியானால், இது அல்லாஹ்வின் தண்டனை அல்லவா? அல்லாஹ்வைப் பற்றிய பயம் நம் உள்ளத்தில் பதிய, இந்த தண்டனையைப் பற்றி நம் குழந்தைகளுக்கும், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க வேண்டாமா? அடக்குமுறையாளர்களுக்கு இந்த தண்டனை பலஸ்தீனியர்களின் ஒரு வருட போராட்டம் மற்றும் தியாகத்திற்குப் பிறகு வந்துள்ளது. மேலும் நம்மால் முடிந்ததை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும். பிரார்த்தனைகளின் சக்தியை ஒரு போதும் குறைத்து மதிப்பிடக்கூடாது.

செய்தி :

**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**




எங்களிடம்

திருமண சீர்வரிசை பாத்திரங்கள், பிரஷர் குக்கர், மிக்ஸி, கிரைண்டர், கேஸ் ஸ்டவ், பரிசுப்பொருட்கள் அனைத்தும் தரமான, நியாயமான விலையில் கிடைக்கும்.

**214/182, கீழவெளி வீதி, மதுரை-625001.**
**செல் : 9944001362**

தென்காசி மஸ்ஊது

## எலும்பு

அனைத்து வயதினருக்கும் வலுவான எலும்புகள் மற்றும் மூட்டுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்த ஆண்டுதோறும் இந்தியாவில் ஆகஸ்ட் முதல் வாரம் தேசிய எலும்பு மற்றும் மூட்டு விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

அதன்படி இந்திய எலும்பியல் சங்க அறிவுறுத்தலின்படி திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி எலும்பியல் சிகிச்சை பிரிவு மற்றும் திருநெல்வேலி டவுன் ரோட்டரி கிளப் இணைந்து விழிப்புணர்வு பேரணியை நடத்தின.

- இந்து தமிழ் திசை (08-08-24)

"நாம் [இறந்து] எலும்பாகி, [உக்கி,] மக்கிப் போனதன் பின்னர், புதிய படைப்பாக உயிர்ப்பிக்கப்படுவோமா?" என்று அவர்கள் கேட்கின்றார்கள்." - அல்குர்ஆன் (17 : 49)

"அவன் தன்னுடைய சிருஷ்டியை [தான் எப்படி சிருஷ்டிக்கப்பட்டான்] என்பதை மறந்து விட்டு ஓர் உதாரணத்தை நம்மிடம் எடுத்துக் காட்டுகின்றான்; "உக்கி மண்ணாகிப் போன [இந்த] எலும்புக்கு உயிரூட்டுபவன் யார்?" என்று அவன் கேட்கிறான்."

- அல்குர்ஆன் (36 : 78)

"பின்னர் அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாக்கினோம். பின்னர் அவ்விரத்தக் கட்டியை மாமிசப் பிண்டமாகச் செய்தோம். பின்னர் அம்மாமிசப் பிண்டத்திலிருந்து எலும்பை உற்பத்தி செய்து, அவ்வெலும்புக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர் அதனை[ப் பூரணமான] மனித சிருஷ்டியாக அணிவித்தோம். [இவ்வாறு சிருஷ்டித்த] அல்லாஹ், பெரும் பாக்கியமுடையவன். [அவன்] சிருஷ்டி கர்த்தாக்களிலெல்லாம் மிக்க அழகானவன்"

- அல்குர்ஆன் (23 : 14)

# மிஸ்வாக்

மவ்லானா முஃப்தீ அஹ்மதுல்லாஹ் காஷிஃபீ காஸிமீ

15. மிஸ்வாக் செய்யும்போது குர்ஆன் ஓதுவதற்காக அல்லது தொழுகையில் அல்லாஹ்வை நினைவு கொள்வதற்காக என் வாயை சுத்தம் செய்கிறேன் என்று நிய்யத் செய்து கொள்ள வேண்டும். (இஹ்யா உல் உலூம் - தர்ஜுமா)

16. வாயில் ஏதேனும் வலி இருந்தாலே தவிர மிஸ்வாக் இருக்கும்போதே விரலைக் கொண்டு மிஸ்வாக் செய்தால் மிஸ்வாக் செய்ததின் நன்மை கிடைக்காது. (மராகில் ஃபலாஹ்)

17. நீண்ட நேரம் மிஸ்வாக் செய்து கொண்டு பற்களை தேய்த்துக் கொண்டே இருப்பதினால் பற்கள் ஆடி விழுந்துவிடக் கூடும் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

18. கீழ்வரும் துஆவை மிஸ்வாக் செய்யும்போது ஓதிக் கொள்ளலாம்.

اَللّٰهُمَّ طَهِّرْ فَمِىْ وَنَوِّرْ قَلْبِىْ وَطَهِّرْ بَدَنِىْ وَحَرِّمْ جَسَدِىْ عَلَى النَّارِ

وَادْخِلْنِىْ بِرَحْمَتِكَ فِىْ عِبَادِكَ الصَّالِحِيْنَ

“அல்லாஹும்ம தஹ்ஹிர் ஃபமீ வனவ்விர் கல்பீ வதஹ்ஹிர் பதனீ வஹர்ரிம் ஜஸதீ அலன்னாரி வஅத்ஹில்னீ பிரஹ்மதிக ஃபீ இபாதிகஸ் ஸாலிஹீன்”

(உம்ததுல் காரீ, பாகம் 10, பக்கம் : 39)

**இறைவா! என் வாயை பரிசுத்தப்படுத்துவாயாக. என் உள்ளத்தை ஒளிமயமாக்கி உடலையும் தூய்மைப்படுத்துவாயாக! என்னை நரகத்தை விட்டும் பாதுகாப்பாயாக! உன் கிருபை மூலம் உன்னுடைய நல்லடியார்களோடு என்னையும் சேர்த்து விடுவாயாக!**

19. பிரஸ் பன்றியின் முடிகளால் செய்யப்பட்டது என்று உறுதியாக தெரிந்துவிட்டால் அதை பயன்படுத்துவது கூடாது. சந்தேகம் இருப்பின் தவிர்ப்பது சிறந்தது. பன்றியின் முடி இல்லையென்றால் உபயோகிப்பது கூடும். ஆனால்,

மிஸ்வாக்கின் அந்தஸ்து கிடையாது. எப்பொழுதாவது மிஸ்வாக் இல்லாத சமயத்தில் வெறுமனே பிரஷ் அல்லது விரலைக் கொண்டு பற்களை சுத்தம் செய்து கொள்வது (நிர்பந்தத்தின் காரணத்தால்) மிஸ்வாக் செய்ததைப்போன்றாகும். இருந்தாலும் மிஸ்வாக்குடைய சிறப்பு கிடைக்காது. தேவையின்றி உபயோகிப்பது சுன்னத்திற்கு மாற்றமாகும். (தர்ஸே திர்மிதீ, பாகம் - 11, பக்கம் - 226, 227)

20. மிஸ்வாக் செய்யும் பகுதி அதிகம் மென்மையாகவோ அதிகம் கடினமாகவோ இல்லாமல் நடுத்தரமான நிலையில் மிருதுவாக இருக்க வேண்டும். (தஹ்தாவீ)
21. மிஸ்வாக் குச்சி வளைவின்றி நேராகவும் கணு இல்லாததாகவும் இருப்பது சிறந்தது. (தஹ்தாவீ)
22. மிஸ்வாக் மீது தூசி படிந்திருந்தால் ஒளு செய்யும் தண்ணீருள்ள பாத்திரத்தில் நுழைப்பது மக்ரூஹாகும். (தஹ்தாவீ)
23. கழிவறையில் மிஸ்வாக் செய்வது மக்ரூஹாகும்.
24. மிஸ்வாக்கை இரண்டு புறமும் பயன்படுத்தக்கூடாது.
25. பள்ளியில் மிஸ்வாக் செய்வது ஆகுமானதாக இருந்தாலும் மிஸ்வாக்காக செய்வதால் வாயின் துர்நாற்றம் நீங்குவதால் பள்ளியை அந்த நோக்கத்திற்காக வழமையாக (வாயை சுத்தப் படுத்தும் எண்ணத்துடன்) பயன்படுத்துவது மக்ரூஹாகும். (பத்லுல் மஜ்ஹூத்)
26. மரங்களின் தன்மையை அறியாமல் அதன் குச்சியை மிஸ்வாக்கை பயன்படுத்தக்கூடாது. விஷம் நிறைந்ததாக இருக்கக்கூடும். (திப்பே நபவீ, பக்கம் 215)
27. மிஸ்வாக் காய்ந்ததாக இருந்தால் அதை தண்ணீரால் நனைத்துக் கொள்வது முஸ்தஹப் ஆகும். (தஹ்தாவீ, பக்கம் 67)
28. மற்றவர்களின் மிஸ்வாக்கை அனுமதியோடு செய்வது ஆகுமானதாகும். கழுவி பயன்படுத்த வேண்டும். அனுமதியின்றி செய்வது மக்ரூஹாகும். (மன்ஹல், பக்கம் - 181) ஸிஆயா - 117)
29. மிஸ்வாக் குச்சியை உறிஞ்சும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. (ஸிஆயா, பக்கம் 119)

30. மிஸ்வாக் மூன்று முறை செய்வது முஸ்தஹப்பாகும். ஒவ்வொரு முறையும் கழுவிக் கொள்வதும் முஸ்தஹப்பாகும். (ஷாமீ, பக்கம் 114)

31. குளிப்பிலும் மிஸ்வாக் செய்வது சுன்னத்.

## மிஸ்வாக் சம்பந்தமான சில சட்டதிட்டங்கள்

★ மிஸ்வாக் மூலம் அடித்துவிட்டால் தவறல்ல. (கன்ஜுல் உம்மால் 39821)

★ மிஸ்வாக் செய்தால் வாந்திவரும் என்ற அச்சமிருந்தால் விட்டுவிட அனுமதியுண்டு. (ஆலம்கீரி)

★ நோன்பு நேரத்தில் மிஸ்வாக் செய்வது கூடும். ஷாஃபியாக்கள் ஜவாலுக்கு (உச்சத்திற்கு) முன்பு வரை மிஸ்வாக் செய்யலாம்.

★ சிறுவர்களுக்கும் மிஸ்வாக் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். (திப்பே நபவீ)

★ ஹரம் ஷரீஃபில் விளைந்த உஹா மரக்குச்சியின் மூலம் மிஸ்வாக் செய்வது கூடாது. (ஷாமீ)

(தொடரும்)

---

வாழ்த்துக்களுடன் ...!

☎ 04175 - 223786
222528 (E)

மலைவலம் வரும் நகரில்
கலை நயம் பொருந்திய

பூம்புகார்

துணியகம் & ஆடையகம்!

55 தேரடி வீதி திருவண்ணாமலை - 606 601

# கோமாளியாக்கப்பட்ட கோமான் முஹம்மது பின் துக்ளக்

வரலாற்றுப் பேரறிஞர் "தாரீகுல் மில்லத்"
**செ.திவான் M.A.,M.Phil.,**

## மவ்லானா சிராஜுத்தீன் உஸ்மான்

மவ்லானா சிராஜுத்தீன் உஸ்மான் (Moulana Siraj - Uddin Usman) தௌலதாபாத்திற்கு இறைப்பணிக்கு விரும்பிச் சென்றார்கள். இஸ்லாம் மார்க்கத்தினை மக்கள் தழுவச் செய்தார்கள்.

## மவ்லானா சிகாபுதீன்

முஹம்மதுபின் துக்ளக் கட்டளையை ஏற்று தௌலதாபாத் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து மீண்டும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் டெல்லிக்கு திரும்பியவர் மவ்லானா சிகாபுதீன் (Moulana Shihab-uddin). தனதுமானசீகக் குருவானஹள்ரத் நிஜாமுத்தீன் அவ்லியா தௌலதாபாத் நகரத்திற்கு முக்கியத்துவம் அளித்து தனது 400 முக்கிய சீடர்களை அனுப்பி அங்கு இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய வைத்து மார்க்கத்தினைத் தழுவச் செய்யக் காரணமாக அமைந்த தௌலதாபாத்தை தனது இரண்டாவது தலைநகரமாக முஹம்மதுபின் துக்ளக் ஆக்கிட விரும்பியது உண்மை.

## கலக வாய்பு குறையும்

முஹம்மது பின் துக்ளக் டெல்லியில் மட்டும் குடியிருக்கமாட்டார். தௌலதாபாத்தில் தங்கியிருப்பார் என்பதால் அங்கு டெல்லி அரசை எதிர்த்து கலகம் செய்பவர்கள், புரட்சி செய்ய நினைப்பவர்கள் கட்டுப்படுத்தப்படுவர் என்பதனையும் முஹம்மது பின் துக்ளக் உணர்ந்திருந்தார்.

## சமய வாழ்வில் வடக்கும், தெற்கும்

தலைநகர மாற்றத்தின் விளைவாக வடக்கு, தெற்குப் பகுதிகளைப் பிரித்திருந்த தடைகள் அகற்றப்பட்டன. இஸ்லாமிய மார்க்கமும், கலாச்சாரமும் தெற்கே வேகமாகப் பரவிடத் துணை புரிந்தது. தௌலதாபாத்திற்கு வந்து வாழ்ந்து, இஸ்லாமியப்பிரச்சாரம் செய்து மறைந்த இறைநேசர்களின் அடக்கஸ்தலங்கள் ஏராளமாக ஏற்பட்டன. அந்த சமாதிகளை ஜியாரத் செய்திட

டெல்லியிலிருந்தும், வடக்கே யிருந்தும் உறவினர்கள் தௌலதாபாத் நோக்கி வந்தார் கள். அவர்களுடைய இதயங் களை தெற்கிலுள்ள மண் ணுடன் இணைக்க இச்சமாதிகள் கருவிகளாக அமைந்தன. இதன் விளைவாக வடக்கும், தெற்கும் இணைய வழி ஏற்பட்டது.

On all the four sides of Dowlathabad there appeared graveyards of Musalmans.

**டெல்லியில் அலுவலகங்கள்**

முஹம்மதுபின் துக்ளக்கின் அரசு அலுவலகங்கள், முதன்மையான அலுவலர்கள் டெல்லியிலேயே முஹம்மது பின் துக்ளக் ஆட்சிக் காலம் முழுமையும் இருந்தது. கி.பி.1337இல் முஹம்மது பின் துக்ளக் தௌலதாபாத்தி லிருந்து டெல்லிக்குத் திரும்பும் மக்களுக்கு அனுமதியளித்தார் என்று மூர்லேண்டு கூறி யுள்ளார்.

தலைநகர் மாற்றம் நல்ல திட்டம். துருக்கியில் இஸ்தான்புல், அங்கோரா, ரஷ்யா வில் செயிண்ட் பீட்டர்ஸ்பர்க், மாஸ்கோ, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியில் கல்கத்தா, சிம்லா அதன்பின் 1911இல் டெல்லிக்கே தலைநகர் மாற்றம். இவ்வாறு வரலாற்றில் தலைநகர் மாற்றம் நடைபெற்றி ராத நிகழ்வல்ல. முஹம்மதுபின் துக்ளக் காலத்தில் நல்ல நோக்கத்தில் நிறைவேற்றப் பட்ட திட்டத்தை சொந்த விருப்பு வெறுப்பு காரணமாக நச்சுக் கருத்துக்களைச் சொல்லி அவரை குற்றவாளி போல சித்தரித்து விட்டார்கள் என்பது வரலாற்று உண்மை.

தென்னிந்தியாவின் பல் வேறு பகுதிகளிலும் பல்வேறு வகைப்பட்ட, பல்வேறு மதிப்புடைய நாணயங்கள் வழக் கில் இருந்ததால் மக்களுக்குப் பல தொல்லைகள் ஏற்பட்டன. ஒரு புதிய ஆளுநருடைய ஆட்சி யிலிருக்கும் மாகாணத்திற்குப் போனால் புதிய நாணயம் தேவைப்படுகிறது. ஆதலால் இன்றைக்கு நமது கையிலிருக் கும் நாணயம் நாளைக்கு செல்லாமற்போகும் என்று சீசர் பிரடரிக் முணுமுணுக்கிறார்.

## அடையாளப் பணமும் அவதூறும்

முஹம்மது பின் துக்ளக் கின் முழு வரலாற்றினையும், மொத்த நிர்வாகத்தையும் அடக்கிய கலகங்கள் பற்றியும், ஆட்சி அதிகார நிர்வாகம் பற்றி யும் எழுதப் போவதில்லை. இனி அவர் கொண்டு வந்த அடையாளப் பணத் திட்டம் (Token Currency) பற்றிய வரலாற்றையும், அதுகுறித்த அவதூறுகளையும், உண்மை களையும் ஆராய்வோம்.

### ரகுநாத் கர்னாட்

போஸ்ட் மார்ட்டம் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர் ரகுநாத் கர்னாட் மும்பை பிரசிடென்சியில் சிர்சா, கன்னடத்து தார்வார் நகரங்களில் பணிபுரிந்தவர்.

### கிருஷ்ணாபாய்

கையில் ஒரு குழந்தை யுடன் இளம் விதவையாக வாழ்ந்த கிருஷ்ணாபாயை செவிலியர் ரகுநாத் கர்னாட் ஐந்து ஆண்டுகள் காதலித்து விதவைத் திருமண எதிர்ப்பு நிலவிய காலத்தில் திருமணம் செய்து கொண்டார்.

### கொங்கன் பிராமணர்

ரகுநாத் கர்னாட் கொங்கன் பிராமணர். தனது மரணத்தின் போது பணம் பறிக்கும் புரோகிதக் கும்பல் வந்து விடக் கூடாது என்று சொல்லிவிட்டு இறந்தார்.

### கிரிஷ்கர்னாட்

ரகுநாத் கர்னாட் - கிருஷ்ணாபாய் தம்பதியரின் நான்கு பிள்ளைகளில் மூன்றா வது பிள்ளை கிரிஷ்கர்னாட் ஆக்ஸ்போர்டில் கல்வி பயின்றவர். இவரது முதல் நாடகம் யாயாதி (1961) (Yayati), இரண்டாவது நாடகம் துக்ளக். 1964இல் கன்னடத் தில் எழுதினார். அது இந்தி, வங்காளி, மராத்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது.

### அலைக்ஹி பாதம்ஸீ

1970இல் அலைக்ஹி பாதம்ஸீ (Alyqhe Padamsee) அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பம்பாய் புலாபாய் அரங்கில் (Bhulabhai Auditorium) அந்நாடகம் நடந்தது. 1975இல் ஆக்ஸ்போர்டு நிறுவனத்தார் அந்த நாடகத்தை நூல் வடிவில் வெளியிட்டனர். 1998இல் 22வது பதிப்பு வெளி வந்தது. 86 பக்கங்களைக் கொண்ட அந்த நூலில் பக்கம் 39இல் கிரிஷ் கர்னாட் எழுதுகிறார்.

**Muhammad :** From next year we shall have copper currency in our empire along with the silver dinars. Exchange in for a silver coin! A copper coin will have the same value as a silver dinar.

**Shihab-uddin :** But I don't understand, your majesty. How can one expect a copper coin to have the same value as a silver one?

**Muhammad :** It is a question of confidence. A question of trust....! the other day I heard that in China they have Paper currency. Paper, mind you and yet it works because the people accept it. They have faith in the Emperor's Seal on the Pieces of Paper.

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் மாபெரும் பேருதவியால்... லப்பைக்! அல்லாஹும்ம லப்பைக்!!

# அல்-பஷாரத் ஹஜ் & உம்ரா சர்வீஸ்

LALPET

லால்பேட்டை | சென்னை | இளையாங்குடி

**LALPET OFF :** No. 1, Quaid-e-Millath Salai, Opp. to Mubarak Jumma Masjid, Lalpet - 608 303, Cuddalore Dist. Ph : 041 44268114.
**CHENNAI OFF:** No. 37/77, Krishnan Koil Street, Mannadi, Chennai - 600 001. Ph: 044-66686742, Mob. +91 95669 92919 / 99942 54304.

**99942 54304 | 95669 92919**

## மாதம் தோறும் புனித உம்ரா பயணம் 2024

| எக்கானமி | டீலக்ஸ் | சூப்பர் டீலக்ஸ் | ஹில்டன் | டீலக்ஸ் 30 நாட்கள் |
|---|---|---|---|---|
| ₹. 85,000/- | ₹. 98,000/- | ₹. 1,08,000/- | ₹. 1,35,000/- | ₹. 1,25,000/- |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 08-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஜூலை | 25-07-2024 | வியாழன் | 23-08-2024 | வெள்ளி | 30 நாள் |
| ஆகஸ்ட் | 08-08-2024 | வியாழன் | 22-08-2024 | வியாழன் | 15 நாள் |
| ஆகஸ்ட் | 21-08-2024 | புதன் | 04-09-2024 | புதன் | 15 நாள் |
| செப்டம்பர் | 01-09-2024 | ஞாயிறு | 15-09-2024 | ஞாயிறு | 15 நாள் |
| செப்டம்பர் | 12-09-2024 | வியாழன் | 26-09-2024 | வியாழன் | 15 நாள் |
| செப்டம்பர் | 28-09-2024 | சனி | 12-10-2024 | சனி | 15 நாள் |
| அக்டோபர் | 10-10-2024 | வியாழன் | 24-10-2024 | வியாழன் | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 27-10-2024 | ஞாயிறு | 15 நாள் |
| அக்டோபர் | 13-10-2024 | ஞாயிறு | 11-11-2024 | திங்கள் | 30 நாள் |

| மாதம் | புறப்படும் நாள் | கிழமை | திரும்பும் நாள் | கிழமை | நாட்கள் |
|---|---|---|---|---|---|
| அக்டோபர் | 31-10-2024 | வியாழன் | 14-11-2024 | வியாழன் | 15 நாள் |
| நவம்பர் | 10-11-2024 | ஞாயிறு | 24-11-2024 | ஞாயிறு | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 30-11-2024 | சனி | 15 நாள் |
| நவம்பர் | 16-11-2024 | சனி | 15-12-2024 | ஞாயிறு | 30 நாள் |
| டிசம்பர் | 05-12-2024 | வியாழன் | 19-12-2024 | வியாழன் | 15 நாள் |
| டிசம்பர் | 24-12-2024 | செவ்வாய் | 07-01-2025 | செவ்வாய் | 15 நாள் |

உம்ரா விசா, தனிநபர் மற்றும் குரூப் விசா, விசிட்டிங் விசா, துபாய், சிங்கப்பூர், மலேசியா மற்றும் அனைத்து நாடுகளுக்கும் விமான டிக்கெட் எடுத்து தரப்படும். பஸ், ட்ரெயின் டிக்கெட் மற்றும் தூதரக சேவைகள் செய்து தரப்படும்.

விபரங்களுக்கு: உரிமையாளர். அல்ஹாஜ். **O.M. முஹம்மது சுஹைபு** செல்: 9994254304

**வி. ஜெயலட்சுமி**

துக்ளக் நாடகம் கன்னட மூலத்தை தமிழில் வி.ஜெய லட்சுமி க்ரியா வெளியீட்டகம் மூலம் 1988 ஜூலை 12இல் 18 ரூபாய் விலையில் 143 பக்கங்களில் வெளியிட்டுள்ளனர். அதில் பக்கம் 68இல் மேலே கண்டதை மொழி பெயர்த்துள்ளார். இதோ :

**முஹம்மது :** இனிமேல் என்னுடைய ராஜ்ஜியத்தில் வெள்ளி நாணயங்களும், செப்பு நாணயங்களும் புழக்கத்தில் வர இருக்கின்றன. வெள்ளி நாணயங்களை உபயோகிப்பது ஒரு செப்பு நாணயத்திற்கு ஒரு வெள்ளி நாணயத்தின் மதிப்பே தான்.

**ஷிஹாபு :** ஆனால், செப்புக்கு வெள்ளியின் மதிப்பு எப்படி வரும் அரசே?

**முஹம்மது :** நாம் செப்பு, வெள்ளி பற்றி விவாதம் நடத்தவில்லை. நம் முன்னால் இருப்பது நாணயங்களின் பிரச்சனை. நாணயங்கள்கேவலம்விலையை அளப்பதற்கு ஒரு கருவி; அதற்குச் சொந்தமாக ஏது மதிப்பு? மதிப்பு கிடையாது. அரசனின் பேச்சுக்கு, அவனுடைய அரச முத்திரைக்கு மக்களிடம் நம்பிக்கை இருந்தால் போதும்.

சீனாவில் காகிதப் பணம் இருந்தது என்பது குறித்து துக்ளக்கூறியதாககிரிஷ்கர்னாட எழுதிய மூலத்தில் உள்ளது. அதனை தமிழாக்கியவர்கள் வேண்டுமென்றே விட்டுள்ளனர் என்றும், எதற்காக என்றால் துக்ளக்கை குறைவாக எண்ணட்டுமே என்ற எண்ணத்தில் தான் என்றும் எண்ணுகிறேன். துக்ளக்கை தாக்கி எழுதும் முயற்சிகள் தொடர்வதால் உரிய பதிலைச் சொல்ல வேண்டுமென்பதும் அவசிய மாகிறதல்லவா!

(தொடரும்)

## தொழுகையை கெடுக்கும் உருவப்படங்கள்!

ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களிடம் (உருவப் படங்கள் நிறைந்த) ஒரு திரை இருந்தது. அதனால் தங்களின் வீட்டின் ஓர் ஓரத்தை மறைத்திருந்தார்கள். இதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், ஆயிஷா (ரளி) அவர்களிடம் ‘உன்னுடைய இந்தத் திரையை நம்மை விட்டும் அகற்றி விடு. அதிலுள்ள படங்கள் நான் தொழுது (கொண்டிருக்கும் போது என் எண்ணத்தில்) குறுக்கிடுகின்றன” என்று கூறினார்கள்.

(புகாரி – 374)

# ஏஜண்டுகள் தேவை

உலகின் இலாபங்களை நோக்கமாகக் கொள்ளாமல், சமுதாய மக்களின் ஹிதாயத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தமிழகத்திலும், மற்ற மாநிலங்களிலும் தங்களை குர்ஆனின் குரலின் ஏஜண்டுகளாக பதிவு செய்து கொண்டு, ஒவ்வொரு மாதமும் குர்ஆனின் குரல் பிரதிகளை மக்களுக்கு கொண்டு போய் சேர்க்கும் அருமையான சேவையை தொடர்ந்து செய்து கொண்டிருக்கும் எங்களின் பாசத்திற்குரிய ஏஜண்டுகளுக்கு நெஞ்சார்ந்த நன்றி! நன்றி!! அல்ஹம்து லில்லாஹ்!

---

**தமிழறிந்த முஸ்லிம்கள் பரவலாக வாழ்ந்து கொண்டிருக்கும் தென்காசி, கடையநல்லூர், புதுக்கோட்டை, சென்னை, திருச்சி, திண்டுக்கல், புதுச்சேரி, பெங்களூர் போன்ற ஊர்களில் குர்ஆனின் குரலை பரப்பும் அரும் பணியில் ஈடுபடக்கூடிய தீன் வழியில் ஆர்வம் கொண்ட, சேவை மனப்பான்மையுள்ள சகோதரர்கள் தாமதமின்றி தொடர்பு கொள்ளுங்கள்.**

## 25% கமிஷன் வழங்கப்படும்.

*உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*


## குர்ஆனின் குரல்

**4/25, எழில் நகர், மேலமடை,**
**மதுரை - 625020.**
**9442056547, 9486729192**
e-mail: quraaninkural@gmail.com ● web: www.quraaninkural.com

“இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ வலிமை தரவோ வேறு யாருமில்லை”

# AL HUSSAM

## *Travel & Tours India (p) Ltd*

**Specialist in: Haj & Umrah**

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்
அல்குர் ஆன் – 2:196



**Platinum Package**
**(31 - 33 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Platinum Short Package**
**(18 - 21 DAYS)**
HARAM NEAREST 4-5 STAR HOTEL
(MAKKAH : 0-50 MTRS)
(MADINA : 50-150 MTS)

**Golden Package** (5-10 MINS WALKABLE DISTANCE) STAR HOTEL

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center**: No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail: alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

**இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.**
ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

**“நாணயமும் வாய்மையும் கொண்ட வியாபாரி மறுமையில் ஷஹீதுகளோடு இருப்பார்.”**

**- நபி (ஸல்) அவர்கள்**

(நூல் : திர்மிதீ)

**என்றும் முதலிடம்... எப்போதும் உங்களிடம்...**




**சீருக்கும்... சிறப்புக்கும்...**

# சீமாட்டி

பட்டு • ஜவுளி • ரெடிமேட்ஸ்

**கும்பகோணம் - திருவாரூர்**

தஞ்சாவூர் மெயின்ரோடு, கும்பகோணம் – 612001.

T: +91-435 2431818 - E: seemattikum@gmail.com - W.www.seemattisilks.in

T: +91-435 2432526 - E: seemattiready@gmail.com - W.www.seemattireadymade.com

# மார்க்கக் கலாசாலையின் கட்டம் உருவாக நிதியுதவி செய்யுங்கள்!

"அஸ்அதுல்மில்லத்" அல்லாமா **அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ ஹள்ரத் (ரஹ்)** அவர்களால் நிறுவப்பட்ட **"அல்ஜாமிஅத்துல் அரபிய்யா மஃதினுஸ் ஸஆதா" அரபு கல்லூரி** தென் தமிழகத்தின் மார்க்கக் கலாசாலையின் மணி மகுடமாக திகழ்ந்து, கடந்த 40 வருடங்களாக மார்க்கக் கல்வி சேவையில் தனி முத்திரை பதித்து வருகிறது. நம் கல்லூரியில் பட்டை தீட்டப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆலிம்களும், ஹாஃபிழ் களும் உலகெங்கும் பரவி தீன் பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில், இறையருளால் நம் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை துவங்கியுள்ளோம். நம் கல்லூரி கட்டடம் முபமை பெற **சுமார் 4½ கோடி செலவாகும்** என மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது. எனவே, தீன் பயிர் தழைத்தோங்க ஆணிவேராக உள்ள நம் கல்லூரியின் கட்டடம் நிறைவுபெற தாராளமாக உதவி செய்ய வேண்டுகிறோம். கல்லூரிக்கு பணமாகவோ அல்லது கல்லூரி கட்டடத்திற்கு தேவையான கம்பி, ஜல்லி, மணல், செங்கல், சிமெண்ட் ஆகியவற்றையோ தாராளமாக வழங்க வேண்டுகிறோம்.

**வங்கி விபரம் :**

**Name:** AL JAAMIATHUL ARABIYYA MAHDINUS SAADHA EDUCATION TRUST
**INDIAN BANK :** A/c. No. **429079510**
**BRANCH :** Madurai KARUPPAYURANI
**IFSC Code :** IDIB000K136

பணம் அனுப்பிய விபரத்தை கீழ்வரும் செல் நம்பருக்கு Whatsapp அல்லது S.M.S. மூலம் அனுப்பி வையுங்கள்.

## J.M.S.ARABIC COLLEGE

Jaamiyaa Nagar, Sivagangai Highway Road,
MADURAI - 625020.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| 94430 66539 | 97900 64365 | 99948 57786 |

# என் நெஞ்சைத் தொட்டவை!

எம்.ஜே.அன்வரி

## துஆகள் செய்த திருப்பம்

ஒரு நாள் ஹள்ரத் மன்சூர் இப்னு அம்மார் (ரஹ்) என்ற இறை நேசர், திரளான மக்களுக்கு மத்தியில் சன்மார்க்க சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அவையிலிருந்து ஒரு மனிதர் எழுந்து தனக்கு நான்கு திர்ஹங்கள் உதவி தேவை என முறையிட்டார். உடனே பெரியார் மன்சூர் (ரஹ்) அவர்கள் தன் சொற்பொழிவிற்கிடையில், இவருக்கு நான்கு திர்ஹங்கள் கொடுப்பவருக்கு நான்கு துஆகள் செய்கிறேன் என்றார்கள். சபையில் அமைதி நிலவியது. திடீரென ஒரு யூதரின் அடிமை எழுந்து தன்னிடம் இருந்த நான்கு திர்ஹங்களையும் முறையிட்ட நபருக்குக் கொடுத்துவிட்டார்.

இக்காட்சியைக் கண்ணுற்ற ஹள்ரத் மன்சூர் (ரஹ்) அவர்கள், அந்த அடிமையை நோக்கி "உனது நாட்டம் என்ன?" என வினவினார்கள். அப்போது அந்த அடிமை,

"1. நான் என் எஜமானரிடமிருந்து விடுதலை பெற்று சுதந்திரமானவனாக ஆக வேண்டும்.
2. எனது வறுமை ஒழிந்து வளம் பெற்று வாழ வேண்டும்.
3. எனது யூத எஜமானர் புனித இஸ்லாத்தில் இணைய வேண்டும்.
4. நான் பாவியாக இருக்கிறேன். எனது பாவங்களும் எனது எஜமானரின் பாவங்களும் பொறுத்தருளப்பட வேண்டும்.

இந்த நான்கு கோரிக்கைகளையும் தாங்கள் அல்லாஹ்விடம் முறையிட்டு துஆ - இறைஞ்ச வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார். அந்த பெரியாரும் துஆ செய்தார்கள்.

சிறிது நேரத்தில் அடிமை அங்கிருந்து விடைபெற்று தனது எஜமானரிடம் செல்லவே, அவர் "ஏன் இவ்வளவு நேரம் தாமதமாக வருகின்றாய்?" எனக் கேட்டார். உடனே அந்த அடிமை, எனது எஜமானரே! நான் மன்சூர் இப்னு அம்மார் என்ற பெரியார் அவர்களின் அவைக்குச் சென்று, உபதேசம் கேட்டுக் கொண்டிருந்தேன். பின்னர் என்னிடமிருந்த நான்கு திர்ஹங்களையும் தர்மம் ஈந்தேன். அதற்காக அந்த பெரியார் நான்கு துஆகளை எனக்கு செய்தார்" எனக் கூறி நடந்ததை விளக்கினார்.

**எஜமானர் :** அப்படியா! என்னென்ன துஆகள் சொல்லும்?

**அடிமை :** 1) தங்களிடமிருந்து நான் உரிமை பெற்று சுதந்திரமானவனாகத் திகழ வேண்டும்.

**எஜமானர் :** இதோ உன்னை இறைவனுக்காக முழு உரிமையாக்கி விட்டேன். இனி நீ சுதந்திர மனிதன்.

**அடிமை :** 2) எனது வறுமை ஒழிந்து வளம்பெற வேண்டும்.

**எஜமானர் :** இதோ உனக்கு நான்காயிரம் திர்ஹங்கள் அன்பளிப்பாக தந்துவிட்டேன்.

**அடிமை :** 3) தாங்கள் இஸ்லாத்தை தழுவ வேண்டும்.

**எஜமானர் :** (மறுகணமே) அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரசூலுல்லாஹ் (என கலிமா முழங்குகிறார்)

**அடிமை :** 4) எனது பாவங்களும், தங்களது பாவங்களும் மன்னிக்கப்பட வேண்டும்.

**எஜமானர் :** இது என் கைவசம் இல்லையே!

அன்றிரவு அந்த எஜமானர் கனவில், உனது சக்திக்கிசைந்த வற்றை நீ நிறைவேற்றினாய். நானும் எனது வல்லமையை நிறைவேற்றுகிறேன். உனது பாவங்கள், உனது அடிமையின் பாவங்கள் மற்றும் உபதேசம் செய்தவர், அந்த மஜ்லிஸில் கூடியிருந்தோர் ஆகிய அனைவரின் பிழைகளையும் நாம் மன்னித்தோம் என அறிவிக்கப்பட, எஜமானர் கண் விழித்தார்.

## காப்பான் அவனே!

ஹள்ரத் பாயஸீத் புஸ்தாமீ (ரஹ்) அவர்கள் மஸ்ஜிதுக்கு வந்தார்கள். மஸ்ஜிதின் இமாமுக்குப்பின் நின்று தொழுகையும் மேற்கொண்டார்கள். தொழுகை முடிந்தது. எல்லோரும் கலைந்து சென்றார்கள். ஹள்ரத் பாயஸீத் புஸ்தாமீ (ரஹ்) அவர்கள் மட்டும் உட்கார்ந்திருந்தார்கள். இமாம் அவர்கள் அவரிடம் நெருங்கி வந்தார். ஹள்ரத் பாயஸீத் புஸ்தாமீ (ரஹ்) அவர்களைப் பார்த்து, "ஹள்ரத் அவர்களே! நீங்கள் எந்த வேலையையும் செய்வதில்லை; யாரிடமும் கையேந்தி பொருளை பெறுவதுமில்லை. பின் வயிற்றுக்கு என்ன தான் செய்கிறீர்கள்? உணவை யார்தான் கொடுக்கிறார்கள்? எப்படித்தான் உயிர் வாழ்கிறீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டார்.

இதைக் கேட்டதும் ஹள்ரத் பாயஸீத் புஸ்தாமீ (ரஹ்) அவர்கள் எழுந்து கொண்டார்கள். "எங்கே போகிறீர்கள்?" இமாம் கேட்டார்.

“தொழுகப் போகிறேன்” என்றார் ஹள்ரத்.

“இப்போதுதானே தொழுதீர்கள்!” இமாம் மீண்டும் ஆச்சரியத்துடன் கேட்டார்.

“எனது தொழுகை முறிந்து விட்டது” ஹள்ரத் அமைதியுடன் சொன்னார்.

“தொழுகை முறிந்து விட்டதா? காரணம்?” இமாம் கேட்டார்.

“படைத்தவன் அல்லாஹ்! காப்பவன் அல்லாஹ்! கொடுப்பவனும் அவனே! அப்படியிருக்க, கொடுப்பவன் யார்? காப்பவன் யார்? என்றே தெரியாத உம் பின்னால் நின்று தொழுததால் எனது தொழுகை முறிந்துவிட்டது” என்றபடி மறுதொழுகைக்கு நின்றார் ஹள்ரத் பாயஸீத் புஸ்தாமீ (ரஹ்) அவர்கள். இமாம் திகைத்துப்போய் நின்றார்.

## புதைகுழியின் அருகே ஒரு பாடம்!

இளம் நண்பர்கள் மூவர் கல்வி பயில்வதற்காக வேற்றூர் செல்ல முடிவு செய்தார்கள். அம்மூவரும் தம்மை ஈன்றெடுத்த பெற்றோர்களிடம் விடைபெறச் சென்றார்கள். அவர்களில் இருவருக்கு அவர்களின் பெற்றோர்கள் “நலமே சென்றுவா மகனே!” என்று வாழ்த்துரை கூறி வழியனுப்பி வைத்தனர். ஆனால் மூன்றாமவரையோ அவருடைய அன்னை “கோ”வென அலறிக் கட்டித் தழுவி மகனே! என்னை இத்தள்ளாத வயதிலா விட்டுச் செல்ல விரும்புகின்றாய். எவர் எனக்கு உதவி செய்வார்கள்?” என்று கண்ணீருடன் கூறினார். அது கேட்டு அவரின் இளம் மகனின் உள்ளம் உருகியது. “நல்லது அம்மா! நான் உங்களுடனேயே இருக்கின்றேன். ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். அல்லாஹ் போதுமானவன்” என்று ஆறுதல் மொழி கூறினார் தனயன்.

எனினும் அவரின் தனயனுக்கோ, தமது இரு நண்பர்களும் கல்வி பயின்று அறிஞர்களாகத் திரும்பும்போது, தாம் மட்டும் கல்வியறிவு இல்லாதவனாக இருக்கும் நிலை ஏற்பட்டு விடுமோ என்று ஆற்றொணாத் துயரமாக இருந்தது. தம் துயரத்தை இறைவனிடம் கூறி தம் உள்ளத்தின் உள்ளே வைத்து உருகிக் கொண்டிருந்தார் அவர். ஒரு நாள் அவர் ஒரு புதைகுழியின் அருகே அமர்ந்து அழுது கண்ணீர் வடித்துக்

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

கொண்டிருக்கும்போது, ஒரு நடுத்தர வயதினர் அவரை அணுகி, "மகனே! ஏன் அழுது கொண்டுள்ளாய்?" என்று வினவினார். அப்போது அவ்விளவல் தம் அவல நிலையை அவரிடம் எடுத்துரைத்தார். அது கேட்ட அந்த நடுத்தர வயதினர் புன்முறுவலுடன் அவரை நோக்கி, "கவலைப்படாதே மகனே! நான் ஒவ்வொரு நாளும் வந்து உனக்குக் கல்வி கற்றுத் தருகிறேன். நீ விரைவில் அவர்களை மிகைத்து விடலாம்" என்று கூறினார். "நல்லது" என்று மறுமொழி பகர்ந்தார் அவ்விளவல்.

அடுத்த நாளிலிருந்து பள்ளி துவங்கியது. பள்ளியின் இருப்பிடம் அந்தப் புதைகுழியின் அண்மையாகவே இருந்தது. அங்கு வைத்தே அந்த ஆசிரியர் தம் மாணவருக்கு உலகக் கல்வி, ஆன்மிகக் கல்வி ஆகிய அனைத்தையும் போதித்தார். ஒரு நாளல்ல. ஒரு மாதமல்ல, ஓராண்டல்ல, மூன்று ஆண்டுகள். அதன்பின் தான் அந்த மாணவருக்கு தமது ஆசான் சாதாரண மனிதரல்ல. ஆன்மிகப் பேரரசர் ஹிள்ரு (அலை) ஆவர் என்ற உண்மை விளங்கலாயிற்று. அப்போது அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையேயில்லை. அந்த மாணவரே இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள்.

இதன்பின் ஹிள்ரு (அலை) அவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் வந்து திர்மிதீ (ரஹ்) அவர்களுடன் பல்வேறு செய்திகளையும் பேசிச் செல்வது வழக்கமாக இருந்து வந்தது. அதன் காரணமாக திர்மிதீ (ரஹ்) அவர்கள் பெரிய ஞானாசிரியராக மாறினார்கள். வேற்றூர் சென்று கல்வி பயிலச் சென்ற அவர்களின் தோழர்கள் எல்லாம் அவர்களின் காலடியில் அமர்ந்து ஆன்மிகக் கல்வி பெறத் தக்க மகோன்னத நிலையை இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் அடையப் பெற்றார்கள்.

## நபி (ஸல்) அவர்களின் செல்வம்

மாநகர் மிஸ்ரில் ஒரு செல்வந்தர். அவருக்கு இரண்டு ஆண்மக்கள். இருவரில் ஒருவன் கல்வி கற்றான். மற்றவன் பணம் திரட்டினான். அவரவர் தேடியதை அடைந்தனர். முதலாமவன் அறிஞன் ஆனான். இரண்டாமவன் செல்வந்தன் ஆனான்.

அறிஞன் மக்களுக்கு உபதேசங்கள் செய்து கொண்டும், நூல்கள் எழுதிக் கொண்டும் ஏழையாக இருந்தான். செல்வந்தனுக்கு காலம் கனிந்தது. நாட்டின் அமைச்சனாகவும் ஆனான்.

செல்வந்தனாகவும் – மிஸ்ரு நகரில் மந்திரியாகவும் இருந்தவன், அறிஞனான தன் ஏழைச் சகோதரனை சிறிதும் மதிக்கவில்லை.

# மணமகன், மணமகள் தேவை

★ உயரம் 5'10", வயது 26, உருதுஷேக், M.B.B.S.,D.DIAB படித்து, டாக்டராக பணிபுரியும் **மணமகனுக்கு,** டாக்டர் **மணமகள் தேவை.**

★ உயரம் 5'9", வயது 38, இராவுத்தர் முஸ்லிம், M.B.B.S.,D.L.O., ENT Surgeon, EON, ARMO., படித்து, டாக்டராக பணிபுரியும் **மணமகனுக்கு,** டாக்டர் **மணமகள் தேவை.**

★ உயரம் 5'4", வயது 38, உருதுஷேக். M.B.B.S., M.D., படித்து, டாக்டராக பணிபுரியும் **மணமகளுக்கு,** டாக்டர் **மணமகன் தேவை.**

★ உயரம் 5'4", வயது 24, இராவுத்தர் முஸ்லிம், M.B.B.S., முடித்திருக்கும் டாக்டர் **மணமகளுக்கு,** டாக்டர் **மணமகன தேவை.**

★ உயரம் 5'6", வயது 29, இராவுத்தர் முஸ்லிம், பெங்களூரில் SOFTWARE ENGINEER ஆக பணிபுரியும் **மணமகளுக்கு,** பெங்களூரில் SOFTWARE ENGINEER ஆக பணிபுரியும் **மணமகன் தேவை.**

தொடர்புக்கு : **99650 79835**

**M.இப்ராஹீம், ஈரோடு-5.**



பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

**அப்போலோ, மெட்பிளஸ் மற்றும் அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்**

**Customer Care - 9962664444**

www.jingagold.com info@jingagold.com

இருவரும் ஒரு முறை சந்தித்துக் கொண்டனர். இழிந்த ஒரு பிராணியைப் பார்ப்பது போல், ஏழை சகோதரனைப் பார்த்து செல்வந்தன் சொன்னான் : "பார்த்தாயா? நான் நாட்டை நிர்வகிக்கிறேன். நீ பரதேசியாக சுற்றுகிறாய்."

அறிஞன் கூறினான் : சகோதரனே! நான் இறைவனுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் தெரியுமா? நபி (ஸல்) அவர்களின் செல்வமான கல்வியை நான் பெற்றேன். ஃபிர்அவ்ன், ஹாமானின் செல்வமான மிஸ்ரின் ஆட்சி உனக்கு கிடைத்தது. (ஃபிர்அவனும், ஹாமானும் மிஸ்ரை ஆண்டவர்கள்).

## உடன்படிக்கை

கி.பி.639இல் ஜெருஸலத்திலுள்ள பைத்துல் முகத்தஸ் முஸ்லிம்கள் வசமாகி வெற்றிவாகை சூடியபோது, அங்கிருந்த கிறிஸ்தவர்களின் தலைவர் பாதிரி ஸோபுரோனியல் என்பவர், இஸ்லாமிய குடியரசின் தலைவர் கலீஃபா உமர் (ரளி) அவர்களிடம் நேரில் வந்து உடன்படிக்கை எழுதித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதன்படி கலீஃபா உமர் (ரளி) அவர்கள் மதீனாவிலிருந்து ஒரு பணியாளருடன் ஓர் ஒட்டகையில் பிரயாணம் செய்து ஜெருஸலம் வந்தடைந்தார்கள். கலீஃபாவை வரவேற்க கிறிஸ்தவ தலைவர்களும் வந்தனர். அப்போது கலீஃபா அவர்கள் ஒரு பணியாளருடன் ஒட்டுப் போட்ட சட்டை அணிந்து எளிமையான நிலையில் இருந்ததைக் கண்டு கிறிஸ்தவர்கள் ஆச்சரியமடைந்தனர். பின் கலீஃபாவை நகர்வலம் சுற்றிக் காண்பிக்க ஏற்பாடு செய்து நகர்வலம் வந்தபோது அஸர் தொழுகையின் நேரம் வந்துவிடவே, அப்போது குமாமா என்ற இடத்திலுள்ள மாதா கோவிலில் கலீஃபாவை கிறிஸ்தவர்கள் தொழுது கொள்ள வேண்டினர். அதற்கு கலீஃபா அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

"நான் இன்று உங்கள் மாதா கோவிலில் தொழுகை நடத்தினால் பிற்காலத்தில் கலீஃபா உமர் தொழுகை நடத்திய இடம் எங்களுக்கும் சொந்தம் என்று முஸ்லிம்கள் உரிமை கொண்டாடக்கூடும். ஆகவே வேண்டாம்" என்று கூறி, அதன் சமீபத்தில் ஓர் இடத்தில் தொழுகை நடத்தினார்கள். பின் அந்த இடத்தில் ஒரு மஸ்ஜித் கட்டப்பட்டது. அதுதான் "மாஸ்க் ஆஃப் உமர்" என்ற பெயரில் இன்று வரை அழைக்கப்படுகிறது.

**இம்மாத அட்டைப்படத்தை அலங்கரிப்பது "மாஸ்க் ஆஃப் உமர்."**

(தொடரும்)

# இன்றைய குழந்தைகளின் அவல நிலையும்... பரிதாப நிலையும்...

மவ்லவீ ஹாஃபிழ் அ. சைய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

"பொருட் செல்வமும், குழந்தை செல்வமும் இவ்வுலக வாழ்க்கையின் அலங்காரங்களேயாகும். என்றும் நிலைத்து நிற்கக் கூடிய நற்செயல்களே உம்முடைய இறைவனிடத்தில் [மறுமையின் நற்பேறுக்கு] நன்மையால் சிறந்தவையும், ஆதரவு வைப்பதில் சிறந்தவையுமாகும்" - அல்குர்ஆன் (18 : 46)

"பெண்கள், ஆண்மக்கள், திரட்டப்பட்ட தங்க, வெள்ளிக் குவியல்கள், அழகிய குதிரைகள், கால்நடைகள், விளை நிலங்கள் ஆகிய மனம் கவரக் கூடியவற்றை நேசிப்பது மனிதர்களுக்குக் கவர்ச்சியாக்கப்பட்டுள்ளது. இவை இவ்வுலக வாழ்க்கையின் வசதிகள். அல்லாஹ்விடம் அழகிய புகலிடம் உள்ளது" - அல்குர்ஆன் (3 : 14)

"அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கை விளையாட்டும், வேடிக்கையும், அலங்காரமுமேயாகும். மேலும், [அது] உங்களிடையே பெருமையடித்துக் கொள்ளக்கூடியதும், பொருட்களையும், சந்ததிகளையும் பெருக்கக்கூடியதுமேயாகும்" - அல்குர்ஆன் [57 : 20]

"இவ்வுலக வாழ்க்கை ஏமாற்றும் [சொற்ப] சுகமே தவிர [வேறு] இல்லை" - அல்குர்ஆன் (57:20)

"[நபியே] நீர் கூறுவீராக! இவ்வுலக இன்பம் அற்பமானது" - அல்குர்ஆன் (4 : 77)

பொருட் செல்வங்களும், குழந்தை செல்வங்களும், உலக கவர்ச்சியாகவும், உலக அலங்காரமாகவும் இருக்கின்றன.

இவற்றை அமானிதமாக, அழகானதாக, ஆனந்தமானதாக, நிரந்தரமானதாக தக்க வைப்பதும் அல்லது இவற்றை அவலமானதாக, அலங்கோலமானதாக, ஆபத்தானதாக மாற்றியமைப்பதும் பெற்றோரின் கையிலும், அவர்களின் கண்காணிப்பிலும், அவர்களின் பராமரிப்பிலும், நல்ல வளர்ப்பிலும்தான் உள்ளது.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் அது மண்ணில் பிறக்கையிலே! அது நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னையின் வளர்ப்பினிலே!

உலகில் பிறக்கும் எல்லாக் குழந்தைகளும் இயற்கையான இஸ்லாமிய ஒழுக்க நெறியில் தான் பிறக்கின்றன.

குழந்தைகளின் அவல நிலைக்குக் காரணம் பெற்றோரின் செயலே!

"ஒரு விலங்கு எப்படி முழு வளர்ச்சி பெற்ற விலங்கைப் பெற்றெடுக்கிறதோ அதைப் போன்று எல்லாக் குழந்தை களுமே இயற்கையான மார்க்கத் திலேயே பிறக்கின்றன. விலங்கு கள் அங்கக் குறைவுடன் பிறப்பதை நீங்கள் பார்த்திருக் கிறீர்களா? (முழுமையான விலங்கை அங்க சேதப்படுத்து வது போல்) பெற்றோர்கள் தாம் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டுத் திருப்பி) யூதர்களாகவோ, கிறிஸ்தவர் களாகவோ, நெருப்பு வணங்கி களாகவோ ஆக்கி விடுகின்றனர்" என நபி (ஸல்) அவர்கள் கூறி னார்கள். (அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்) (நூல்: புகாரி 1385)

குழந்தைகளை ஆடு, மாடு களைப் போன்று பெற்றெடுத் தால் மட்டும் போதாது. மாறாக, பெற்றெடுத்த குழந்தைகளை அழகிய முறையில் வளர்க்க வேண்டும்.

அவர்களை அவலநிலை யிலிருந்து அரண்போன்று பாதுகாத்திட வேண்டும். கண்ணிமை போன்று பாதுகாத்திட வேண்டும்.

செல்வங்களில் சிறந்த செல்வம் குழந்தை செல்வம் ஆகும். அத்தகைய செல்வத்தை மனநிறைவான செல்வமாக தக்க வைத்துக் கொள்ள வேண்டுமா னால், பொருட் செல்வங்களை திருடர்களிடமிருந்து பாதுகாப் பதுபோன்று, குழந்தை செல்வங் களையும் வழிகெட்ட கூட்டத் தாரிடமிருந்தும், இணை வைப் பாளர்களிடமிருந்தும், இறை மறுப் பாளர்களிடமிருந்தும் பாதுகாத் திட வேண்டும். மேலும், வழி கெடுக்கும் சாதனங்களான டி.வி., செல்போன், லேப்டாப், கம்ப்யூட்டர் போன்ற நேரங் களை வீண் விரயமாக்கும் சாதனங்களிலிருந்தும் பாதுகாத்திட வேண்டும்.

மேலும், குழந்தைகளை வழிகெடுக்கும் அனைத்து இணையதள விளையாட்டுக் களை விட்டும், ரம்மி போன்ற சூதாட்ட விளையாட்டுக்களை விட்டும் பாதுகாத்திட வேண்டும்.

மேலும், குழந்தைகள் ஆபாச இணையதள சேவைகளை பயன்படுத்தி, பதிவிறக்கம் செய்து ஆபாசப்படங்களை பார்ப்பதை விட்டும் பாதுகாத்திட வேண்டும்.

இன்னும் வாட்ஸ்ஆப், எக்ஸ் தளம், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம், டெலிகிராம், கூகுள், யூடியூப் போன்ற சமூக இணையதளங் களில் மூழ்கி, சீரழிந்து போவதை விட்டும், தறுதலையாக பாதை மாறிச் செல்வதை விட்டும் பாதுகாத்திட வேண்டும்.

இன்னும், நமது குழந்தை கள் புகைப்பழக்கம், போதைப் பழக்கத்திற்கு அடிமைகளாகி வரும் அவல நிலையிலிருந் தும் பாதுகாத்திட வேண்டும்.

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

இன்றைய குழந்தைகளின் அவல நிலை என்று வரும்போது முக்கிய இடத்தை பிடிப்பதில் ஒழுக்கங் கெட்ட செயல்பாடுகளே முன்னிலை வகிக்கின்றன.

பெற்றோர் தமது குழந்தைகளை ஒழுக்கமுள்ள குழந்தைகளாக வளர்த்து, ஆளாக்கிவிட வேண்டும்.

இன்றைய ஒழுக்கவிழுமியங்களை பேணத் தவறிய குழந்தைகள் தாம் நாளைய சமூகக் குற்றவாளிகளாக வலம் வருகிறார்கள்.

நாள்தோறும் சமூகக் குற்றங்கள் பெருகி வருவதற்குக் காரணம் குழந்தைகளுக்கு, வளர் இளம் பருவத்தில் நல்லொழுக்க விழுமியங்களை சொல்லிக் கொடுக்காத அவல நிலையே காரணம்.

தாயைப் போல் பிள்ளை; நூலைப் போல் சேலை!

(பழமொழி)

தாய் - தந்தை குழந்தைகளை எந்த வழியில் நடத்துகிறார்களோ, அந்த வழியில்தான் குழந்தைகளும் நடப்பார்கள்.

அவர்கள் எந்த வழியைக் காட்டுகிறார்களோ, அந்த வழியில்தான் குழந்தைகளும் செல்வார்கள். அவர்கள் எந்த வழியில் நடக்கிறார்களோ அந்த வழியில் தான் குழந்தைகளும் போவார்கள்.

பெற்றோர், தப்பு செய்த குழந்தைகளை கண்டிக்காமலும், கண்டு கொள்ளாமலும் செல்லும் இந்த மனநிலைதான் இன்றைய குழந்தைகளின் அவல நிலைக்குக் காரணமாக அமைந்து விடுகிறது.

குழந்தைகளை இதுபோன்ற அவல நிலையிலிருந்து பாதுகாக்காத பெற்றோருக்கு அந்தக் குழந்தைகளே எதிரியாகவும், சோதனையாகவும், வேதனையாகவும் மாறிவிடும் என்று அல்குர்ஆன் கூறுவதை மறந்து விடாதீர்கள்.

**“இறைநம்பிக்கையாளர்களே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும், உங்கள் மக்களிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர். எனவே, அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். உங்கள் பொருட்களும், உங்கள் குழந்தைகளும் (உங்களுக்குச்) சோதனைதான். ஆனால், அல்லாஹ் அவனிடம் தான் மகத்தான நற்கூலி இருக்கிறது.”**

- அல்குர்ஆன் (64 : 14, 15)

குழந்தைகளை காலங் காலமாக கண் குளிர்ச்சியாகவும், கண் கவர்ச்சியாகவும் தக்கவைப்போம்! குழந்தைகளின் அபாயகரமான அவல நிலையை மாற்றியமைப்போம்! இறைவனை அஞ்சும் குழந்தைகளாகவும், பெற்றோரின் சொல் கேட்டு வளரும் நல்ல குழந்தைகளாகவும், வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் குழந்தைகளாகவும் மாற்றிக் காட்டுவோம்!

# நறுமணம் கமழும் நபிகள் கோமான் (ஸல்) அவர்கள்

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
பீ.ஹாமிது அப்துல் ஹை, எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

## ஹுதைபிய்யா உடன்படிக்கை

ஹிஜ்ரி 6, துல்கஅதா மாதம் நபி (ஸல்) அவர்கள் உம்ரா செய்வதற்காக, மக்கா செல்ல விரும்பினர். 1400 அல்லது 1500 நபித்தோழர்களுடன், துல்கஅதா முதல் வாரம் திங்கட் கிழமை பயணம் தொடங்கியது.

மக்காவிலிருந்து சுமார் 40 கி.மீ. தூரத்திலுள்ள இடம் ஹுதைபிய்யா. அங்கு வந்து நபி (ஸல்) அவர்கள் தங்கினர். ஹுதைபிய்யா என்பது ஒரு கிணற்றின் பெயர். அக்கிணறு வறண்டிருந்தது. நபி (ஸல்) அவர்கள் தங்களது அம்புக் கூட்டிலிருந்து ஓர் அம்பை எடுத்து அந்த கிணற்றில் வைக்குமாறு கூறினர். அவ்வாறே வைக்கப்பட்டவுடன் கிணற்றில் நீர் பொங்கி, தோழர்களின் தாகத்தை தணித்தது!

குறைஷிக் காஃபிர்கள், நபி (ஸல்) அவர்களை மக்காவிற்குள் நுழைய அனுமதிக்கவில்லை. தங்களின் நோக்கம் உம்ரா செய்வதே என்று தெரிவித்த பின்பும், அனுமதி மறுத்தனர். தூதர்களை அனுப்பினர். பேச்சுவார்த்தைகள் நடந்தன. குறைஷித் தூதர்கள் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து விட்டு உண்மை நிலையை குறைஷிகளுக்குத் தெரிவித்தனர். குறைஷிகள் ஏற்கவில்லை.

நபி (ஸல்) அவர்கள், ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்களை அனுப்பி மக்காவாசிகளுடன் பேசி உண்மை நிலையை உணர்த்துமாறு கூறினர். ஆனால், குறைஷிகள் ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்களின் கூற்றை ஏற்கவில்லை. ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் திரும்பி வருவது தாமதமானது. ஆகவே, அண்ணார் கொல்லப்பட்டார் என்ற வதந்தி பரவியது. எனவே முஸ்லிம்கள் கொதித்தெழுந்து, போர் புரிய முனைந்தனர். ஏனெனில், நபி (ஸல்) அவர்கள், குறைஷிகளுடன் போர் புரியாமல் இவ்விடத்தை விட்டு நாம் நகர மாட்டோம் என்று கூறி விட்டனர். ஆகவே, நபித் தோழர்கள் மரணம் வரை போர் புரிவோம் என்று அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் ஒப்பந்தம் செய்தனர்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு மரத்திற்குக்கீழ் உடன்

படிக்கையை வாங்கினர். அண்ணலார் (ஸல்) அவர்களின் புனிதக்கரம் பிடித்து, தோழர்கள் உடன்படிக்கையை நிறைவேற்றினர். இவ்வுடன் படிக்கை "பைஅத்துர் ரிழ்வான்" (அங்கீகரிக்கப்பட்ட இறை பொருத்தத்திற்குரிய உடன் படிக்கை) என்று இஸ்லாமிய வரலாற்றில் இடம் பெறுகிறது.

**அல்லாஹ்வின் செய்தி இறங்கியது. "அந்த மரத்தினடியில் உங்களிடம் கை கொடுத்து உடன்படிக்கை செய்த நம்பிக்கையாளர்களைப் பற்றி நிச்சயமாக அல்லாஹ் திருப்தியடைந்தான். அவர்களின் உள்ளங்களிலிருந்த [உண்மையான தியாகத்தை நன்கறிந்து, சாந்தியையும், ஆறுதலையும் அவர்கள் மீது சொரிந்தான் . உடனடியாக ஒரு வெற்றியையும் [கைபர் என்னும் இடத்தில்] அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தான்."**

- அல்குர்ஆன் (48 :18)

நிலைமை மோசமாவதை அறிந்து கொண்ட குறைஷிகள் சமாதான ஒப்பந்தம் செய்து கொள்ள சுஹைல் இப்னு அம்ர் என்பவரை நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தனர்.

ஹள்ரத் உதுமான் (ரளி) அவர்கள் மக்காவிலிருந்து திரும்பி விட்டனர். முஸ்லிம்கள் பெரிதும் மகிழ்ந்தனர்.

சுஹைல், நபி (ஸல்) அவர்களிடம் பேசினார். சமாதானத்திற்கான ஒப்பந்தம் துளிர்த்தது. இதுவே வரலாற்றுச் சிறப்பு மிக்க 'ஹுதைபிய்யா உடன்படிக்கை' யாகும். இஸ்லாத்தின் வெற்றிக்கு வழிவகுத்த அரியதோர் உடன்படிக்கை!

இதை எழுதுமாறு நபி (ஸல்) அவர்கள் ஹள்ரத் அலி (ரளி) அவர்களைப் பணித்தனர். நபி (ஸல்) அவர்கள் வாசகங்களைக் கூறினர். முதலாவதாக "பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் - அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனும் ஆகிய அல்லாஹ்வின் திருப் பெயரால்" என்று கூறினர். அதைக் கேட்ட சுஹைல் "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! ரஹ்மான் என்றால் யார்? என்று எங்களுக்குத் தெரியாது. எனவே பிஸ்மிக்கல்லாஹும்ம- அல்லாஹ்வே உனது பெயரால்" என்று எழுதும்படி கூறினார். அதனை அண்ணலார் (ஸல்) அவர்கள் ஏற்று, அவ்விதமே எழுதச் சொன்னார்கள். பின்பு "இது அல்லாஹ்வின் தூதர் முஹம்மது செய்யும் சமாதான உடன்படிக்கையாகும்" என்று எழுதுமாறு கூறினர். ஹள்ரத் அலீ (ரளி) அவர்களும் அவ்விதமே எழுதினர். ஆனால் சுஹைல் அந்த வாசகத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

"நீர் அல்லாஹ்வின் தூதர் என்று எங்களுக்குத் தெரிந்திருந்தால் நாம் உம்மை

அவனது வீட்டிலிருந்து தடுத்திருக்க மாட்டோம். உம்மிடம் போர் செய்திருக்க மாட்டோம். எனவே முஹம்மதிப்னு அப்துல்லாஹ் என்று எழுதுங்கள்" என்று கூறினார்.

அதற்கு, அண்ணலார் (ஸல்) அவர்கள் "நீங்கள் என்னை பொய்யன் என்று கூறினாலும் சரியே! நான் உண்மையில் அல்லாஹ்வின்தூதர்தான்" என்று கூறிவிட்டு, ரசூலுல்லாஹ் என்ற சொல்லை அழித்து விட்டு, "முஹம்மது இப்னு அப்துல்லாஹ்" என்று எழுதுமாறு கூறினர். ஆனால் ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் அந்தச் சொல்லை அழிப்பதற்கு மறுத்துவிட்டனர். ஆகவே, நபி (ஸல்) அவர்கள் அந்தச் சொல்லைக் காட்டுமாறு கூறி, தாங்களே அதை அழித்து விட்டனர்.

பின்பு ஒப்பந்தப் பத்திரம் முழுமையாக எழுதி முடிக்கப் பட்டது. இதன் அம்சங்கள், முஸ்லிம்களுக்கும் பாதகமாக இருப்பது போல் தெரிவதாகக் கருதி, நபித்தோழர்கள் மிகவும் கவலையுற்றனர்.

ஆனால் அது முஸ்லிம் களுக்கு வெற்றியாகும் என அல்லாஹ் அருளினான்.

**"[நபியே! ஹுதைபிய்யாவின் சமாதான உடன்படிக்கையின் மூலம்] நிச்சயமாக நாம் உங்களுக்கு [மிகப்பெரிய] தெளிவானதொரு வெற்றியைத் தந்தோம். [அதற்காக நீங்கள் உங்களது இறைவனுக்கு நன்றி செலுத்துவீராக!]"**

- அல்குர்ஆன் (48: 1)

ஆம்! இஸ்லாத்தின் வளர்ச்சிக்குரிய மாபெரும் வெற்றியாக அது அமைந்தது!

## மக்காவின் வெற்றி

ஹிஜ்ரி 8, ரமளான் மாதம் பிறை 10-ல் நபி (ஸல்) அவர்கள் 10,000 தோழர்களுடன், மக்கா நோக்கிப் புறப்பட்டனர். பயணம் தொடங்கி மக்காவின் அருகில் "ஃபாத்திமா பள்ளத்தாக்கு" என்று கூறப்படும் "மர்ருள்ளஹ்ரான்" என்ற இடத்தில் நபி (ஸல்) அவர்கள் இறங்கினர்.

அன்றிரவு ஒவ்வொரு நபித்தோழருக்கும் நெருப்பு மூட்டும்படி கட்டளை பிறந்தது. 10,000 நெருப்புக் குண்டங்கள் அங்கு மூட்டப்பட்டன.

இதனைக் கண்ணுற்ற குறைஷியர்கள் அச்சத்தால் அதிர்ந்தனர்! "இன்றைய இரவில் எரியும் நெருப்பைப் போன்றும், இங்கு கூடியிருக்கும் படையைப் போன்றும் நான் வேறு எப்போதும் பார்த்ததில்லை" என்றார் குறைஷிகளின் தலைவர் அபூ ஸுஃப்யான்.

எவ்வித எதிர்ப்புமின்றி, நபி (ஸல்) அவர்கள், மக்காவில் நுழைந்தனர். முன்னும் பின்னும் முஹாஜிர்களும், அன்சாரி

களும் புடைசூழ அண்ணலார் (ஸல்) அவர்கள் புனிதப் பள்ளியில் நுழைந்தனர்.

கஅபாவில் பதிக்கப் பட்டுள்ள, சுவனக்கல் ஹஜ்ருல் அஸ்வதை தங்களது கையால் தொட்டு முத்தமிட்டனர், கஅபாவை தவாஃப் செய் தனர். தங்கள் கையிலிருந்த வில்லால், கஅபாவைச் சுற்றி யிருந்த 300 சிலைகளை, **"சத்தியம் வந்தது; அசத்தியம் மறைந்தது. நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும்." - அல்குர்ஆன் [17 : 81]** என்ற வசனத்தை ஓதியவர்களாக குத்திக் கீழே தள்ளினர்.

பிறகு கஅபாவின் சாவியைப் பெற்று, அதைத் திறந்து, உள்ளே சென்றனர். சுவர்களில் வரையப்பட்டிருந்த பல படங் களை பார்த்தனர். அவற்றை அழிக்குமாறு பணித்தனர். தூய்மை செய்யப்பட்ட பின் தொழுதனர். தொழுதபின், கஅபாவின் ஒவ்வொரு மூலை யிலும் நின்று (லா இலாஹ இல்லல்லாஹு, அல்லாஹு அக்பர்)என்றுகூறிஇறைவனைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தினர்.

கஅபாவின் கதவைத் திறந்து, அதன் வாசல் நிலைப் படியை பிடித்துக் கொண்டு நபி (ஸல்) அவர்கள் நின்றார்கள். குறைஷி யர்கள் அனைவரும் பள்ளிக்குள் திரண்டு, வரிசையாக நின்று கொண்டு, நபி (ஸல்) அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? என்பதை எதிர்பார்த்திருந்தனர்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு சிறிய உரை நிகழ்த்திய பின், திருமறையின் திருவசனத்தைக் ஓதிக்காட்டினர்.

**"மனிதர்களே! உங்கள் அனைவரையும் நிச்சயமாக நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலி ருந்துதான் படைத்தோம். பின்னர் ஒருவர் மற்றவரை அறிந்துகொள்ளும் பொருட்டு உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கி னோம். [ஆதலால் உங்களில் ஒருவர் மற்றவரை விட மேலென்று பெருமை பாராட்டிக் கொள்வதிற்கில்லை.] எனினும் உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிக கண்ணிய மானவர். நிச்சயமாக அல்லாஹ் [அனைத்தையும்] நன்கறிந்த வனாகவும், நன்கு தெரிந்த வனாகவும் இருக்கின்றான்."**

- அல்குர்ஆன் (49 : 13)

பிறகு, குறைஷியர்களிடம் "குறைஷிக் கூட்டத்தினரே! நான் உங்களிடம் எவ்விதம் நடந்து கொள்வேன் எனக் கருதுகிறீர்கள்?" என நபி (ஸல்) அவர்கள் கேட்டனர். "நல்ல முறையில் நடந்து கொள்வீர்கள்; நீங்கள் எங்களுக்குச் சிறந்த சகோதர

shabnamsilks@ymail.com www.facebook/shabnamsilk.com

# Shabnam

SILKS & READYMADE

No.74, J.N.STREET, PUDUCHERRY - 1.

Ph : 0413-2222600, 2333600

# Sagar Foot Wear



269, M.G.ROAD, PUDUCHERRY - 1.

Ph : 0413-2344600

# குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்

குட்லக் புர்கா கடை

குட்லக் எண்ணெய் கடை

குட்லக் நாட்டு மருந்துக்கடை

எங்களிடம் அனைத்து வகையான காலணிகளும், பேக் மற்றும் சூட்கேஸ் வகைகளும், பெண்களுக்கு தேவையான புர்கா, ஷால், மக்கன்னா போன்றவைகளும், சமையலுக்குத் தேவையான சுத்தமான செக்கு எண்ணெய் வகைகளும் மற்றும் நம்பகமான நாட்டு மருந்துகளும் தரமான வகையில், நியாயமான விலையில் கிடைக்கும்.

தொடர்புக்கு

தரமான ஸ்கூல் பேக் அனைத்து பேக்குகளும் தயாரிப்பாளர்

# குட்லக் செப்பல்ஸ் & பேக்ஸ்

4027, தெற்கு 3ம் வீதி, புதுக்கோட்டை - 622 001.

✆ 04322-222466; Cell : 9443346313

ரும், எங்களில் சிறந்த சகோதர ரின் மகனாகவும் இருக்கிறீர் கள்" என குறைஷியர்கள் பதில் கூறினார்கள்.

"நான் உங்களுக்கு நபி ஹள்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் தனது சகோதரர் களுக்கு கூறியதைப் போன்று தான் கூறுவேன்."

**'இன்றைய தினம் (நான்) உங்கள் மீது யாதொரு குற்றமும் சுமத்தவில்லை. அல்லாஹ்வும் உங்கள் குற்றங்களை மன்னித்து விடுவானாக! அவன் கருணை யாளர்களிலெல்லாம் மகா கருணையாளன்.'** (அல்குர்ஆன் -12:92) என்று திருவசனத்தை நபி (ஸல்) அவர்கள் ஓதி, "உங்களை எவ்விதத்திலும் பழிக்கப்படாது. நீங்கள் மன்னிக்கப்பட்டவர்கள். நீங்கள் செல்லலாம்" என்று கூறினர்.

அமைதியான போர் வெற்றி யையும், கடும் நோவினை செய்த மக்களுக்கு பொது மன்னிப்பை யும் வழங்கியதை இதுவரை வரலாறு கண்டதில்லை. இனி காணப்போவதுமில்லை.

ஒரு சொட்டு இரத்தமும் சிந்தாமல் புனித மக்கா நகரைக் கைப்பற்றியது பொன்னெழுத்துக் களால் பொறிக்கத்தக்கதாகும். பொது மன்னிப்பும் வழங்கி மணம் சிந்திய மாநபி (ஸல்) அவர்கள் கருணைச் சுடர் வீசும் பேரொளி யாக மின்னுகிறார்கள்!

## கஸ்தூரி மணம்

நபி (ஸல்) அவர்கள், ஒளி சிந்தியது போல், மகிழ்ச்சி தரும் நறுமணமும் சிந்தினார்கள். இத் தகைய சிறப்புகளை அல்லாஹ், நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே வழங்கியுள்ளான்.

நபி (ஸல்) அவர்கள் ஒரு தெருவில் நடந்து சென்றிருந் தால், அவ்வழியே வருபவர்கள் 'நறுமணம் கமழ்கிறது. நபி (ஸல்) அவர்கள் இவ்வழியில் சென்றிருக்கின்றனர்' என்று அறிந்து கொள்வார்கள்!

நபித்தோழர் ஹள்ரத் ஸமுரா (ரளி) அவர்களின் மகனார் ஹள்ரத் ஜாபிர் (ரளி) (சிறுவர்) அவர்களின் கன்னத்தை, நபி (ஸல்) அவர்கள் வருடினர். ஹள்ரத் ஜாபிர் (ரளி) கூறு கின்றனர் : "நபி (ஸல்) அவர் களின் குளிர்ந்த கரங்களையும், நறுமணத்தையும் உணர்ந் தேன். நறுமணப் பொருள் வைக்கப்பட்டுள்ள குப்பியி லிருந்து அத்தரை கையில் எடுத் தது போல் உணர்ந்தேன்" என்று கூறினார்.

ஒரு நாள் ஹள்ரத் ஜாபிர் (ரளி) அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களுக்குப் பின் வாகனத்தில் அமர்ந்து பயணித்த போது, நபி (ஸல்) அவர்களின் இரு தோள்களுக்கிடையில் காணப்படும் இறுதி நபி என்ற முத்திரையின் மீது வாயை வைத்தனர். அதன் நறுமணம்

கஸ்தூரி போன்று கமழ்ந்தது என்று கூறினார்.

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறினார் : "நபி (ஸல்) அவர்களின் வியர்வை நீர் நறுமணம் கமழும். அம்பர், கஸ்தூரி போன்ற நறுமணத்தை விட, அதிக நறுமணம் கமழுவதாக இருந்தது!

நபி (ஸல்) அவர்கள் ஒருவரின் கரங்களை தொட்டால், தொடப்பட்டவரிடம் நாள் முழுவதும் கஸ்தூரி மணம் கமழும் என்று அறியப்பட்டுள்ளது.

நபி (ஸல்) அவர்கள், ஒரு குழந்தையின் தலையை வருடினால், மற்ற குழந்தைகளுக்கிடையில், இக்குழந்தையை அண்ணலார் (ஸல்) அவர்களின் கரம் பட்ட குழந்தை என அறியலாம்.

நபி (ஸல்) அவர்கள், ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்தனர். அப்பொழுது உறக்கம் மேலிட்டு உறங்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது நபி (ஸல்) அவர்களின் புனித உடலில் வியர்வை துளிர்த்தது. அப்பொழுது ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்களின் அன்னை, ஒரு நீண்ட கழுத்து கொண்ட குப்பியைக் கொண்டு வந்து, அதில் வியர்வை நீரை சேகரித்தனர். நபி (ஸல்) அவர்கள் இது பற்றி கேட்டனர். இதை, மற்ற நறுமணப் பொருட்களுடன் கலந்து விட்டால், அது அதிகம் நறுமணம் கமழும் என்று விடையளித்தார்.

நபி (ஸல்) அவர்கள் இயற்கைத் தேவைகளை நிறைவேற்றும்போது, பூமி பிளந்து, உடற்கழிவுகளை உள்வாங்கி, திரும்ப மூடிக் கொள்ளும். அவ்விடத்தில் கழிவுகளின் வாடை இருப்பதில்லை. மாறாக காற்றில் நறுமணம் கமழும் என்று அறியப்பட்டுள்ளது.

இது பற்றி அன்னை ஆயிஷா (ரளி) அவர்கள், அண்ணலார் (ஸல்) அவர்களிடம் வினவிய போது, "யா ஆயிஷா! நபிமார்களின் உடற் கழிவுகளை பூமி உள்வாங்கி, அவற்றை மறைத்து விடும் என்பது உனக்குத் தெரியாதா?" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்.

அண்ணலார் (ஸல்) அவர்கள் மரணித்த பிறகு, அவர்களின் புனித உடலை, ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் குளிப்பாட்டினர். அப்பொழுது, "இறந்த உடலிலிருந்து கழிவுகள் வெளி வந்துள்ளனவா? என்று பார்த்தேன். ஆனால் நபி (ஸல்) அவர்களின் உடல் தூய்மையாகவே இருக்கக் கண்டேன்" என்று ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறினர். மேலும் தொடர்ந்தனர். "உயிர் வாழும் போதும் தூய்மையாகவே இருந்தீர்கள். மரணத்திலும் தூய்மையாகவே இருக்கிறீர்கள்." நபி (ஸல்) அவர்கள் உயிர் வாழும்போது, அவர்களின் புனித உடலிலிருந்து நறுமணம் கமழ்ந்து கொண்டேயிருந்தது என்றும், இது போன்ற

நறுமணத்தை தாம் உணர்ந் ததேயில்லை என்றும் கூறினர்.

நபி (ஸல்) அவர்கள் மரணமுற்றபின் அவர்களின் புனித உடலைப் பார்க்க வந்த உற்ற தோழர் ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களின் நெற்றியில் முத்தமிட்டனர். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் உடலில் நறுமணம் கமழ்ந்து கொண்டேயிருந்தது என்றனர்.

நபி(ஸல்) அவர்களின் உமிழ் நீர் மாமருந்தாகத் திகழ்ந்தது. நபித்தோழர்களின் காயங்களை யும், நோய்களையும் குணப் படுத்தும் சீரிய சஞ்சீவியாக செயல்பட்டது. தான் உவந்து தேர்ந்த இறுதித் தூதருக்கு வியத்தகு பண்புகள் வழங்கி, ஓர் அருளாகவும், அழகிய முன் மாதிரியாகவும் திகழச் செய்த அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

தீதற்ற முழு நிறைவால்
சீருயர்ந்த நிலையடைந்தார்!

பண்பு நிறை பேரழகால்
பற்றி நின்ற இருள் கலைந்தார்!

சாதனைகள் முழுவதுமே
சங்கை மிகு பேரழகாம்!

சாந்த நபி மற்றுமவர்
கிளையார் மீது ஜகமாளும்
இறையவனின் அருள்பொழிக!

## துணை நூற்கள்:


1. சங்கைமிகு குர்ஆன், சிறப்பு மிகு தமிழாக்கம்- அல்லாமா ஆ.கா. அப்துல் ஹமீது பாகவி ஹள்ரத் அவர்கள். தாருல் ஹுதா வெளியீடு, 211, லிங்கி செட்டி தெரு, மண்ணடி, சென்னை-1
2. அல் ரஹீக் - அல் மக்தூம்- அல்லாமா அஷ்ஷைக் ஸஃபிய்யுர் ரஹ்மான் முபாரக் பூரி (ரஹ்) ஹள்ரத் அவர்கள். தமிழில்-முஃப்தீ உமர்ஷரீஃப் காஸிமி ஹள்ரத் அவர்கள். தாருல் ஹுதா வெளியீடு, 211, லிங்கி செட்டி தெரு, மண்ணடி, சென்னை-1
3. இறைத்தூதர் முஹம்மது(ஸல்) - அல்லாமா மு.றா.மு.அப்துற் றஹீம் (ரஹ்) அவர்கள். (MOHAMMAD THE PROPHET - என்ற ஆங்கில நூலின் தமிழாக்கம். மொழி பெயர்ப் பாளர் சாத்தான்குளம் ஜனாப் அப்துல் ஜப்பார் அவர்கள்) வெளியீடு : யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை - 17.
4. நபி ஸலவாத்தின் நற்பயன் கள் - அல்லாமா மு.றா.மு. அப்துற்றஹீம்(ரஹ்) அவர்கள். வெளியீடு : யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை - 17
5. The Prophet's cleanliness- Dr. Waquar Anwar, Radiance Views Weekly, 9 - 15 June 2024, New Delhi - 110020.

# உங்கள் கனிவான கவனத்திற்கு....!

பி.ஆர். சுப்பிரமணி

கிடைத்தற்கரிய இறையின் கொடையான நமது உடல் ஒரு முறை கெட்டு விட்டால் சீர்செய்வது கடினமாகும். உடலை கெடாமல் பாதுகாப்பது ஒன்றே மிகவும் எளிய வழியாகும்.

- காலைச் சிற்றுண்டி உண்ணாவிட்டால் நமது இரைப்பை பாதிப்படையும்.
- தினசரி 2 லிட்டர் தண்ணீர் பருகாவிட்டால் நமது சிறுநீரகங்கள் பாதிக்கப்படும்.
- இரவு 11 மணிக்குமேல் விழித்திருந்தாலும் காலை சூரிய உதயத் திற்குள் விழிக்காவிட்டாலும் நமது பித்தப்பை பாதிப்புறும்.
- மிகவும் குளிர்ந்த மற்றும் பழைய கெட்டுப்போகும் தருவாயில் இருக்கும் உணவை உண்பது நமது சிறுகுடலுக்குத் தீங்கு.
- அதிக அளவில் பொரித்த உணவு மற்றும் அதிக காரம் நமது பெருங்குடலுக்குக் கேடு.
- புகை மற்றும் சிகரெட் புகை சூழ்ந்துள்ள இடத்தில் சுவாசிப்பது நமது நுரையீரல்களைக் கெடுக்கும்.
- துரித உணவு, அதிகநேரம் எண்ணெயில் வறுக்கப்பட்ட உணவு முதலியன நமது கல்லீரலுக்குக் கேடு.
- அதிக உப்பும் அதிக கொழுப்பும் இதயத்தை வெகுவாகப் பாதிக்கும்.
- அதிக இனிப்பு நமது கணையத்தைச் சேதப்படுத்தும்.
- இருளில் செல்போன் மற்றும் கணினியில் வேலை செய்வது கண்களுக்குக் கெடுதல் விளைவிக்கும்.
- எதிர்மறை எண்ணங்கள் நமது மூளையைப் பாதிக்கும்.
- நமது குடும்பம், நட்பு, உற்றார், உறவினர்களின் அன்பும் அனுசரணையும், பராமரிப்பும் இல்லையெனில் நமது உயிருக்கு நன்றன்று.
- நமது எந்த உள்ளுறுப்பும் சந்தையில் கிடைக்காது.

எனவே, நல்ல கவனத்துடன் உடற்பயிற்சியையும் நாள்தோறும் தவறாது செய்து நமது உள்ளுறுப்புகளைப் பாதுகாப்போம்.

## தண்ணீரின் அவசியம்

தண்ணீரின் முக்கியத்துவம் நமக்குத் தெரிந்திருப்பினும் எப்போது எவ்வளவு தண்ணீர் அருந்த வேண்டும் என்ற விபரங்கள் தெரியாமல்தான் இருக்கின்றோம்.

உங்களுக்குத் தெரியுமா?

சரியான நேரத்தில் தண்ணீர் அருந்துவது நமது உடலின் பல பாகங்களையும் செவ்வனே செயல்பட வைக்கிறது.

- ✧ காலை எழுந்தவுடன் 300 மி.லி. தண்ணீர் அருந்துவது நமது உள்ளுறுப்புகள் அனைத்தையும் ஊக்குவிக்கும்.
- ✧ சாப்பிடுவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்பு 300 மி.லி. தண்ணீர் பருகுவது செரிமானத்திற்கு நல்லது.
- ✧ குளிப்பதற்கு முன்னர் ஒரு டம்ளர் தண்ணீர் குடிப்பது இரத்த அழுத்தத்தைக் குறைக்கும்.
- ✧ இரவு படுக்கும் முன்னர் ஒரு டம்ளர் தண்ணீர் பருகுவது மாரடைப்பு, பக்கவாதம் இவற்றிலிருந்து பாதுகாக்கும்.


**தீராத நாள்பட்ட நோய்கள் நிரந்தரமாக குணப்படுத்தப்படும்**

| | | | |
|---|---|---|---|
| ★ வண்டுகடி | ★ மூட்டு வலி | ★ பக்கவாதம் | ★ கிட்னி பெயிலியர் |
| ★ அரிப்பு | ★ வீக்கம், தேய்வு | ★ நரம்பு வாதம் | ★ கிட்னி கல் |
| ★ சோரியாஸிஸ் | ★ இடுப்பு வலி | ★ நரம்பு பிடிப்பு | ★ பித்தப்பை கல் |
| ★ ஆறாத புண் | ★ தோள்பட்டை வலி | ★ முடக்கு வாதம் | ★ கிரியேட்டினின் கூடுதல் |
| ★ அலர்ஜி | ★ குதிங்கால் வலி | ★ நரம்பு இழுப்பு | ★ யூரியா கூடுதல் |
| | | ★ நரம்பு நடுக்கம் | ★ யூரிக் ஆசிட் கூடுதல் |

எங்கும் வைத்தியம் செய்தும் குணமாகாத இலட்சக்கணக்கான நோயாளிகளை 36 வருடங்களாக நிரந்தரமாக குணப்படுத்திய உலகின் ஒரே சாதனையாளர்
ஆயுர்வேதா யூனானி மூலிகை டாக்டர்.

ஹக்கீமுல் மில்லத் **M.முகமது மீரான்** MD (AM)
அரசு அங்கீகாரம் பெற்ற யூனானி மூலிகை மருத்துவர்

**ரஹ்மான் யூனானி மெடிக்கல் சென்டர்**
செந்துறை ரோடு, நத்தம் - 624 401, திண்டுக்கல் மாவட்டம்.

தினசரி வேலை நேரம் : காலை 11 to 1, மாலை 6 to 8

முன்பதிவிற்கு... **97919 05074**

பத்தியம் இல்லை | குறிப்பு : Dhanwanthiri Media Youtube சேனலை பார்க்கவும் | பக்க விளைவுகள் இல்லை

தொடர் : 5

# ஹஜ் பயண வரலாறு

பேராசிரியர் வி.ஏ.எம்.யாஸீன்,
எம்.ஏ.,பி.எல்.,எம்.பி.ஏ.,எம்.ஃபில்.,

ஹஜ் காலங்களில், ஸஃபர் மாத இறுதி வரை டமாஸ்கஸ் மற்றும் மதீனா இடையே மூன்று இரயில்சேவைகள் நடைபெற்றன. டமாஸ்கஸ் நகரத்திலிருந்து மதீனா நகருக்கு ஒட்டகங்களில் 40 நாட்கள் பயணம் செய்தனர். ஆனால் இரயில் பயணத்தில் மதீனா நகரை மூன்று நாட்களில் சென்று அடைந்தனர். மீலாது நாளில் மதீனாவிற்கு மலிவு பயணங்கள் பயணிகளுக்கு வழங்கப்பட்டன. குடும்பங்கள் வசதியாக பயணிக்கும் வகையில் தனி பெட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஹிஜாஸ் இரயில்வே இயங்க தொடங்கியதும், அரேபிய பழங்குடி மக்கள் இரயில் பாதையின் பாதுகாப்பிற்காக மாத ஊதியத்தில் நியமிக்கப்பட்டனர். ரயில்வேயின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புக்காக பல தொழில் நுட்ப வல்லுநர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இந்திய முஸ்லிம்கள் ஹிஜாஸ் இரயில் பாதையை பாக்தாத் வழியாக இந்தியாவிற்கு நீட்டிக்குமாறு கேட்டுக் கொண்டனர். மேலும் புதிய இரயில் பாதை அமைப்பதில் தங்கள் பங்கைச் செய்யத் தயாராக இருப்பதாக அறிவித்தனர். பயணிகளின் பாது காப்பைக் கருதி இரயில்வே நிர்வாகம் இராணுவ அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

முதலாம் உலகப் போரில் பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா, அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளை எதிர்த்து ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகள் போர் புரிந்தபோது உதுமானிய பேரரசு ஜெர்மனி நாட்டின் கூட்டணியில் சேர்ந்து இங்கிலாந்து, ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மீது போர் தொடுத்த போது 1918ஆம் ஆண்டு இங்கிலாந்து ஹிஜாஸ் இரயில்வே மேல் வெடிகுண்டை வீசியதும் இரயில் என்ஜின்களும், இரயில் பெட்டிகளும் தூள் தூளாக சிதறின. வெடிகுண்டுகளால் ஹிஜாஸ் இரயில்வே முற்றிலும் அழிக்கப்பட்டது. உலக முஸ்லிம்களின் ஒற்றுமையை பறை சாற்றும் வகையில் ஹிஜாஸ் இரயில்வே தண்டவாளங்கள் இன்றும் பாலைவனங்களில் நிமிர்ந்து நிற்கின்றன.

1918ஆம் ஆண்டில் முதலாம் உலகப் போர் முடிவடைந்தது. போரில் பங்கேற்ற முஸ்லிம் போர் வீரர்களை ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா நகருக்கு அனுப்பும்படி இங்கிலாந்து மன்னர் ஐந்தாம் ஜார்ஜ் அன்றைய இந்திய நாட்டு செயலாளர் மாண்டேகு பிரபுக்கு (Edwin Samuel Montagu) உத்தரவிட்டார். 2,000 முஸ்லிம் இராணுவத்தினர் கேப்டன் ஸலாமத்துல்லாஹ் கான் தலைமையில் மக்கா நகருக்கு புறப்பட்டார்கள். நமது அரசாங்கம் நம்முடைய மதம் மற்றும் மத பழக்க வழக்கங்களில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டிருக் கிறது. போக்குவரத்து மிகவும் குறைவாக இருக்கும் இந்தக் காலக் கட்டத்தில் நமக்கு ஒரு கப்பலைக் கொடுத்து புனித யாத்திரை செய்வதற்கான வாய்ப்பையும் நமக்களித்துள் ளது என்று ஹஜ் கடமையை நிறைவேற்றிய கேப்டன் ஸலாமத்துல்லாஹ் கான் கூறினார்.

அந்தக் காலத்தில் பிரபல மாக இருந்த தாமஸ் குக் என்ற பிரயாண ஏஜெண்ட் நிறு வனத்தை ஹஜ் பயணத் திற்கு அதிகாரப்பூர்வ பயண முகவராக 1885ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கம் நியமித்தது. இந்த நிறுவனம் ஹஜ் பயணிகளின் இரயில் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, பாஸ்போர்ட், மருத்துவ வசதிகள் மற்றும் யாத்ரீகர்களுக்கான பயணச் சீட்டு பெறுதல் போன்ற நடை முறைகளை கவனித்துக் கொண்டது.

1888ஆம் ஆண்டில் நிறுவப் பட்ட டார்னர்மோரிசன் என்ற பிரிட்டிஷ் கம்பெனி மொகல் லைன் என்ற கப்பல் போக்கு வரத்து கழகத்தை ஆரம்பித்து ஹஜ் பயணத்திற்காக கப்பல் களை ஒதுக்கீடு செய்தது. மொகல் லைன் கப்பல்களில் மிகவும் பழமையானது எஸ்.எஸ். அலவி (1924ஆம் ஆண்டில் கட்டப் பட்டது) மற்றும் எஸ்.எஸ். ரிஸ்வானி (1930ஆம் ஆண்டில் கட்டப்பட்டது) இந்தக் கப்பல் கள் முறையே 1958 மற்றும் 1959ஆம் ஆண்டுகளில் பிரயாணத் திலிருந்து அகற்றப் பட்டன. 999 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் எஸ்.எஸ். சவூதி, 1,460 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் எஸ்.எஸ். முஹம்மதி மற்றும் எஸ்.எஸ். முசாஃபரி, 1,200 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் எஸ்.எஸ். இஸ்லாமி, 1,600 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் எம்.வி. அக்பர், 1,756 பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் எஸ்.எஸ். நூர்ஜஹான் மற்றும் எஸ்.எஸ். நிக்கோபார் ஆகிய கப்பல் களை மொகல் லைன் ஹஜ் பயணத்திற்கு ஒதுக்கீடு செய்தது.

அன்றைய ஹஜ் கமிட்டி உறுப்பினர்களும் மற்றும் வங் காள முஸ்லிம் சமூகத்தின் சில பிரிவினரும், சிந்தியா ஸ்டீம் நேவி கேஷன் நிறுவனத்தை அணுகி

ஹஜ் பயணத்திற்கு கப்பல் போக்குவரத்தை துவங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். சிந்தியா ஸ்டீம் நேவிகேஷன் குஜராத்தி வணிகர்களால் 1919இல் நிறுவப்பட்ட ஓர் இந்திய நிறுவனமாகும். இரண்டு பெரிய நீராவிக் கப்பல்களை 50 இலட்சம் ரூபாய் செலவில் தயாரித்து 1937ஆம் ஆண்டு ஹஜ் பயணத்தை சிந்தியா ஸ்டீம் நேவிகேஷன் தொடங்கியது.

புதிய நீராவிக் கப்பல் இ.எல்.மதீனா மிகவும் பிரபலமானது. இது ஒரு வேகமான கப்பல். 850 பயணிகளை ஏற்றிக் கொண்டு மார்ச் 1938ஆம் ஆண்டு ஆறு நாட்களில் கராச்சியிலிருந்து ஜித்தாவிற்கு பயணம் செய்தது. இது ஒரு சாதனையாக இருந்தது. மொகல் லைன் நிறுவனத்திற்கும், சிந்தியா ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்திற்கும் கடும் போட்டி ஆரம்பித்தது.

மொகல் லைன்ஸ் யாத்ரீகர்களை இலவசமாக ஏற்றிச் செல்ல ஆரம்பித்தது. ஜம் ஜம் புனித நீரை எடுத்துச் செல்வதற்கான குடுவைகளையும் இலவசமாக வழங்கியது. இதனால் சிந்தியா ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனத்திற்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது. இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்ததும் ஹஜ் பயணம் நிறுத்தப்பட்டது. இறுதியில் நஷ்டம் தாங்காமல் சிந்தியா ஸ்டீம் நேவிகேஷன் நிறுவனம் மூடப்பட்டது.

1921-22ஆம் ஆண்டு முதல் பம்பாய் மற்றும் கராச்சியில் ஹஜ் பயணிகளுக்காக செய்யப்பட்ட காவல் துறை மற்றும் பொது சுகாதார ஏற்பாடுகள் தொடர்பாக பம்பாய் அராசாங்கம் 47,469 ரூபாய் செலவழித்ததாகவும் அந்தப் பணத்தை செலுத்துமாறு ஹஜ் குழுவிற்கு வேண்டுகோள் விடுத்தது. ஹஜ் குழு பணத்தை பம்பாய் அரசாங்கத்திற்கு செலுத்தியது. 50 ஆண்டுகளுக்கும் மேலாக பம்பாய் ஹஜ் பயண மையமாக பெருமை பெற்றது. ஆனால், 1932ஆம் ஆண்டிலிருந்து கராச்சி துறைமுகத்தில் ஹஜ் பயணம் அதிகரித்தது.

1929ஆம் ஆண்டு எச்.பி. கிளேட்டன் தலைமையில் ஹஜ் ஏற்பாடுகளை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டது. ஸர். சேத் ஹாஜி அப்துல்லாஹ் ஹாரூன் குழு உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார். இவர் பெரும் தனவந்தர். பல சர்க்கரை ஆலைகளுக்கு உரிமையாளராக இருந்த இவர் அந்தக் காலத்தில் “சர்க்கரை சக்கரவர்த்தி” என்றழைக்கப்பட்டார். மதரஸாக்கள் நடத்துதல், முஸ்லிம் பெண்கள் பள்ளிகள் நடத்துதல், ஹஜ் பயணிகளுக்கு உதவுதல் போன்ற நல்ல காரியங்களை செய்து வந்தார். பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு இவர் ஆலோசகராக இருந்தபடியால் இவருக்கு ஸர் பட்டம்

கொடுக்கப்பட்டது. கிலாஃபத் இயக்கத்தில் ஈடுபட்டவர். அல்வாஹித் என்ற பத்திரிகையையும் நடத்தி வந்தார். பம்பாயிலிருந்து சிந்துவை பிரித்து சிந்து மாகாணம் என்ற தனி மாகாணம் உருவாக இவரே காரணமாகும்.

கையெழுத்திடப்பட்ட வெற்று காசோலையை கொடுக்குமளவிற்கு இவரை நான் நம்புகிறேன் "I will trust this man with a blank cheque" என்று இவரைப்பற்றி மகாத்மா காந்தி கூறியுள்ளார். கல்கத்தா, பம்பாய் மற்றும் கராச்சி ஆகிய துறைமுகங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகள், உணவுகள், அவர்களுக்கு மருத்துவ வசதிகள், எல்லா கப்பல்களிலும் ஒரே மாதிரியான கட்டணம் நிர்ணயித்தல், கப்பல்களில் இட வசதிகள், உணவுகள், மருத்துவ வசதிகள், பயணக் கட்டண சலுகைகள், கல்கத்தா, பம்பாய் மற்றும் கராச்சி ஆகிய நகரங்களுக்கு ஹஜ் பயணிகள் வருவதற்கு இரயில் பயண வசதிகள், ஏழை பயணிகளுக்கு உதவுதல் போன்ற எல்லா விஷயங்களையும் தனி மனிதராக நின்று ஹாஜி அப்துல்லாஹ் ஹாரூன் நிர்வாகம் செய்தார். 1930ஆம் ஆண்டில் காலரா நோய் பரவிய போது இவர் ஹஜ் பயணிகளுக்கு தடுப்பூசிகளுக்கு ஏற்பாடு செய்தார். ஏழ்மையிலிருந்து மிகப் பெரிய நிலையை அடைந்த இவர் 1942ஆம் ஆண்டில் கராச்சியில் மரணித்தார்.

முதன் முதலாக 1946ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் 18 ஹஜ் பயணிகள் விமானத்தில் பயணம் செய்தனர். இந்த விமானப் பயணத்தை அந்தக் காலத்து பத்திரிகைகள் பெரிய செய்தியாக வெளியிட்டன.

கப்பல் போக்குவரத்து 1962ஆம் ஆண்டில் தேசியமயமாக்கப்பட்ட பின் மொகல் லைனின் கட்டுப்பாடு ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா என்ற இந்திய அரசு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இறுதியாக 1987ஆம் ஆண்டில் மொகல் லைன் ஷிபபங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா நிறுவனத்தில் இணைக்கப்பட்டது.

சவூதி நிறுவனமான ஹாஜி அப்துல்லாஹ் அலீரேசா மற்றும் கோ லிமிடெட் என்ற நிறுவனம் ஜித்தாவில் மொகல் லைனின் பிரயாண ஏஜெண்டுகளாக பணியாற்றியது. இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட எஸ்.ரஃபீயுத்தீன் என்பவர் இந்த நிறுவனத்தில் துணை பொது மேலாளராக பணியாற்றி வந்தார். அவருக்கு அப்போது வயது 70 இருக்கும்.

1927ஆம் ஆண்டில், மொகல் லைன் கப்பல்கள் இந்தியாவிலிருந்து வந்த 36,000 ஹாஜிகளில் கிட்டத்தட்ட 20,000 பேரை ஏற்றிச்

"அல்லாஹ் எந்தவொரு நோயையும் அதற்குரிய நிவாரணியை ஏற்படுத்தாமல் இறக்குவதில்லை" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரீ)

# பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை-1.

04373-254354; 253339; 99444 54354

சுப முகூர்த்தப் பட்டுகளுக்கு...

SILK MARK

மக்களின் பாராட்டில் ... மயிலாடுதுறை சீமாட்டி ...

# சீமாட்டி

பட்டு - ஜவுளி - ரெடிமேட்ஸ்

மயிலாடுதுறை. ☎ : 222587

: seemattiali@gmail.com

: +91 80564 02677

சென்றன. 1930ம் ஆண்டு முதல் 1939ஆம் ஆண்டு வரை இந்தியாவில் இருந்து வந்த யாத்திரைக் கப்பல்களில் 70 சதவீதத்திற்கும் அதிக மானவை மொகல் லைன் கப்பல் களாக இருந்தன. 1960ஆம் ஆண்டு முழுவதும், சுமார் 14,500 இந்திய ஹாஜிகள் கடல் வழியாகவும் மேலும் 1,000பேர் ஏர்-இந்தியா விமானங் கள் மூலமாகவும் பயணம் செய் தனர். "டிரேட் விங்ஸ்" என்ற நிறுவனத்தின் மூலம் ஹஜ் கமிட்டியால் விமானங்கள் ஹஜ் பயணத்திற்கு என்று ஒதுக்கப்பட்டன. வான் மற்றும் கடல் மார்க்கம் ஆகிய இரண்டும் பம்பாயிலிருந்து மட்டுமேமேற்கொள்ளப்பட்டன. கப்பல் பயணக் கட்டணம் "முதல்" வகுப்பிற்கு 1,000 ரூபாயா கவும், "டெக்" வகுப்பிற்கு 500 ரூபாயாகவும் இருந்தது. கடல்வழியாக வரும் யாத்ரீகர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறையத் தொடங்கியது, 1994 ஆம் ஆண்டு வாக்கில் அது 4,700 ஆகக் குறைந்தது.

அக்பர் மற்றும் நூர்ஜஹான் ஆகிய இரண்டு கப்பல்கள் 1994 ஆம் ஆண்டு வரை ஹஜ் யாத்ரீகர்களை ஜித்தாவிற்கு அழைத்துச் சென்ற கடைசி கப்பல்களாகும். பாழடைந்த இரண்டு கப்பல்களும் படிப் படியாக நிறுத்தப்பட்டதால் 1995ஆம் ஆண்டு முதல் இந்த கடல் பயணம் நிறுத்தப்பட் டது. விமானப் பயணத்திற்கான தேவையும் அதிகரித்தது. 1995ஆம் ஆண்டில் ஏறத்தாழ 31,000 ஹஜ் பயணிகள் விமானங்களில் சென்றனர். இறுதியாக 1995ஆம் ஆண்டில், கடல் பயணம் முற்றிலும் நிறுத்தப்பட்டது. அனைத்து இந்திய யாத்ரீகர்களும் விமானம் மூலம் ஹஜ் பயணத்தை தொடங்கினர்.

ஹஜ் பயணம் நல்ல முறை யில் நடைபெறுவதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் பல ஏற் பாடுகளை செய்தது. 1927ஆம் ஆண்டில், பம்பாய் காவல்துறை ஆணையர் டிஹீலி தலைமை யில் 10 பேர் கொண்ட ஹஜ் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த ஹஜ் கமிட்டி 1932ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. துறைமுக ஹஜ் குழுச் சட்டம் (Port Hajj Committee Act of 1932) 1932ஆம் ஆண்டில் நிறை வேற்றப்பட்டது. கல்கத்தா துறைமுக ஹஜ் குழு, பாம்பே துறைமுக ஹஜ் குழு, கராச்சி துறைமுக ஹஜ் குழு என்று மூன்று ஹஜ் குழுக்கள் கல்கத்தா, பம்பாய் மற்றும் கராச்சி ஆகிய இடங்களில் நிறுவப்பட்டன.

இரண்டாம் உலகப்போரின் போது இந்தியாவின் வைஸ்ராய் லார்டு லின்லிந்த்கோ (Lord Linlithgow), முஸ்லிம்கள் ஹஜ்

பயணத்தை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறினார். போர்க் காலத்தில் கப்பல்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. போர்க்காலத்தில் கடல் பயணம் பாதுகாப்பு கிடையாது என்று வைஸ்ராய் கூறிய போதும் முஸ்லிம்கள் ஹஜ் பயணத்தை வலியுறுத்தினார்கள்.

1959ஆம் ஆண்டில் இன்னொரு ஹஜ் குழுச்சட்டம் (The Hajj Committee Act 1959) நிறைவேற்றப்பட்டு, இந்திய ஹஜ் குழு (Hajj Committee of India) என்ற கமிட்டி நிறுவப்பட்டது. 1959ஆம் ஆண்டில், இந்திய ரிசர்வ் வங்கி 10 மற்றும் 100 ரூபாய் மதிப்புள்ள இரண்டு சிறப்பு "ஹஜ் நோட்டுகளை" வெளியிட்டது. இந்த நோட்டுகள் இந்தியாவில் செல்லாது. ஆனால்சவூதிவங்கிகளில் இந்த நோட்டுகளை இந்திய ரூபாயாக மாற்றிக் கொள்ளலாம்.

1959ஆம் ஆண்டில் கப்பலில் சாதாரண வகுப்பில் பயணம் செய்யும் ஹஜ் பயணிகள் தங்களுடன் 1,200 ரூபாய் இந்திய பணமாக எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. முதல் வகுப்பில் பயணம் செய்பவர்கள் தங்களுடன் 1,800 ரூபாய் இந்திய பணமாகஎடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. விமானம் மூலம் பயணம் செய்பவர்கள் தங்களுடன் 1,700 ரூபாய் இந்திய பணமாகஎடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

பிரான்ஸ் நாட்டில்சமீபகாலமாக ஹஜ் பயணம் எல்லோருடைய கவனத்திற்குரிய விஷயமாக மாறியுள்ளது. இன்று, இளைய தலைமுறையினர் இளமைப் பருவத்திலேயே ஹஜ் கடமையை நிறைவேற்றி வருகிறார்கள். ஹஜ் பயணம் இவர்களின் வாழ்க்கைப் பாதைகளில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்துகிறது. கடந்த 10 ஆண்டுகளாக பெண்கள் ஹஜ் பயணத்தில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஹஜ் பயணம் மேற்கொள்ளும் யாத்ரீகர்களில் 50 சதவிகிதம் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். வயதாகிவிட்டால் ஹஜ் பயணத்தை மேற்கொள்ள சிரமமாக இருக்கும். ஆகவே இளம் வயதிலேயே ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட வேண்டும் என்பது பிரான்ஸ் நாட்டு இளம் பெண்களின்கருத்தாகும். இளைஞர்கள் தங்களின் பெற்றோர்களையும் அழைத்துக் கொண்டு ஹஜ் பயணத்தை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஹஜ் பயணம் என்பது வாழ்க்கையில் ஒரே ஒரு முறை நடக்கும் நிகழ்வு என்றில்லாமல் இன்றைக்கும் பிரான்ஸ் நாட்டு இளைய சமுதாயத்தினர் பல முறை ஹஜ் கடமையை நிறைவேற்றும் வழக்கத்தை கொண்டவர்களாக மாறி வரு

கிறார்கள். உம்ரா செய்யவும் இவர்கள் பல முறை மக்கா நகருக்கு வந்து கொண்டிருக் கிறார்கள். இவர்களில் பெரும் பாலானோர் மருத்துவர்களா கவும், பொறியாளர்களாகவும் இருப்பதால் இவர்கள் தங்களின் வருமானத்தில் ஒரு பகுதியை ஹஜ் பயணத்திற் காக ஒதுக்கி வைக்கிறார்கள். இவர்கள் அல்ஜீரியா, துனிசியா மொராக்கோ ஆகிய இஸ்லாமிய நாடுகளை சேர்ந்தவர்களாக இருப்பதால் இவர்களின் இஸ் லாமிய குடும்பக் கலாச்சார பின்னணி இவர்களின் ஹஜ் மற்றும் உம்ரா பயணங்களுக்கு தூண்டுகோலாக அமைகிறது.

பிரான்ஸ் நாட்டிலுள்ள முஸ்லிம் மணப்பெண்கள் திருமணத்தின் போது மஹருக்கு பதில் ஹஜ் கடமையை நிறைவேற்ற தங் களை மக்கா நகருக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார் கள். 20 ஆண்டுகளுக்கு முன் இஸ்லாமிய சொற்பொழிவு நிகழ்ச்சிகளுக்கு ஆண்கள் மட்டும் வருவார்கள். ஆனால் இப்போது ஏராளமான இளம் பெண்கள் வருகிறார்கள் என்று பிரான்ஸ் நாட்டிலுள்ள அல்-இமாம் அல்- ஷாதிபி திருகுர்ஆன் கல்விக் கூடம் (Al-Imam Al-Shatibi Institute for Quranic Studies) என்ற நிறுவனத் தின் தலைவர் நபில் அன்சாரி கூறியிருக்கிறார்.

முற்காலத்தில் முதுமை யில்தான் பெரும்பாலானோர் ஹஜ் கடமையை நிறைவேற்றினார்கள்.

ஆனால், இன்றைக்கு பிரான்ஸ் நாட்டு இளைஞர்கள் முதலில் திருமணத்தை முடித்துக் கொள்ள வேண்டுமா? அல்லது ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட வேண்டுமா? என்ற சிந்தனையில் ஆழ்ந்தி ருக்கிறார்கள் என்று நபில் அன்சாரி கூறியிருக்கிறார். திருமணம் முடிந்த உடனே கணவனும், மனைவியுமாக ஹஜ் கடமையை நிறைவேற்ற பிரான்ஸ் நாட்டு பெண்கள் விரும்புவதாகவும் அவர் கூறினார். முந்தைய தலை முறையினர் முதுமையில் ஹஜ் கடமையை நிறைவேற்றிவிட்டு புனிதத்துவத்துடன் வாழ்வின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று பிரான்ஸ் நாட்டு இளைய தலை முறையினர் திருமணம் முடிந்தவுடனே ஹஜ் கடமையையும் நிறைவேற்றிவிட்டு புனிதத் துடன் வாழ்வின் தொடக்கத்தை எதிர்நோக்குகிறார்கள் என்றும் நபில் அன்சாரி கூறியிருக்கிறார்.

சுவர்க்கத்திலிருந்து ஹள்ரத் ஆதம் (அலை) அவர்களும், ஹள்ரத் ஹவ்வா (அலை) அவர்

களும் வெளியேறிய பின் வெகு காலத்திற்குபின் அவர்கள் இருவரும் அரஃபா மைதானத்தில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொண்டார்கள். ஆகவே புதுமணத் தம்பதிகள் ஹஜ் கடமையை நிறைவேற்றுவது சிறப்பானது என்று பிரான்ஸ் நாட்டிலுள்ள இஸ்லாமிய அறிஞர் முஹம்மது அபூ ஸைத் கூறியுள்ளார். மோட்ஸ் டிராவாக்ஸ் என்ற பிரஞ்சு பத்திரிகையில் சாரா ஹுஸ்னியா என்பவர் பெலெரினேஜ் ஹஜ் என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் இந்த விபரங்களை கூறியுள்ளார்.

மொராக்கோ நாட்டை பூர்வீகமாகக் கொண்ட நபில் என்னஸ்ரி என்பவர் 2023ஆம் ஆண்டில் பிரெஞ்சு நாட்டின் தலைநகரமான பாரிஸில் இருந்து சைக்கிளில் ஹஜ் பயணத்தை தொடர்ந்தார். இத்தாலி, ஸ்லோவேனியா, குரோஷியா, மாண்டினீக்ரோ, போஸ்னியா, ஹெர்ஸகோவினா, அல்பேனியா, கிரீஸ், ஜோர்டான் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளை சைக்கிளில் 57 நாட்களில் கடந்து மக்கா நகரை அடைந்தார். மதீனா நகரை அடைந்த நபில் என்னஸ்ரி 57 நாட்கள் பயணம் செய்து மதீனாவிற்கு வந்து தொழுது துஆ கேட்கும்போது ஏற்படும் உணர்வுகளுக்கும் ஒரு மணி நேரம் விமானத்தில் பயணம் செய்து வந்து தொழுது துஆ கேட்கும்போது ஏற்படும் உணர்வுகளுக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்று அவர் கூறினார். "கடந்த காலத்தில் எனது குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் கால்நடையாகப் பயணம் செய்தனர். அதற்கு பல மாதங்கள் அல்லது வருடங்கள் கூட ஆகியிருக்கலாம். பயணத்தின்போது சிலர் உயிரிழந்தனர். இதையெல்லாம் நான் நினைவில் கொள்ளும்போது, என்னுள் ஒரு வலிமை ஏற்படுவதை காண்கிறேன்." என்று அவர் கூறினார். என்னஸ்ரி ஒரு பிரெஞ்சு ஆய்வாளர், எழுத்தாளர் மற்றும் சமூக ஆர்வலர், கல்வி உள்ளிட்ட பல்வேறு சமூகப்பிரச்சினைகளில் கவனம் செலுத்துபவர். 1935ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 22 குஜராத் முஸ்லிம்கள் அஹமதாபாத் நகரத்தில் இருந்து இரண்டு பஸ்களில் மக்கா நகருக்கு பயணம் செய்தனர். ஆயிரக்கணக்கான இந்துக்கள், முஸ்லிம்கள், ஃபார்சிகள் இவர்களை வழி அனுப்பி வைத்தனர். அஜ்மீர், டெல்லி, குவெட்டா, சஹேதான், நிஷாபூர், தெஹ்ரான் மற்றும் பாக்தாத் போன்ற இடங்களின் வழியாக இவர்கள் பயணம் செய்ததாக இந்தப் பயணத்தில் கலந்து கொண்ட டாக்டர் முகமது ஹுசைன் ஹக்கீம்

என்பவர் கூறியுள்ளார். ஒவ்வொரு நாட்டின் அதிகாரிகளிடமும் பயண அனுமதி பெறுவதில் பல சிரமங்களுக்கு இவர்கள் ஆளாகியிருக்கிறார்கள். ஈரான் நாட்டை கடந்து, கடினமான பாதைகள் வழியாக அரபு நாட்டு பாலைவனத்தை அடைந்தது ஒரு சாதாரண பயணமில்லை என்றும் இவர் கூறியுள்ளார். ஈரானில் பாழடைந்து கிடக்கும் ஷீரின் அரண்மனையின் கீழ் சுத்தமான நீர் ஒரு கால்வாய் வழியாக பாய்வது அற்புதமாக இருந்தது என்றும், அந்த நீர் ஒரு மலையிலிருந்து கொட்டுவதாகவும் டாக்டர் முகமது ஹுஸைன் ஹக்கீம் கூறியுள்ளார். கோஹ் இ.பே.சித்துன் என்று சொல்லப்படும் அலீ பாபாவின் மர்மமான குகைக்கும் சென்று வந்தார்கள். கணிதம், வானியல், தத்துவம் ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ற பிரபல பாரசீக கவிஞர் உமர் கய்யாம் அவர்கள் அடக்கப்பட்டிருக்கும் இடத்திற்கும் இந்தப் பயணக் குழு சென்றது.

பங்களாதேஷ் நாட்டிலுள்ள சட்டோகிராம் என்ற துறைமுகத்திலிருந்து 32 மாடிக் கப்பல் 2024ஆம் ஆண்டு முதல் செயல்படத் தொடங்கும் என்றும், இந்த மாபெரும் கப்பல் 3,000 ஹஜ் பயணிகளை எட்டு நாட்களில் ஜித்தா துறைமுகத்தில் கொண்டு போய் சேர்க்கும் என்றும் கர்ணபுலி கப்பல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர். எம்.ஏ.ரஷீத் கூறியுள்ளார். இந்தப் பயணத்தின் கட்டணம் மலிவாக இருக்கும் என்றும் அவர் கூறினார். இந்தக் கப்பல் வருடத்திற்கு இரண்டு மாதங்களுக்கு ஹஜ் யாத்ரீகர்களை ஏற்றிச் செல்லும் என்றும், மீதமுள்ள 10 மாதங்களில் ஆசியாவின் பல்வேறு வழித்தடங்களில் பயணிகளை ஏற்றிச் செல்லும் என்றும், ரஷீத் கூறியுள்ளார். ஹஜ் தொடங்குவதற்கு ஏழு நாட்களுக்கு முன்பு இந்தக் கப்பல் புறப்பட்டால், சவூதி அரேபியாவுக்குச் சென்று 7 அல்லது 8 நாட்களுக்கு ஒரு ஹோட்டலில் வாடகைக்கு தங்க வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கா நகருக்கு புனித யாத்திரைக்கு பயணிகளை அனுப்புவதில் இந்தோனேசியா முதலிடத்தை வகிக்கிறது. இந்தியா இன்றைக்கு மூன்றாமிடத்தில் இருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவிலிருந்துதான் அதிக பயணிகள் மக்கா நகருக்கு புனித யாத்திரைக்கு சென்றனர் என்ற செய்தியை அன்றைய "தி டைம்ஸ்" பத்திரிகை வெளியிட்டது. வெகு விரைவில் இந்தியா முதலிடத்தைப் பிடிக்கும் என்பதில் எந்த விதமான சந்தேகங்களும் இல்லை.

இன்ஷா அல்லாஹ்!

# மன்னர்களுக்கு அண்ணலாரின் இறைநெறி அழைப்பு

கம்பம் மவ்லானா
**பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹஜ்ரத்**

மதீனாவில் அமைதி நிலவியது. அண்ணல் நபி (ஸல்) அவர்களின் ஆட்சியில் அனைவரும் நிம்மதியாக வாழ்ந்தனர். இறைமாட்சியே ஆங்கு மலர்ந்தது. எவ்வித சுயநலமோ... விளம்பரமோ... பிறர் மெச்சக் காரியமாற்றும் முகஸ்துதியோ.... அடக்குமுறையோ, பழி வாங்கலோ துளியுமின்றி செம்மலின் ஆட்சி சீராகச் சென்று கொண்டிருந்தது. தம்மை ஏற்றோரையும், ஏற்காதோரையும் சமமாகப் பாவித்து, நீதி வழுவா நெறிமிகு ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்கள் அந்த அரசியல் பெருமேதை. இலஞ்சமோ, ஊழலோ, ஏமாற்றுதலோ, மோசடியோ இல்லை.

வஞ்சகர்களான - துரோகிகளான 'முனாபிக்'களிடமும் நளினமாகப் பரந்த மனதுடன் நடந்து கொண்டார்கள்.

ஆட்சிப் பொறுப்பின் அதிபராக இருந்தும் தனக்கெனத் தனி அரியணையோ, ஆசனமோ, தனி மரியாதையோ செய்வதை நபி (ஸல்) அவர்கள் சிறிதும் விரும்பவில்லை. அவைக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வரும்போது மரியாதையின் நிமித்தம் எவரேனும் எழுந்து நின்றால், அவரைக் கண்டித்து, இது அனாவசியம்என அறிவுறுத்துவார்கள். இனி இவ்வாறெல்லாம் நடந்து கொள்ள வேண்டாம் எனக்கூறுவார்கள். அவனிவாழ் அரசியல் தலைவர்களிடையே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஓர் அதிசயம் என்று தான் சொல்ல வேண்டும். இறையாட்சியின் மறையாட்சியே அரசோச்சியது. அறமிகு அரசியல் ஆங்கு நிலைபெற்றது. மக்களுக்காகவே ஆட்சியாளர்... மக்கள் நலனுக்காகவே ஆட்சி என்று அமைந்தது.

புகழுக்கும், போற்றுதலுக்கும், பட்டங்களுக்கும், மரியாதைக்கும், பகட்டுக்கும், பந்தாவுக்கும், விளம்பரத்துக்கும், பெருமைக்கும் ஏங்கி எதிர்பார்த்து அவை கிடைக்கா விட்டால் சொந்தமாகவே ஏற்பாடு செய்து சந்தோஷப்பட்டுக் கொள்ளும் பொதுநல மாண்பாளர்கள் பெருகி வாழும்

உலகில் அப்பழுக்கில்லாத தூய அரசியலை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி, களங்கமில்லாத வாழ்க்கை நடத்திய கவின்மிகு அண்ணலார் (ஸல்) அவர்கள் “ஒரு விந்தை மனிதர்” என்றே கூற வேண்டும்.

எல்லா வகையிலும் ஏனைய அரசியல்வாதிகளிலிருந்து இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களின் திருவாழ்க்கை முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது. “உண்மையான தூய அரசியல் வாதி எப்படி இருக்க வேண்டும்?” என்பதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள். அரசியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ, தமக்கோ, தம் குடும்பத்தினர், உறவினர், நண்பர்களுக்கோ எந்த வகையிலும் சலுகை காட்டாது நீதியுடன் ஆட்சி செய்தார்கள். அவர்களது பாச மகளார் ஃபாத்திமா (ரளி) அவர்களும் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். வறுமையும், சிரமமுமே அவரின் அன்றாட வாழ்க்கையாக இருந்தது. வீட்டுவேலைகள் அத்தனையும் அவரே செய்து வந்ததால், உடல் சோர்ந்து, நலிவுற்றார். வேதனையும், வலியும் உடலை வருத்தியது.

“ஏன் சிரமப்படுகின்றாய்? உன் தந்தையிடம் சென்று பணியாளர் ஒருவரைக் கேட்டுப் பெற்று வந்தால் உனது சிரமம் குறையுமே” என அவரின் கணவர் ஹள்ரத் அலி (ரளி) அவர்கள் ஆலோசனை சொன்னார். அதைக் கேட்டுச் சென்று, தயக்கத்துடன் தந்தையிடம் விண்ணப்பித்த மகளுக்கு ஏமாற்றமே எஞ்சியது. ஆம்! மகளின் கோரிக்கை நிராகரிக்கப் பட்டது. “இரவு வேளையில் இறைவனைத் துதித்துத் தூங்கு மகளே! உன் உடல் சோர்வு பறந்தோடும்” என்று அறிவுரை கிடைத்தது. ஸுப்ஹானல்லாஹ்... அல்ஹம்து லில்லாஹ்... அல்லாஹு அக்பர்... என்ற இறைத்துதியை ஓதுமாறு பணிக்கப்பட்டது.

ஆரம்ப காலக் கட்டத்தில் அமைதியைத் தேடி முஸ்லிம் களில் பலர், அபிஸீனியா (எத்தியோப்பியா) சென்ற நிகழ்வு உங்கள் நினைவில் இருக்கலாம். அந்நாட்டு மன்னர் நஜ்ஜாஷி ஆதரவு தந்து, அரவணைத்து, அடைக்கலம் தந்ததும் நினைவிருக்கலாம். இப்போது மதீனாவில் ஆட்சியும், மார்க்கமும் நன்கு ஆழ வேரூன்றி அடர்ந்து படர ஆரம்பித்திருந்தது. இனி எந்த அன்னப் பறவைகளும் எங்கும் பறந்து செல்ல வேண்டாம். சென்ற பறவைகளும் தம் சொந்த வீட்டிற்குத் திரும்பி வந்து இளைப்பாறலாம் என்றானது.

அபிஸீனியாவில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களின் தலைவர் (அமீர்) ஜஅஃபர் (ரளி) அவர்களுக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு மடலொன்று

அனுப்பினார்கள். அனைவரையும் மதீனாவிற்கு வருமாறு அழைத்திருந்தார்கள்.

அபிஸீனியா சென்றிருந்தவர்களில் மக்காவின் தலைவர் அபூஸுஃப்யானின் மகளார் உம்முஹபீபாவும் ஒருவர். இவர் தன் கணவர் உபைதுல்லாஹ்பின் ஜஹ்ஷுடன் சென்றிருந்தார். இறைநெறியை இதயப்பூர்வமாக ஏற்றிருந்த இப்பெண்ணரசி இப்போது கணவனை இழந்து கைம்பெண்ணாக ஆதரவற்றிருந்தார். சில அரசியல் காரணங்களுக்காகவும், மதிப்பு வாய்ந்த அம்மங்கையர்க்கரசிக்குத் தகுந்த துணையாகவும் இருக்க எண்ணி, அவருக்கு விருப்பம் இருக்குமாயின் அவரைத் தமக்குத் திருமணம் செய்து வைக்குமாறு "அபிஸீனிய மன்னர் நஜ்ஜாஷிக்கு அண்ணலார் (ஸல்) அவர்கள் மடல் அனுப்பினார்கள். மதிப்பிற்குரிய அம்மடலைப் பெற்ற, மன்னர் உம்முஹபீபாவுக்குத் தூது அனுப்பி அவரது விருப்பத்தைக் கேட்டு வரச் செய்தார்.

கனவின் மூலம் முன்னதாகவே தனக்கு உணர்த்தப்பட்டிருந்ததாகக் கூறிய அப்பெருமாட்டி முழு மனதுடன் ஒப்புதல் தந்தார். திருமணம் என்பது ஓர் ஒப்பந்தம்தான். இருவரது மன விருப்பத்துடன் கூடிய ஒப்புதலும், அதற்கான சாட்சிகளும் இருப்பின் அது நிறைவேறிவிடும். மன்னரின் ஏற்பாட்டில் சிறப்பான மண விருந்து அரண்மனையில் நடைபெற்றது. அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கேற்ப முன்னர் அகதிகளாகக் குடியேறி அடைக்கலம் தேடிக்கொண்ட முஸ்லிம்களனைவரும் மதீனா செல்லும் எண்ணத்தை மன்னரிடம் தெரிவித்தனர். பேருள்ளம் கொண்ட பெரு மன்னர் நஜ்ஜாஷி உளம் நெகிழ்ந்தார். "உண்மைஇறைக்கொள்கையை ஏற்று கண்ணியமாக வாழ்க்கை நடத்தி வந்த நற்சான்றோர்களான உங்களைப் பிரிவதில் நானும், எனது நாட்டு மக்களும் மிகுந்த கவலை கொள்கின்றோம். உங்களால் எங்களுக்கு அருளும், வளமும், சிறப்பும் கிடைத்தன. இறைத் தூதர் நபி (ஸல்) அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுங்கள் " என்று அன்புடன் வழியனுப்பி வைத்தார் அந்த நல்லரசர். பயணச் சாதனங்கள், அன்பளிப்புகள், இரு படகுகள் தந்து நெஞ்சம் நெகிழ விடை தந்தார் அந்தப் பெருமகன். அறவாழ்வு நடத்திய அஸ்ஹமா மன்னர் அற்புத மனிதர்தான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்களுக்கு இறைவன் தந்த தூதுத்துவம் அகிலமனைத்திற்கும், எல்லாக் காலத்திற்கும்

ஏற்றதாகும். மக்கா-மதீனா அரபு நிலங்களுக்கு மட்டுமல்ல. இத னால் இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் அண்டை நாட்டரசர்கள், தொலைதூர நாடுகளின் மன்னர்கள், தலைவர்களுக்கு இறைநெறி அழைப்பாணை ஓலை அனுப்ப முடிவு செய்தார் கள். தாம் எந்த இலட்சியத்திற் காக இறைவனால் நியமிக்கப் பட்டார்களோ அந்தப் பணியை நிறைவாக முழுமையாகச் செயல்படுத்துவதில் பெருமானார் (ஸல்) அவர்கள் பெரிதும் முனைப்புக் காட்டினார்கள்.

அபிஸீனிய மன்னர் நஜ்ஜாஷிக்கு இறைநெறியை எடுத்துக் காட்டி இஸ்லாம் பற்றி விளக்கி அனுப்பப்பட்ட மடல் பெரிதும் பயன் தந்தது. இறைநெறியை ஏற்று மிகச் சிறந்த முஸ்லிமாக அவர் மாறி இருந்தார். அன்றைய உலகின் வல்லரசுகளாக பாரசீகமும், ரோமாபுரியும் திகழ்ந்தன. நாடு கள் பலவற்றை ஆக்கிரமித்து, தங்களது ஆதிக்கத்திற்குக் கொண்டு வந்து, அகன்ற சாம் ராஜ்ஜியங்களாக ஆக்கியிருந் தண. பாரசீகர்களும், ரோமானி யர்களும் பாரசீக மன்னர் கொஸ்ரோஸுக்கு இறைநெறி குறித்து நினைவூட்டி, மடல் நீட்டி தூதர்களை வழியனுப்பி வைத்தார்கள் அண்ணலார் (ஸல்) அவர்கள். மடலைப் பெற்ற மன்னர், மதீனா மற்றும் இறைத்தூதர் நபி (ஸல்) அவர் கள் பற்றி சிறிது அறிந்திருந் தார். அவர் படித்த தெளிவான செய்திகளை, அது பற்றிய உண்மைகளை தனக்குத் தெரிவிக்க யமன் நாட்டு ஆளுநருக்குக்கட்டளையிட்டு ஓலை அனுப்பினார்.

## இஸ்லாம் இறைவனின் நெறியாகும்

பாரசீகத்துப் பேரரசரிடம் இருந்துவந்த மடலைப்பெற்றுப் படித்திட்ட ஆளுநர் "பாதான்" மதீனத்து இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் பற்றிய உண்மை நிலையைத் தெளி வாக அறிந்து வருவதற்காக இரண்டு அதிகாரிகளை அக் கணமே மதீனாவிற்கு அனுப்பி வைத்தார். மதீனாவிற்கு வந்த அவ்விரு தூதர்களும் அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சந்தித்து, வந்த நோக்கத்தை எடுத்துக் கூறினர்.

அவர்களின் தோற்றத்தைப் பார்த்திட்ட அண்ணலார் (ஸல்) அவர்கள் "தூதர்களே! ஆண்மை யின் அழகுச் சின்னமான தாடியை முழுவதுமாக மழித்து விட்டு மீசையைப் பெரிதாக வளர்த்து கரடு முரடாக முறுக்கி விட்டிருக்கின்றீர்களே! உங்களை இப்படிச் செய்யச் சொன்னது யார்?" என வினவி னார்கள். அதற்கு அவ்விரு வரும் "எங்கள் இறைவன்தான் இப்படிச் செய்ய சொன்னார்" என்றனர். தங்களின் அரசரை

இறைவன் என்றே குறித்தனர். அக்காலத்திய மக்களில் பலர் அரசனை இறைவனாக எண்ணி வணங்கவும் செய்தனர். அகந்தையும், ஆணவமும், அடக்குமுறையும் மிக்க அராஜக மன்னர்கள் தம்மை ஆண்டவனாக நம்பி வணங்குமாறு மக்களை நிர்ப்பந்தப்படுத்தினர். எவரும் அடையமுடியாத இறைத்துவத்திற்கு ஆசைப்பட்டனர்.

"தூதர்களே! எனது இறைவனும், எல்லாரின் இறைவனுமான அல்லாஹ் தாடியை அழகுடன் வளர்த்து, மீசையை வெட்டிக் கத்தரித்து சீராக்குமாறு கட்டளையிட்டுள்ளான்" என்றார்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் மடலை அலட்சியப்படுத்திய பாரசீக மன்னன் தகவல் பெறும் நல்லெண்ணத்துடன் உத்தரவிட்டதாகத் தெரியவில்லை. உள் நோக்கம் வைத்து கபடமாகவே காரியமாற்றினான் போலும்.

ஒரு மாபெரும் வல்லரசின், பேரரசரின் தூதர்கள் என்பதால் இயல்பிலேயே சற்றுப் பெருமையுடன் நடந்து கொண்ட அத்தூதர்களிடம் அண்ணலார் (ஸல்) அவர்கள் அன்புடனேயே நடந்து கொண்டார்கள். மறுநாள் சந்திப்போம் எனச் சொல்லித் தங்க வைத்தார்கள். அன்றிரவு இறையிடமிருந்து வானவர் தலைவர் ஜிப்ரயீல் (அலை), அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார். "பாரசீகத்தில் பெரும் புரட்சி ஏற்பட்டு மன்னன் படுகொலை செய்யப்பட்டான். அவரின் மகன் ஷிவேரியா அரியணை அமர்ந்துள்ளான்" என்ற அறிவிப்பைச் செய்தனர்.

அதிகாலை வேளையில் அத்தூதர்களிடம் அண்ணலார் (ஸல்) அவர்கள் இந்தத் தகவலைச் சொன்னார்கள் : அதிர்ந்திட்ட அவ்விருவரும் அக்கணமே யமன் புறப்பட்டனர். ஆளுநரிடம் வந்து செய்தியைச் சொன்னபோது வியந்திட்ட அவர், "உண்மையில் இவர் இறைத்தூதர் என்பதற்கு இதை ஓர் உரைக் கல்லாகக் கொள்ளலாம். சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம். தலைமையகத்திலிருந்து (பாரசீகம்) என்ன தகவல் வருகிறது? என்று பார்ப்போம்" என்றார்.

இக்காலத்தைப் போலல்ல அக்காலம். அன்றைக்கு தகவல் தொடர்பு சாதனங்களென்றால் மனிதர்களும், புறாக்களும் தான். சில நாட்களில் பாரசீகத்திலிருந்து செய்தி வந்தது. வந்த செய்தி இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்திருந்ததை உறுதிப்படுத்தியது. கூறிய செய்தி இறைத்தூதர் நபி (ஸல்) அவர்கள் சொந்தமாகவோ, கண்டுபிடித்தோ கூறியதல்லவே! எல்லாம் வல்ல இறைவன் அறிவித்ததல்லவா? மறைவானவற்றின் அறிவும், ஞானமும், தெளிவும்,

செய்தியும் இறைவனுக்கு மட்டுமே சொந்தம். அவன் மட்டுமே அறிவான். மறைவானவற்றின் திறவு கோல்களின் உரிமையாளன் அவன். அவன் அறிவித்ததையே அண்ணலார் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்; அறிவிக்கிறார்கள்.

யமன்நாட்டு ஆளுநர் பாதான் அப்படியே உறைந்து நின்றார். "இத்தனை நாட்களுக்குப்பின் வந்துள்ள இச்செய்தியை மதீனத்துப் பெருந்தகை முன்னதாகவே அறிவித்து விட்டார்களே! உண்மையில் இவர் இறைவனின் திருத்தூதராகத்தான் இருக்கவேண்டும். இறைவனது அறிவிப்பில்தான் இவர் கூறியிருக்கின்றார்" என அமைதியாகச் சிந்தித்த அவர் அப்போதே நம்பிக்கைக் கொண்டு இறை நெறியாம் இஸ்லாத்தைத் தழுவினார்.

நன்கு ஆழ்ந்து சிந்தித்துச் சரியான முடிவெடுத்து ஏற்கும் துணிவும் - அறிவும் நிறைந்த ஆட்சியாளரின் நல்ல மன மாற்றம் கண்ட அமைச்சர்களும், அரசவைப் பிரமுகர்களும், யமன் நாட்டு மக்களும் மனமுவந்து இறைநெறியைத் தழுவத் துவங்கினர். சில நாட்களில் யமன் மக்களின் உள்ளங்களில் இஸ்லாமியப் பேரொளி சுடர் விடத் தொடங்கியது. அரசன் எவ்வழியோ அவ்வழியே குடி மக்களும் என்பது நமது இனிய தமிழின் அமுதமொழி. யமன் ஆளுநர் ஓர் அருமையான முடிவெடுத்திருக்கின்றார். "மெய்ப் பொருளைக் காண்பதே அறிவு" என்பதற்கேற்ப உண்மை எனக் கண்டபோது அதைத் துணிவுடன் ஏற்று உதாரணமாகத் திகழ்ந்தார்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அகிலமனைத்திற்கும் திருத்தூதராக இறைவனால் அனுப்பப்பட்டவர்கள். இவர்களுக்கு முன்னர் வந்துற்ற தூதர்கள் எல்லோரும் அந்த அந்த காலத்திற்கு சிறு சிறு பகுதிகள், நாடுகளுக்குத் தூதராக வந்தார்கள். மிகப் பெரும் தீர்க்கதரிசி எனப் போற்றப் படும்நபிஹள்ரத் மூஸா (அலை) அவர்கள் பனீஇஸ்ராயீல்களுக்கு வழிகாட்ட வந்தவராவார்கள். நபி ஹள்ரத் ஈஸா (அலை) அவர்கள் தமக்குத் தரப்பட்ட இறைநெறி அழைப்புப் பணியின் பொறுப்பு பற்றிக் கூறிய போது, "பனீ இஸ்ராயீல்களில் வழி தவறிப்போன ஆடுகளைச் சரிபடுத்தி அவர் களுக்கு வழிகாட்ட வந்த இறைத் தூதராவேன்" என்றார்கள்.

(தொடரும்)

குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:
94420 56547

# வீட்டிலுள்ள பொருட்களைக் கொண்டு நோயைக் குணப்படுத்தும் வழிமுறைகள்....

அ. அப்துல் ஹாதி

**பித்த நோய்கள் :** கேரட் சாறும், சிறிது தேனும் கலந்து பருகி வந்தால் கர்ப்பிணிப் பெண்கள் வாந்தி நிற்கும். உடல் வலுவாகும். பித்த நோய்கள் தீரும்.

**மாரடைப்பு :** சுக்கு, மிளகு, திப்பிலி, தாமரை இதழ், வெல்லம் சேர்த்து தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து, வடிகட்டி இரவில் ஒரு டம்ளர் குடிப்பதால் மாரடைப்பைத் தடுக்கலாம்.

**இரத்தக் கொதிப்பு, கொலஸ்ட்ரால், தலைசுற்றல் :** வெள்ளைப் பூசணிக் காயை பூந்துருவலாக துருவி, உப்பு சேர்த்துஇஞ்சி, பச்சை மிளகாய், கொத்து மல்லி, கறிவேப்பிலை, கடுகு தாளித்து தயிரில் கலந்து தயிர்ப்பச்சடியாக சாப்பிட்டால் மிகவும் ருசியாக இருக்கும். பூசணிக்காய் இரத்தக் கொதிப்பு, கொலஸ்ட்ரால், தலைசுற்றல் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும்.



**நீரிழிவு :** அருகம்புல் சாறை மோருடன் குடித்தால் நீரிழிவு குறையும்.

- குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிய நாளில் மட்டும் கீரையை சாப்பாட்டில் சேர்த்து கொடுக்கக் கூடாது.
- எலுமிச்சை பழச் சாற்றில் ரசம் செய்து சாப்பிட்டால் உஷ்ணம் குறையும்.
- நுரையீரல் சம்பந்தமான நோய்கள் குணமாக வெற்றிலைச் சாற்றில் இஞ்சிச் சாற்றை சேர்த்து குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.



- எள், எள்ளிலிருந்து வரும் நல்லெண்ணெயைக் கொடுக்க உடல் மெலிந்து காணப்படுபவர்கள் தேறி உடல் எடை அதிகரிக்கும்.



- கடுகை அரைத்து வலியுள்ள பகுதியில் போட்டால் வலி குறைந்து விடும்.

இயற்கை முறைக்கு மாறுவோம்
ஆரோக்கியமாக வாழ்வோம்!

துவக்கம் : 1958

நம்பர் 1 மாத இதழ்

# குர்ஆனின் குரல்

நிறுவனர்கள் :

அல்லாமா அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி ஹள்ரத் (ரஹ்)

அல்லாமா "அஸ்அதுல் மில்லத்" அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ ஹள்ரத் (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா முஃப்தீ மு.முஹம்மது இஸ்மாயீல்

காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ ஹள்ரத்

**குர்ஆனின் குரல்** தபால் பெட்டி எண் : 45,

4/25, எழில் நகர், மேலமடை, **மதுரை-625020.**

அலுவலக அலைபேசி எண் : **94420 56547**

E.mail : quraaninkural@gmail.com ★ web : www.quraaninkural.com

**ஓராண்டு சந்தா ரூ.300/- ⬟ தனி இதழ் ரூ.25/-**

விளம்பரம் மற்றும் ஏஜன்ஸீ தொகை செலுத்துபவர்களுக்கு :

Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **6851528029** IFSC Code : IDIB000T003

சந்தா தொகை செலுத்துபவர்களுக்கு :

M/s. INDIAN OVERSEAS BANK, Madurai Meenakshi College Branch,

**M.MOHAMED ISMAIL**

S.B. A/c No. **17570100003467** IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH

குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்று உறுதியாக மொழிந்தவர் சுவனம் செல்வார்

"மக்காவில் ஒரு நாள் நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அண்ணலார் (ஸல்) அவர்கள், தனது சுய தேவைக்காக எழுந்து சென்றார்கள். வெகு நேரமாகியும் திரும்பி வரக் காணோம். தோழர்கள் கலக்கமுற்றனர். அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு அபூ ஜஹ்ல் போன்றோரால் ஆபத்து ஏற்பட்டிருக்குமோ என அஞ்சினார்கள். நாலாப்புறமும் தேட ஆரம்பித்தனர்.

ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் சென்ற திசையில் ஒரு பேரீத்தம்பழத் தோப்பு இருந்தது. அந்தத் தோப்பில் சிரமப்பட்டு, தண்ணீர் கால்வாய் வழியாக பூனைக்குட்டி நுழைவது போல் நுழைந்து உள்ளே சென்றார்கள். அங்கு நபி (ஸல்) அவர்கள் நிற்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் "யார் அபூஹுரைராவா?" என விசாரித்தார்கள். "ஆம் யா ரஸூலல்லாஹ்!" என்று உரைத்து, தாம் தேடி வந்த காரணத்தை எடுத்துரைத்தார்கள்.

திரும்பிச் சென்று தாம் பாதுகாப்பாக இருப்பதாக நண்பர்களிடம் கூறுமாறு பணித்த நபி (ஸல்) அவர்கள், இன்னுமொரு செய்தியையும் கூறியனுப்பினார்கள். "லாஇலாஹ இல்லல்லாஹ் – என்று உறுதிபட மொழிந்து விட்டவர் நிச்சயம் சுவனம் செல்வார்" என்ற நற்செய்தியை சந்திப்பவர்களிடம் சொல்லுமாறும் அதற்கு ஆதாரமாக தனது பாத அணிகளையும் கொடுத்து அனுப்பினார்கள்.

முன்பு போலவே தண்ணீர் வாய்க்கால் வழியே நுழைந்து வெளியேறிய ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் எதிரில் உமர் (ரளி) அவர்கள் வருவதைக் கண்டு அவர்களிடம் அண்ணலார் (ஸல்) அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகக் கூறி அண்ணலார் (ஸல்) அவர்கள் சொல்லியனுப்பிய செய்தியையும் கூறினார்கள்.

உடனே ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்களை உமர் (ரளி) அவர்கள் ஓர் உலுக்கு உலுக்கி கீழே தள்ளி விட்டார்கள். "இந்தச் செய்தியை யார் சொன்னது? அண்ணலார் இப்படி சொல்லியிருக்கமாட்டார்கள்" என்று கூறி அதட்டினார்கள்.

நிலைகுலைந்த அபூஹுரைரா (ரளி) அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் திரும்பிச் சென்றார்கள். பின்னாலேயே உமர் (ரளி) அவர்கள் அண்ணலார் (ஸல்)

அவர்களைச் சென்றடைந்ததும், "யா ரஸூலல்லாஹ்! தாங்களா இவ்வாறு சொல்லியனுப்பினீர்கள்?" என்று கேட்டார்கள்.

"ஆம். உமரே! இதிலென்ன உமக்குச் சந்தேகம்?" என அண்ணலார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

"இல்லை யா ரஸூலல்லாஹ்! தாங்கள் இந்தச் செய்தியை சொல்லியிருந்தால், இனி அவ்வாறு சொல்ல வேண்டாம். அப்பாவி மக்கள், அந்தச் சொல்லின் மீது நம்பியிருந்து விடுவார்கள். திருக்கலிமாச் சொன்னால்போதும் எந்தஅமலும் செய்யாவிட்டாலும் பரவாயில்லை என்று முடிவு செய்து விடுவார்கள். எனவே தாங்கள் அப்படி சொல்ல வேண்டாம்" என ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் அண்ணலார் (ஸல்) அவர்களிடம் கேட்டுக் கொண்டார்கள்.

அதைச் செவியுற்ற அண்ணலார் (ஸல்) அவர்களும் அப்படியே செய்வதாகச் சொன்னார்கள்.

அறிவிப்பாளர்: ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்.

(நூல் : திர்மிதீ)

தருபவர் : அல்ஹாஜ் **கே.கே.செய்யது சுலைமான்,**
தென்காசி.

மக்களின் சேவையில் 18 ஆண்டுகள்!
நம்பிக்கையோடு வாருங்கள்!!!
இன்ஷா அல்லாஹ் சுகம் பெறுவீர்கள்!!!

Rx

**சன் மெடிக்கல்ஸ்**

**SUN MEDICALS**

1/180-A, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி அருகில்,
திருப்பூர் ரோடு, **மங்கலம் - 641663.** திருப்பூர் மாவட்டம்.

**9865261670**

# மனிதம் காப்போம்! புனிதம் சேர்ப்போம்!!

அஷ்ஷைக் **முஹம்மது முஹ்யித்தீன்** மதனீ,
சவூதி அரசின் துபை இஸ்லாமிய மேனாள் பிரதிநிதி, மதுரை

மாரடைப்பு ஏற்படுவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பு தோன்றும் அறிகுறிகள் இதோ :-

பிரபல இதயநோய் நிபுணர்களும், மருத்துவப் பேராசிரியப் பெருமேதைகளும் பின்வருமாறு கூறுகின்றனர்.

- ஒருவருக்கு ஏற்பட்ட இதயவலி மாரடைப்பாக இருக்கக் கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டால், அவரை நடக்க அனுமதிக்கக் கூடாது.
- மாடி படிக்கட்டில் ஏறவோ அல்லது இறங்கவோ அனுமதிக்கக்கூடாது.
- மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்துச் செல்லக் கூடாது.

இந்தத் தவறுகளில் ஏதேனும் ஒன்றைச் செய்தாலும் அந்த நோயாளி உயிர் பிழைப்பது கடினம்.

மாரடைப்பை மூன்று மணி நேரத்திற்கு முன்பே முற்கூட்டி உணரக்கூடிய ஓர் உறுப்பு நமது மூளையாகும்.

மூளை உடனே நமது உடலில், செயலில் சிறு தடுமாற்றத்தை ஏற்படுத்தி நமக்கு முன்னெச்சரிக்கை செய்யும். இந்த முன்னெச்சரிக்கையை சர்க்கரை நோயாளிகள் உணர்வது கடினம்.

ஒரு திருமண நிகழ்ச்சியிலோ, பொது இடங்களிலோ அல்லது வீட்டில் இருக்கும்போதோ ஓர் ஆணோ அல்லது பெண்ணோ தடுமாறுவதைக் கண்டால், உடனே நாம் அவர் மீது கவனம் செலுத்த வேண்டும்.

ஆனால் அவர் நம்மிடம் “எனக்கு ஒன்றுமில்லை; நான் நன்றாகத் தான் இருக்கிறேன்” என்பார். நாமும், அவருக்கு “ஏதோ பித்த மயக்கமாக இருக்கக்கூடும்” என்று நினைத்து இலேசாக விட்டுவிடக் கூடாது.

மூளை அறிவிக்கும் முன்னெச்சரிக்கையை பார்த்தவுடன், அவரின் உடல்நிலையை தெளிவாக தெரிந்து கொள்ள நாம் அவரை சிரிக்கச் சொல்வது, பேசச் சொல்வது, இரு கைகளையும்

மேலே தூக்கச் சொல்வது. இதுபோன்ற செயல்களைச் செய்யுமாறு சொல்ல வேண்டும்.

இம்மூன்றையும் அவர் சரியாகச் செய்ய வேண்டும். இதில் ஏதேனும் ஒன்றை அவர் சரியாகச் செய்யவில்லை என்றாலும் பிரச்சனை பெரிதுதான். உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதால் உயிரிழப்பை தடுக்கலாம்.

இந்த அறிகுறி தெரிந்த மூன்று மணி நேரத்திற்குள் மருத்துவ மனைக்கு வந்து விட்டால், இறைவன் நாட்டப்படி உயிரிழப்பை தடுத்துவிடலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இவை மூன்றையும் அவர் சரியாகச் செய்துவிட்டார் என்றால் மேலும் உறுதிப்படுத்த ஒரு முக்கியமான செயலைச் செய்ய வேண்டும் என்று சமீபத்திய மருத்துவ புது ஆய்வு கூறுகின்றது. அவருடைய நாக்கை நீட்டச் சொல்ல வேண்டும் என்பதுதான் அது.

அவர் தன் நாக்கை நேராக நீட்டி விட்டார் என்றால் அவர் நார்மலாக நலமாக இருக்கிறார் என்று தீர்மானிக்கலாம்.

அவ்வாறு நேராக நீட்டாமல் ஒரு பக்கமாக அதாவது வலது அல்லது இடது பக்கமாக வளைத்து நீட்டினால் அடுத்த மூன்று மணி நேரத்திற்குள் எப்போது வேண்டுமானாலும் அவருக்கு மாரடைப்பு வரலாம்.

இதனைப் படிக்கும் அன்பர்கள், தம் குடும்பத்தார், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரிடமும் மனிதாபிமான அடிப்படையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவோம்.

அன்பு கூர்ந்து அனைவரும் மனிதம் காப்போம்!
புனிதம் சேர்ப்போம்!!

---

## எதிர்த்து நில்! மண்டியிடாதே!

“எதிர்த்து நிற்க வலிமையில்லாதபோது எதிரியுடன் சுமூகமாக இணக்கமாக இருக்க அனுமதியுண்டா...?!” என அஷ்ஷஹீத் ஷைக் அஹமது யாஸீன் (ரஹ்) அவர்களிடம் கேட்கப்பட்டது.

மிகுந்த அரசியல், ஆன்மிக ஞானம் கொண்ட அஷ்ஷைக் நிதானத்துடன்,

“திருமணம் செய்ய இயலாததால் விபச்சாரம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லையே” என்றார்கள்.

# உலக நோய்களும் உத்தம நபியின் மருத்துவமும்!

மவ்லவீ என். முஹம்மது இப்ராஹீம் ஸிராஜி ரஷாதி பாஜில் மழாஹிரி

உணவு முறைகளை கையாள்வதில் இஸ்லாத்தை விட எந்தவொரு சமயமும் இவ்வளவு ஆழமாக கற்றுக் கொடுத்ததில்லை.

ஆனால், இஸ்லாமியர்கள் என்றாலே மற்ற மத சகோதரர் களின் நினைவில் வருவது நமது பிரியாணி தான்.

நம்மவர்களின் வீடுகளில் மூன்று வேளையும் அசைவ உணவு இருக்கும் என்றும், மூலிகை உணவுகளையும், சைவ உணவுகளையும் நாம் வெறுக்கிறோம் என்றும் நம்புகிறார்கள்.

ஆனால் ஹதீஸ் கிரந்தங் களிலும், வரலாற்று ஏடுகளி லும் நமக்கு கிடைப்பதென்னவோ இதற்கு மாற்றமான உண்மை தான்.

திர்மிதீ, முஸ்லிம் ஆகிய ஹதீஸ் கிரந்தங்களில் பெரு மானார் (ஸல்) அவர்கள் பல் வேறுமூலிகைகுணம்கொண்ட இயற்கை உணவு களை விருப்பத்துடன் உண்டு, மூலிகை வஸ்துக்களை உண்ணும்படி போதித்தும் வந்துள்ளதாக ஏராளமான பொன்மொழிகள் காணக் கிடைக்கின்றன. அப்படி தீர்க்க மாக நபி (ஸல்) அவர் களால் தொடர்ந்து பயன்படுத்தப் பட்ட பொருட்கள்.

**வெந்தயம் :**

வெந்தயம் இரத்தக் கொழுப்பை குறைக்கும். தாய்மார்களுக்கு தாய்ப்பால் அதிகரிக்கச் செய்யும். இதயக் குழாய்களை சீராக்கும். மேலும், அல்சர் நோயை தடுக்கும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "வெந்தயத்தில் என்ன இருக்கிறது என்று எனது உம்மத்தினருக்கு தெரியுமே யானால் தங்கத்தின் விலை இருந்தாலும் அதனை வாங்கி விடுவார்கள்.''

**மல்லி:**

மல்லி காய்ச்சலை குறைக் கும். மல்லியின் காரணமாக உடலின் அதிக எண்ணைப் பசை கட்டுப்படுத்தப்படும். சிறுநீரகப் பிரச்சனைகளை சரியாக்கும், சளிக்கு மல்லியை விட சிறந்த மருந்து வேறேதும் கிடையாது. செம்பட்டை முடியாகுவதையும் தடுக்கும்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மல்லி விதைகளை பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அதில் புற்று நோயைத் தவிர அனைத்து நோய்க்கும் மருந்திருக்கிறது." (புகாரி)

**மருதாணி :**

ஹதீஸில் வருகிறது: மருதாணி அல்லாஹ்விற்கு மிக விருப்பமானது.

நாயகம் (ஸல்) அவர்கள் தீக்காயங்களுக்கும், கால்களில் ஏற்படும் வலிக்கு நிவாரணியாகவும், தலை முடியை அழகு படுத்தவும் என பல்வேறு காரணங்களுக்காக மருதாணியை விரும்பினார்கள்.

**தேன்:**

**"அதனுடைய வயிற்றிலிருந்து பல வகை நிறங்களில் உள்ள குடிபானம் வெளியாகிறது. அதிலே மக்களுக்கு நோய் நிவாரணி இருக்கிறது. திட்டமாக இவ்விஷயத்தில் யோசிக்கும் சுவட்டத்தாருக்கு நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன."**

- அல்குர்ஆன் (16 : 68,69)

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எவனுடைய வசத்தில் எனதுயிர் இருக்கிறதோ அவன் மீது சத்தியமாக, எந்த வீட்டிலெல்லாம் தேன் வைக்கப்படுமோ அங்கெல்லாம் மலக்குமார்கள் இறைவனிடத்தில் கிருபைக்காக இறைஞ்சிக் கொண்டே இருக்கிறார்கள்."

நாயகம் (ஸல்) அவர்கள் காலையில் வெறும் வயிற்றில் நீரும், தேனும் அருந்தக் கூடியவர்களாக இருந்தார்கள்.

**தர்பூசணி :**

தர்பூசணி அனைத்து நோய்களுக்கும் நிவாரணி ஆகும். குறிப்பாக கர்ப்பிணி பெண்களுக்கு மிக உகந்த தாகும். நாயகமவர்கள் தர்பூசணியை நல்ல புதிய பேரீத்தம் பழங்களுடன் உண்பார்கள்.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எப்பொழுதெல்லாம் நீங்கள் பழங்கள் சாப்பிடுவீர்களோ, அப்போது தர்பூசணியை சாப்பிடுங்கள். ஏனெனில் அது சுவனத்தின் பழம் ஆகும். அதிலே ஆயிரம் கிருபைகளும், ஆயிரம் அருட்கொடைகளும் இருக்கின்றன."

**மாதுளை:**

எவர் ஒருவர் வருடத்தின் மூன்று பங்குகளில் மூன்று மாதுளைகளை சாப்பிடுவாரோ, அவர் வருடம் முழுவதும் வாய்வுத் தொல்லை இன்றி இருப்பார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மாதுளை ஷைத்தானிடமிருந்து மற்றும் தீமைகளில் இருந்து உங்களை

நாற்பது நாட்கள் வரை தூய்மையாக வைத்திருக்கும்.''

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கூறினார்கள்: "எவர் மாதுளையை உண்பாரோ அவருடைய இதயத்தில் இறைவனின் ஒளி இருக்கும்.''

**நார்த்தங்காய்:**

உள்ளத்தை உறுதிப் படுத்துகிறது, கவலையை நீக்குகிறது. பசியை தணிக்கிறது. நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நார்த்தங்காய் உண்மையான முஃமினைப் போன்றதாகும். உண்பதற்கும், நுகருவதற்கும் மிக நலமானது நார்த்தங்காய்.''

நாயகத்தின் மனைவிகளில் ஒருவர் தேனில் முக்கப்பட்ட நார்த்தங்காயைக் கொண்டு கண்பார்வையற்றவர்களுக்கு சிகிச்சை செய்து வந்தார்கள். உண்ட 10 நிமிடங்களுக்குப் பிறகு நார்த்தங்காய் உண்பது மிக நல்லது.

**புதினா:**

புதினா குளிர்ச்சியானதும், கடினமான ஆகாரங்களுக்கு மிக நல்ல ஜீரண மருந்தாகும். குடலிற்கும், வயிற்றிற்கும் குளிர்ச்சியைத் தரும்.

நாயகத்தின் காலத்தில் அனைத்து வீட்டிலும் புதினாக்கள் மிகையாக பயன் படுத்தப் பட்டது என்று ஹதீஸ் கிரந்தங்களில் வந்துள்ளது.

**பால்:**

முதுகை பலப்படுத்தும். புத்திக்கூர்மையை உண்டாக்கும். பார்வையை சீராக்கும். மறதியை இல்லாமலாக்கும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பால் இதயச் சூட்டை தணித்து விடும்.''

**காளான்:**

செயலின்மை நோயை (Paralysis) கட்டுப்படுத்தும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "காளான் கண்களுக்கு மிக நல்ல குணத்தை தரும்.''

**பேரீத்தம்பழம்:**

குழந்தை பிறந்தவுடன் நன்கு குழைத்த பேரீத்தம் பழத்தை ஊட்டிவிடுவது சிறந்ததும், சுன்னத்துமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "பேரீத்தம்பழம் இல்லாத வீட்டில் எவ்வித உணவுமில்லை.''

**அத்திப்பழம்:**

மூலம் (Piles) நோயை தடுக்கும்.

அத்திப்பழம் சுவனத்தின் கனி.

**தண்ணீர்:**

பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பாலிற்கு பிறகு உலகின் மிக உயர்ந்த குடிபானம் தண்ணீர் ஆகும்.''

மேலும், நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "நீங்கள்

தாகமாக இருக்கும் பொழுது மிடறு மிடறாக அதனை குடியுங்கள். மொத்தமாக வேண்டாம்.''

மொத்தமாக நீர் அருந்துவதால் குடலில் நோய் ஏற்படுகிறது.

**கருஞ்சீரகம்:**

கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள்! கருஞ்சீரகத்தில் 46 வகையான கடும் நோய்களுக்கும் நிவாரணி இருக்கிறது. கருஞ்சீரகத்தை தொடர்ந்து பயன்படுத்தி வந்தால் 90க்கும் மேற்பட்ட நோய்கள் வராது.

நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதாக ஹள்ரத் அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "மரணத்தை தவிர கருஞ்சீரகத்தில் அனைத்து நோய்களுக்கும் குணம் இருக்கிறது.''

இஸ்லாம், இயற்கை உணவிற்கு இவ்வளவு முக்கியத்துவத்தை தருவதுடன் ஆரோக்கியத்திற்கும் முக்கிய பங்களிக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**''பலவீனமான முஃமினை விட, பலமான முஃமின் அல்லாஹ்விற்கு மிக விருப்ப மானவர் ஆவார்.''** (அல்ஹதீஸ்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

**''யா அல்லாஹ்! எங்களுக்கு மன்னிப்பையும், உடல் ஆரோக்கியத்தையும், உலகம் மற்றும் மறுமையின் நிரந்தர சுகத்தையும் தந்தருள்வாயாக!''**

ஹள்ரத் அலீ (ரளி) அவர்கள் கட்டான உடல் கொண்டவர்களாக இருந்ததற்கான வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

நோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்ள நபி (ஸல்) அவர்கள் வழி என்ன? அளவாக சாப்பிடுவது தான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "இறை விசுவாசி ஒரு வயிற்றைக் கொண்டு சாப்பிடுகிறார்" அதாவது போதுமான அளவு சாப்பிடுவார்.

மதீனாவிற்கு வந்த ஒரு மருத்துவர் பல நாட்களுக்கு யாருமே நோயுற்றிராத நிலையில், ஸஹாபாக்களிடம் அவர்களது உணவு முறையைப் பற்றி விசாரிக்கிறார். நபித்தோழர்கள் கூறினார்கள். "நாங்கள் பசித்த பின் உணவருந்த உட்காருவோம், வயிறு நிரம்பும் முன் எழுந்து விடுவோம்.'' இதைக்கேட்ட மருத்துவர் "இம்முறை யைப் பின்பற்றும் இடத்தில் மருத்துவ ருக்கு வேலை இல்லை'' என்று கூறி அங்கிருந்து புறப்பட்டார்.

எனவே, நமது அன்றாட உணவுமுறைகளை கவனத்தில் கொண்டு இம்மை மறுமையின் வெற்றியாளர் களாக உருவாக நாம் முயற்சிக்க வேண்டும்.

# ஃபிக்ஹு கலை வளர்ந்த வரலாறு

ஃபிக்ஹு என்பது ஒரு பொருளையும், அதன் உட்கூறுகளையும் சேர்த்து அறிவதற்கு சொல்லப்பட்டாலும் நமது மார்க்க சொல் வழக்கில் ஃபிக்ஹு என்பது மார்க்க சட்ட திட்டங்களை ஆணித்தரமான ஆதாரங்களுடன் தெரிந்து கொள்வதற்கு கூறப்படுகின்றது.

இக்கலையில் தேர்ச்சிப் பெற்றவர்களை ஃபுகஹாக்கள் என்று உலகம் போற்றுகின்றது.

ஃபிக்ஹின் சிறப்புப் பற்றி அல்லாஹ் அழகுற கூறுகிறான்:

“முஃமின்கள் அனைவருமாக [போருக்கு] வெளியே செல்வது சரியல்ல! அவர்களில் நின்றும் ஒவ்வொரு பிரிவினரிலிருந்தும் ஒரு கூட்டத்தினர். மார்க்கத்திலுள்ள [சட்டத்]தை அவர்கள் கற்றுக் கொள்வதற்காகவும் அதன்பின் அவர்களின் பால் இவர்கள் திரும்பி வரும் போது அவர்களுடைய சமூகத்தாருக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்வதற்காகவும் புறப்பட வேண்டாமா? [இதன் வாயிலாக பாவங்களை] அவர்கள் தவிர்ந்துக் கொள்ளக்கூடும்”

- அல்குர்ஆன் (9 : 112)

பூமான் நபி (ஸல்) அவர்கள் ஃபிக்ஹின் மேன்மை குறித்து பேசுகிறார்கள் :

“யாருக்கு அல்லாஹ் மார்க்க நலவை நாடுகிறானோ அவருக்கு ஃபிக்ஹு உடைய ஞானத்தை கொடுக்கின்றான்.”

(நூல் : புகாரீ, முஸ்லிம்)

இந்த இறைவசனம், நபிமொழி மூலம் மார்க்கத்தின் நுட்பமான சட்ட விளக்கம் எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதல்ல. அல்லாஹ் யாருக்கு நன்மையையும், மேன்மையையும் நாடுகிறானோ அவருக்கே அத்தகைய ஆற்றல் கிடைக்கின்றது என்பது அறிய முடிகின்றது.

## நபிகளாரின் காலத்தில் ஃபிக்ஹு

பூமான் நபி (ஸல்) அவர்களின் புனிதமான காலத்தில் ஃபிக்ஹு சட்டங்கள் தோன்றி விட்டன. ஆனால், ஃபிக்ஹு என்று பிரித்து அறியப்படவில்லை.

நபிகளார் எதைச் செய்தார்களோ அதையே சஹாபாக்களும் செய்தார்கள். அது வாஜிபா?

சுன்னத்தா? முஸ்தஹப்பா? என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கவில்லை.

ஆனால், நபி (ஸல்) அவர்கள் தேவைக்கு ஏற்றவாறு மார்க்க சட்டங்களை சஹாபாக்களுக்கு அவ்வப்போது விளக்கி காட்டுவார்கள். எடுத்துக்காட்டாக சுத்தமானதை அவர்களுக்கு அவர் ஆகுமாக்கி வைத்து அசுத்தமானதை அவர்கள் மீது விலக்கி வைப்பார் என அல்லாஹ் கூறியுள்ளான். இவ் வசனத்தில் சுத்தமான பொருளை யும் அசுத்தமான பொருளையும் விளக்கி கூறவில்லைஎன்றாலும் இன்னொரு வசனத்தில் இரத்தம், பன்றி இறைச்சி, அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறி அறுக்கப்பட்டவை என்று வந்துள்ளன. இதில் நபி (ஸல்) அவர்கள் சிங்கம், புலி, கரடி போன்ற கீறிக் கிழித்து தின்னும் மிருகங்களும் வீட்டுக் கழுதைகளும், நாட்டுக் கழுதை களும் ஹராம் ஆகும் என்று மார்க்கச் சட்டத்தை (ஃபிக்ஹை) தெளிவுபடுத்தினார்கள்.

தாதுஸ்ஸலாஸில் என்ற யுத்தத்திற்கு சஹாபாக்கள் கடுமையான குளிர்காலத்தில் சென்றிருந்தார்கள். அங்கு இரவில் ஹள்ரத் அம்ருப்னு ஆஸ் (ரளி) அவர்களுக்கு குளிப்பு கடமை ஏற்பட்டது. குளிர் வாட்டிஎடுத்ததால் அவர் தயம்மம் செய்து தம் தோழர்களுக்கு பஜ்ர் தொழுகையை தொழ வைத்தார்.

இந்த நிகழ்வை பூமான் நபி (ஸல்) அவர்களிடம் சென்றிருந்தபோது தெரிவித்தனர். நபியவர்கள்.

**“அம்ரே! அசுத்தமாக இருக்கும்பொழுது நீர் தொழுகை நடத்தினீரா?” ஆம் யாரஸூலல்லாஹ்! என்று அவர் கூறியதோடு உங்களின் ஆத்மாக் களை நீங்களே கொன்று விடாதீர்கள்”**

- அல்குர்ஆன் (4 : 29)

என்ற இவ்வசனத்தை ஓதிய பின்பு “இவ்வசனத்தை சிந்தித்து ஆராய்ந்து தொழ வைத்தேன் என்றதும் கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்து விட்டு எதுவும் பேசாமல் இருந்து விட்டார்கள்.

(நூல் : அபூதாவூத்)

கடுங்குளிரில் தண்ணீரில் ஒளு செய்தால் உடல் நலம் கெடும். அது தன்னைத்தானே அழித்துக் கொள்வதற்கு சமமானது என்று விளங்கி ஒளு செய்வதை தவிர்த்து தயம்மம் செய்துதொழவைத்தசஹாபியை நபிகளார் எதுவும் கூறாது அவரின் ஆய்வை (ஃபிக்ஹை) அங்கீகரித்தார்கள். இவ்வாறு இறை வசனத்திலிருந்து பிரிவுச் சட்டத்தை விளங்கி

செயல்படுவது நபியின் பொற்காலத்தி லேயே நிறைய நிகழ்ந்துள்ளது.

## அருமை சஹாபாக்கள் காலத்தில் ஃபிக்ஹு

சஹாபாக்களில் ஃபிக்ஹுயெனும் சட்ட நிபுணரை பூமான் நபி (ஸல்) அவர்கள் தனியாக அடையாளம் காட்டியுள்ளார்கள்.

ஒரு சமயம் கூறினார்கள் : "மனிதர்களே! நீங்கள் குர்ஆனைப்பற்றி அறியவிரும்பினால் ஹள்ரத் உபை இப்னு கஃப் (ரளி) அவர்களிடம் செல்லுங்கள். நீங்கள் பாகப்பிரிவினைப் பற்றி கேட்க நாடினால் ஹள்ரத் ஜைத் இப்னு சாபித் (ரளி) அவர்களிடம் கேளுங்கள். நீங்கள் ஃபிக்ஹு மார்க்கச் சட்டத்தைப் பற்றி தெரிய விரும்பினால் ஹள்ரத் முஆத் இப்னு ஜபல் (ரளி) அவா களிடம் செல்லுங்கள்"

(நூல் : தப்ரானீ)

சஹாபாக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளில் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஃபிக்ஹு சட்டங்கள் வழியாக தீர்வு காணப்பட்டுள்ளது.

இரண்டு சஹாபிகள் பயணம் செய்தார்கள். தொழுகையின் நேரம் வந்தது. ஒளு செய்வதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. இருவரும் தயம்மம் செய்து தொழுகையை நிறைவேற்றினார்கள். பிரயாணம் தொடர்ந்தது. சிறிது தூரம் சென்றதும் அவர்களுக்குத் தண்ணீர் கிடைத்தது. தொழுகையின் நேரமும் முடியவில்லை. ஒருவர் தண்ணீரில் ஒளு செய்து தொழுத தொழுகையை திரும்பவும் தொழுதார். இன் னொருவர் முதல் தொழுததே போதும் என்று இருந்துவிட் டார். பிரயாணம் முடிந்து ஊர் திரும்பியதும் பூமான் நபி (ஸல்) அவர்களிடம் இது குறித்து விளக்கம் கேட்டபோது. நபிகளார் "யார் திரும்ப தொழ வில்லையோ அந்த சஹாபியிடம் நீர் சரியாக செய்தீர் என்றும், யார் இருமுறை தொழுதாரோ அவரிடம் உமக்கு இரண்டு கூலி கிடைக்கும்" என்றார்கள்

(நூல் : அபூதாவூத்)

இதுபோன்ற சஹாபாக்களின் ஆய்வை (ஃபிக்ஹை) நபி (ஸல்) அவர்கள் அனுமதித்தார்கள். இந்த வழிகாட்டல் தான் பிற்காலத்தில் ஃபுகஹாக்கள் ஃபிக்ஹை உருவாக்கம் செய்திட முன்மாதிரியாய் அமைந்தன.

சஹாபாக்கள் காலத்தில் இறைவசனத்தில் இரு பொருள்கள் கொண்ட வார்த்தைகளை விளங்குவதில் கருத்து

வேறுபாடுகள் உண்டாயின. எடுத்துக்காட்டாக குரூஉன் என்ற சொல் மாதவிடாய் மற்றும் தூய்மையான காலம் என்ற அர்த்தங்களை உள்ளடக்கியது.

இதில் ஹள்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரளி) அவர்கள் ஒரு பெண் தலாக் விடப்பட்டால் மூன்று மாதவிடாய் காலங்கள் இத்தா அனுஷ்டித்த பிறகு மற்றவரை மறுமணம் செய்ய லாம் என அறிவித்தார்கள். இதே சட்டத்தை இரண்டாம் நூற்றாண் டில் பிறந்த அபூஹனீபா (ரஹ்) அவர்கள் தமது ஃபிக்ஹு சட்டத்தில் வெளியிட்டார்கள். ஹள்ரத் ஜைதுப்னு ஸாபித் (ரளி) அவர்கள் மாதவிடாய்க்கு பின் வரும் மூன்று சுத்தமான காலத் திற்கு பிறகு மறுமணம் செய்து கொள்ளலாம் எனக் கூறினார் கள். இதே கருத்தை இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் தமது ஃபிக்ஹு ஆய்வில் தெரிவித் துள்ளார்கள்.

கன்தக் போர் முடிந்து பனூகுரைழா கூட்டத்தாரிடம் யுத்தம் புரிய உத்தரவு விடப்பட்ட போது நபி (ஸல்) அவர்கள் அருமை சஹாபாக்களிடம் பனூ குரைழா கூட்டத்தாரிடம் சென்று தான் ஒவ்வொருவரும் அஸர் தொழ வேண்டும் என்று கூறினார்கள். பனூகுரைழா இருக்குமிடம் போய் சேரும் முன்பே அஸர் தொழுகை நேரம் வந்து விட்டது. சஹாபாக்களில் சிலர் நபி (ஸல்) அவர்களின் கூற்றுப் படி "நீங்கள் வேகமாகச் செல்ல வேண்டும்" என்பதேயாகும். வழியில் தொழுகை நேரம் வந்தாலும் தொழக்கூடாது என்பதல்ல என்று விளங்கி வழியிலேயே அஸர்தொழுகையை நிறைவேற்றினார்கள். இன்னும் சிலர் நபி (ஸல்) அவர்கள் பனூகுரைழா கூட்டத்தாரிடம் சென்றுதான் அஸர் தொழுக சொல்லியுள்ளார் கள் என்று விளங்கி அங்கு சென்ற பின்பு தான் அஸர் தொழுதார்கள்.

இந்த இரு வேறு நிலை குறித்து நபி (ஸல்) அவர்களிடம் கூறப்பட்டபோது, அவர்களில் எவரின் மீதும் கடிந்து கொள்ள வில்லை.

(நூல் : புகாரீ 2ம் பாகம்)

இதன்படி சஹாபாக்கள் நபியவர்கள் கூறிய ஹதீஸிலிருந்து ஆராய்ந்து ஒரு தீர்வை

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**

**94420 56547**

எடுத்து பின்பற்றி இருக்கின்றனர். இதையே இமாம்கள் ஃபிக்ஹு சட்டங்கள் என பெயரிட்டு மக்களுக்கு புதிது புதிதாய் ஏற்படும் பிரச்சனைகளுக்கு குர்ஆன், ஹதீஸ், சஹாபாக்களின் நடைமுறை வாழ்விலிருந்து பிரித்தெடுத்து சட்டங்களை சமைத்தார்கள்.

## இமாம்கள் காலத்தில் ஃபிக்ஹு

சஹாபாக்களுக்குப்பின் ஃபிக்ஹு சட்டங்களில் மிகவும் தேர்ச்சி பெற்றவர் ஹள்ரத் இப்றாஹீம் நகஈ (ரஹ்) அவர்கள். இவர்களை ஈராக் மக்கள் ஃபகீஹுல் ஈராக் (ஈராக் நாட்டு மார்க்கச் சட்ட நிபுணர்) என்று போற்றினர். இவரின் காலத்தில் ஃபிக்ஹு சட்டங்களை மாணவர் கள் எழுத ஆரம்பித்தனர். ஆனால், நூல் வடிவம் பெற வில்லை. மாணவர்கள் தம் உள் ளத்தில் பதித்துக்கொண்டனர். அ தி ல் தலைசிறந்து விளங்கியவர் ஹ ள் ர த் முஹம்மது (ரஹ்) ஆவார். ஹிஜ்ரி 120ல் அவர் இறந்தபோது அவரின் இடத்தில் அவரின் மாணவர் ஹள்ரத் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் அமர்த்தப்பட்டனர். பற்பல மாணவர்கள் வந்து ஃபிக்ஹு சட்டங்களை படித்தனர். இதில் ஹள்ரத் அபூஹனீபா (ரஹ்) அவர்களின் மிக முக்கியமான மாணவர் ஹள்ரத் அபூயூசுப்(ரஹ்) அவர்கள் தான். இவர்கள் தான் புத்தக வடிவில் ஃபிக்ஹு சட்டங்களை முதன்முதலில் அமைத்த பெருமைக்கு சொந்தக்காரர்.

ஒரு நாள் இருவர் காவலாளியிடம் தம் ஆடைகளை ஒப்படைத்து விட்டு குளியல் அறைக்கு குளிக்கச் சென்றார்கள். அவர்களில் ஒருவர் தன் நண்பரை விட முன்னதாகக் குளித்துவிட்டு வந்து அந்த ஆடைகள் அனைத்தையும் பெற்றுக் கொண்டு சென்று விட்டார். மற்றவர் வந்து ஆடையை கேட்க, "அதை உன் நண்பர் பெற்றுச் சென்று விட்டாரே!" என காவலாளி கூறினார். இப்பிரச்சனை நீதிமன்றத்திற்கு சென்றது.

நீதிபதி தனது தீர்ப்பில் காவலாளியிடம் "இருவரும் வந்து கேட்டால்தான் நீ அவ்வுடைமை களை ஒப்படைத்திருக்க வேண்டும். அவ்வாறு நீசெய்யத் தவறி விட்டாய். எனவே, நீதான் அதனை கொடுக்க வேண்டும்" எனக் கூறினார்.

உடனே காவலாளி இமாம் ஹள்ரத் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களிடம் வந்து முறையிட்டார். இமாமவர்கள் "நல்லது! அவ்வாறே செய்கிறேன். இரு வரும்

ஒன்றாக வந்து அதனை என்னிடம் கேட்கட்டும், என்று நீதிபதியிடம் கூறிவிடு" என காவலாளிக்கு ஆலோசனைக் கூறினார்கள். இந்தநிகழ்ச்சிக்குப் பின் ஃபிக்ஹு சட்டங்களைத் தொகுத்துத் தெளிவாக எழுத வேண்டிய அவசியத்தை இமாம் அபூ ஹனீஃபா (ரஹ்) அவர்கள் அறிந்தார்கள்.

தம் மாணவர்களில் நாற்பது பேரை துணையாகக் கொண்டு முப்பதாண்டுகள் ஃபிக்ஹு சட்டங்களை மிகவும் நேர்த்தியாக பேணுதலோடு தொகுத்தார்கள். இவ்வாறு தொகுக்கப்பட்ட மார்க்க சட்டதிட்டங்கள் பல லட்சங்களாகும். இதுவே பிற்காலத்தில் ஃபிக்ஹுல் அக்பர் என்ற நூலாக பரிணமித்தது.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் மார்க்க சட்ட திட்டங்களை ஆராய்ந்து மார்க்கத்திற்காக தம் வாழ்வையே தியாகம் செய்து 36,000 மஸாயில்களை வழங்கி யுள்ளார்கள் இமாம் ஷாஃபிஈ (ரஹ்) அவர்கள். சமுதாயப் பிரச்சனைகளை ஆய்வு செய்து பல்லாயிரக் கணக்கான மஸாயில் களை உள்ளடக்கியதாக ஏழு பாகங்களைக்கொண்டகிதாபுல்உம்மு என்ற நூலை அற்புதமாய் தந்துள்ளார்கள். இமாம் அஹ்மது இப்னுஹன்பல் (ரஹ்) அவர்கள் சிந்தித்து கடுமையான முயற்சியில் எடுத்த மஸாயில்கள் நாற்பது பாகங்களாக உள்ள அல்ஜாமிவுல் உலூம் என்ற நூலில் இடம் பெற்றுள்ளது.

இந்த நான்கு இமாம்களுக்குப்பின் அவர்களின் மாணவர்கள் ஃபிக்ஹுகலையை வலுப்படுத்தினார்கள்.

இந்த நவீன காலத்தில் மார்க்கச் சம்பந்தமான பல சட்டப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அதற்கான தீர்வுகளை இன்றைய இமாம்கள் குர்ஆன், சுன்னாவிலிருந்து பிழிந்து எடுக்கப்பட்ட முந்திய இமாம்களின் கூற்றுக்களை முன் மாதிரியாய் கொண்டு மார்க்கத் தீர்ப்புகளை மக்களுக்கு வழங்கி மார்க்கம் சார்ந்த மக்களாகவாழ வகுத்து வருகின்றனர்.

ஃபிக்ஹு சட்டங்களை தாமே பின்பற்றிக் கொண்டு சிறுபிள்ளைத்தனமாக சிலர் ஃபிக்ஹுவிளக்கங்களை மறுத்தாலும் எல்லா இஸ்லாமிய நாடுகளிலும் ஃபிக்ஹு சட்டங்கள் வாழ்வில் பின்பற்றப்பட்டு பிரச்சனைகள் தீர்க்கப்படுகின்றன. மார்க்கத்தின்படி வாழ வழிவகுக்கும் ஃபிக்ஹு சட்டங்களை வழங்கிய இமாம்களுக்கும், அதனை பரப்பிவரும் ஆலிம் களுக்கும், சமுதாய ஆர்வலர்களுக்கும் வல்ல அல்லாஹ் ஈருலகிலும் நிறைவான பாக்கியங்களையும், நற்பேறுகளையும் தந்தருள்வானாக.

## குழந்தை பாக்கியம் கிடைக்க....

எனது மகளுக்கு திருமணமாகி நீண்ட நாட்களாகியும் குழந்தை பாக்கியம் கிடைக்காமல் தவித்து வருகிறார். இவர் போன்று திருமணம் முடித்த, குழந்தை பாக்கியம் கிடைக்காத பல நூறு பெண்கள் மிகுந்த மனச் சிரமத்திற்கு ஆளாகி வருவதைப் பார்க்கிறோம். எனவே, மேற்படி திருமணமான பிள்ளைகளுக்கு அல்லாஹ் ஸாலிஹான குழந்தைகளை மிகச் சிறப்பான வகையில் வழங்கிட துஆ மஜ்லிஸ் குழுவினரை துஆ செய்யுமாறு மிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

– **ஹாஜி கே.ஏ.சிராஜுதீன்**, உடுமலைபேட்டை.

ஃபாரூக் ஆடிட்டர் - உடுமலைப்பேட்டை; முஹம்மது காசிம் - லால்குடி; ஆர்.முஹம்மது சாதிக் - ஒட்டன்சத்திரம்; அ.அஷ்ரஃப் அலீ - ஒட்டன்சத்திரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; ஹபீப் நிஸா - ஒட்டன்சத்திரம்; மெஹ்ராஜ் பேகம் - திருப்பூர்; பி.சாதிர் பாட்சா - பொள்ளாச்சி; எம்.ஷானவாஸ் - சவூதி; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, செய்யது அபுதாஹிர், அப்துஸ் ஸலாம் - மதுரை; எஸ்.ஹசன் பானு - தஞ்சாவூர்; அன்சாரி - உடுமலைப்பேட்டை; ஃபாரூக் அலீ - ஆத்தூர்; முஹம்மது ஜாஃபர் ஷாதிக் - புதுப்பேட்டை; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; சந்தா எண் F595 - திருச்சி; சாதிக் - மங்கலம்; அ.சம்சுதீன் - நெய்க்காரப்பட்டி; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; எஸ்.நூருன்னிஷா - தஞ்சாவூர்; தாஹிரா - கூத்தாநல்லூர்; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; சந்தா எண் A1718 - அலங்கியம்; ஜே.ஆஸிக் ஹுசைன், ஜே.அஸ்லம் ஹுசைன் - மதுரை; சிக்கந்தர் அம்மாள், அஜீஸ், சதாம் உசேன், பர்ஹத் சாஹிரா, அம்ரின் ஷிஃபா - மதுரை; D.அப்துல் காதர் - மதுரை; கே.ஏ.தாஹிர் நிஷா - கூத்தாநல்லூர்; செல்லபா, எஸ்.கோரிமா - விராதனூர்; பி.காதர் பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; முஹம்மது அஜ்மல் - துபாய்; ஜெய்புனிஷா - திருச்சி; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; அ.முஹம்மது இஸ்மாயீல் - விழுப்புரம்;

அ.மஹபூபுன்னிஷா, எஸ்.உசேனி - தஞ்சாவூர்; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசிர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா, ஆனியா - திருச்சி; எஸ்.சுல்தான் - திருச்சி; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; அ.ஷமீமா - விழுப்புரம்; அ.அப்துல் சலாம், அ.முஹம்மது அசாருதீன் - கோவை; ஜுனைது பாபு, ஷாஹிதா பானு, அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; எம்.அமீர் உசேன், சகீனா பானு - கோவை; ரகீப் சுல்தானா - தஞ்சாவூர்; குஷ்ணமா, சாதிக் பாட்சா, பிர்தௌஸ், யாஷிபா, முஃப்தியாஜ் டாபியா - மதுரை; காமிலா பானு, ஹக்கீம் - சென்னை; ஷாக்கீர் உசேன், சபினா, அஸ்வர், ஸாஜியா - அபுதாபி; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன், ஆயிஷா மரியம் - இராமநாதபுரம்; பஜ்லுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, ஃபஜி - சென்னை; காஜா ஹுசைன், நஸீமா, நஸீரா, நிலோஃபர் - சென்னை; ரோஸ் பானு, சுல்தான் அலாவுதீன் - ஒத்தக்கடை; முஹம்மது சிராஜுதீன் - விழுப்புரம்; சந்தா எண் L105 - மணப்பாறை; ஹமீதா புஸ்ரா, அப்துல் காலிக் - ஈரோடு;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிடவும் எமது துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவரான மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணியமிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

பல வருடங்களாக எங்கள் வீட்டில் தண்ணீர் வராமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தோம்; துஆ மஜ்லிஸிலும் துஆ செய்யுமாறு கேட்டிருந்தோம். பேரருளாளன் அல்லாஹ்வின் பெருங் கிருபையாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தினாலும் எங்கள் வீட்டில் இப்பொழுது எந்த பிரச்சனையும் இல்லாமல் தண்ணீர் நன்றாக வருகிறது. எங்களுக்காக துஆ செய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் என் மகிழ்ச்சி கலந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். **எஸ்.உசேன் மீரான், தஞ்சாவூர்.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

தேனி மாவட்டம் உத்தமபாளையம் கோட்டைமேடு மர்ஹூம் விறகுக்கடை வெள்ளையப்பா இராவுத்தர் (ரஹ்) அவர்களின் மகனார் ஜனாப் காஜா மைதீன் டெய்லர் அவர்கள் 11.09.24 அன்றும்,

திருச்சி காட்டூர் மர்ஹூம் என்.பஷீர் அஹமது (ரஹ்) அவர்களின் அருமைத் துணைவியாரும், ஜனாப் ப.நயினா முஹம்மது, ஜனாப் ப.முஹம்மது ரபீக் சகோதரர்களின் தாயாருமான ஜனாபா எஸ்.நூரரான்பீவி அவர்கள் 18.09.24 அன்றும்,

கரூர் மாவட்டம் பள்ளபட்டி சேமியான் மர்ஹூம் முஹம்மது ஹனீபா (ரஹ்) அவர்களின் அருமைத் துணைவியார் அல்ஹாஜ்ஜா ரஹீம் நிஷா (என்ற) ரைமாத்தாய்க்கா அவர்கள் 25.09.24 அன்றும்,

மதுரை கிருஷ்ணாபுரம் காலனி அபூபக்கர் சித்தீக் (ரளி) பள்ளி வாசலின் மேனாள் பொருளாளரும், பிரியா எலக்ட்ரிகல்ஸின் உரிமையாளரும், ஜனாப் எம்.முஹம்மது ரஃபி அவர்களின் அருமைத் தகப்பனாருமான அல்ஹாஜ் அ.முஹம்மது சாலிஹ் அவர்கள் 27.09.24 அன்றும்,

ஈரோடு பெரிய அக்ரஹாரம் மர்ஹூம் K.M. ஜெய்னுலாப்தீன் (ரஹ்) அவர்களின் மகளாரும், குமாரபாளையம் மர்ஹூம் முஹம்மது ஹனீபா (ரஹ்) அவர்களின் துணைவியாருமான ஜனாபா M. ஜீனத் நிஷா அவர்கள் 30.09.24 அன்றும்,

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பிணாயில்காரர் மர்ஹூம் ஷரீப்(ரஹ்) அவர்களின்சகோதரரும், சென்னை "அல்- அஸ்வத் ஹஜ்- உம்ரா சர்வீஸ்" மவ்லானா அப்துல்லாஹ் காஸிமி ஹஸ்ரத் அவர்களின் மாமனாரும், ஓய்வுபெற்ற சென்னை பொதுப்பணித்துறை இன்ஜினியருமான அல்ஹாஜ் ஷேக் முஹம்மது ஹனீப் அவர்கள் 30.09.24 அன்றும்,

கோயம்புத்தூர் வடவள்ளி ஜனாப் அப்துல் சலீம் - ஜனாபா நூர்ஜஹான் இவர்களின் அருமை மகனார் ஜனாப் அ.தாஜுதீன் அவர்கள் 01.10.24 அன்றும்,

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி அல்ஹாஜ் B.B.பஷீர் அஹமது அவர்களின் அருமைத் தம்பியும், "B.M.S.மாடர்ன் ரைஸ்மில்" உரிமையாளருமான அல்ஹாஜ் B.முஹம்மது சுலைமான் அவர்கள் 16.10.24 அன்றும்,

## வல்ல ரஹ்மானே ! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!

# வாசகர் வட்டம்

அக்டோபர் இதழில் மவ்லானா மு. முஹம்மது ஹைதர் அலீ இம்தாதி எழுதிய "உன்னை நினைத்து" கட்டுரை மிக அருமையாக இருந்தது. துன்பம் ஏற்படும் போது புலம்பாமல் அல்லாஹ்விற்காக மனம் பொறுத்து சகித்துக் கொண்டால் அதற்கான நற்கூலியாக சொர்க்கம் செல்லும் நற்பாக்கியத்தை அல்லாஹ் வழங்குவான் என்பதை தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது. இதை எழுதிய கட்டுரையாளருக்கு என் பாராட்டுக்கள்!

**ஜே.நிலோபர் பானு,**
**சென்னை.**

"ஜும்பை ஜப்பார் ஹள்ரத்" என்று பிரியமாக அழைக்கப் பட்டு வந்த பெரியவர் மௌத் அறிந்து மனம் கனத்தது. காலத் திற்கேற்றவாறு மாதாமாதம் மிகவும் சுருக்கமாகவும், விளக்க மாகவும் பல தலைப்புகளில் கட்டுரைகளை எழுதி வந்தவர். ஹள்ரத் அவர்களுக்காக அதிகமதிகம் துஆ செய்வோம்.

பா.ஜாகிர்ஹுஸைன்.
சேந்தமங்கலம்.




நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலிருந்து வக்ஃபு சொத்துக்கள் எவ்வாறு சீரிய முறையில் பராமரிக்கப்பட்டும், பயன் படுத்தப்பட்டும் வருகின்றன என்பதையும், இன்று இந்திய அரசு அவற்றை எவ்வாறு மோசமான நிலையில் பயன்படுத்திக் கொண்டிருக் கிறது என்பதையும் மவ்லானா செய்யது அலீ மஸ்லஹி ஹள்ரத் அவர்கள் புள்ளி விபரங்களுடன் தந்திருக்கிறார்கள். கட்டுரையாசிரியரின் முயற்சி பாராட்டுக்குரியது.

**முஹம்மது பஷீர், மதுரை.**

குர்ஆனின் குரல் இதழ் மிக அருமையாகவும், பயனுள்ளதாகவும் இருக்கிறது. வல்ல அல்லாஹ் தங்களின் பணிகளையும், ஆற்றலையும் மென் மேலும் சிறக்கச் செய்வானாக!

**ராஜா முஹம்மது, சென்னை.**

"வரலாற்றுப் பேரறிஞர்" செ.திவான் எழுதும் முஹம்மது பின் துக்ளக் தொடரை தொடர்ந்து படித்து வருகிறேன். அற்புதம்! செ.திவானுக்கு தொடருக்கான ஆதாரங்கள் அனைத்தும் எங்கிருந்துதான் கிடைக்கிறதோ!

**ஜே.பிரேமலதா, எம்.ஏ.,**
**நாகர் கோவில்.**

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**

எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001

Touches Your Heart®
Remains Forever ...

PMP TEX INDIA
ESTD 1968

# Ulama®

## LUNGIES * VESTS * BRIEFS

OUR PRODUCTS




Follow us on
ULAMA FASHION


Mfd. by: PMP TEX INDIA
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050, : 81220 14050 : 78450 64050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made In India